கல்கி



KALKI 16.8.1964 30காசு

மனிதனின் பிறப்புரிமையான சுதந்திர உணர்ச்சியால் தூண்டப்பட்ட நம் தலைவர்கள், ஆங்கில ஏகாதிபத்தியத்தின் மேல் மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தி இந்தியாவின் சுதந்திரத்தை 1947ம் ஆண்டு ஆகஸ்டு 15ந் தேதி பெற்றார்கள்.

இதற்கு 40 ஆண்டுகளுக்கு முன்னதாகவே, சென்னையில், தீர்க்கதரிசனமும் நல்லெண்ணமும் கொண்ட நமது ஸ்தாபகர்கள், இந்திய பாங்க் துறையும், பொருளாதாரமும் ஆங்கில பாங்க் துறையுடன் கட்டுண்டிருந்த அவக் கேடான நிலையை உணர்ந்து சீரிய முயற்சியின் பேரில் 1907ம் ஆண்டு ஆகஸ்டு 15ந் தேதி இந்தியன் பாங்க்கை நிறுவினார்கள்.

அன்னாரின் நினைவுக்கு நாங்கள் அஞ்சலி செலுத்துகிறோம்.

இந்தியன் பாங்க் லிட்.

பதிவு அலுவலகம்:

இந்தியன் சேம்பர் பில்டிங், எஸ்ப்ளனேட், சென்னை-1.

சேர்மன்:

டாக்டர் ராஜா ஸர். M. A. முத்தைய செட்டியார், செட்டிநாடு.
B. A., D. Litt., M. L. C.

செக்ரடரி: G. S. சுந்தரம்

ELEGANT



ஒரே ஒரு ஸாரிடான்

'ரோஷ்'

வலிகளையும் நோவுகளையும் போக்கும்!

வலியைப் போக்குகிறது. ஆசுவாசப்படுத்துகிறது. புத்துணர்ச்சி யூட்டுகிறது

உலகப் புகழ் பெற்ற வலி நிவாரணியான ஸாரிடான் துரிதமாக, கெடுதல் எதுவுமின்றி, நிச்சயமாக வலிகளிலிருந்தும் நோவுகளிலிருந்தும் நிவாரணம் அளிக்கிறது. தலைவலி, பல்வலி, உடம்புவலி, ஜுரம் வரும்போலிருப்பது, ஜலதோஷம் இவற்றிலிருந்து நிவாரணம் பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். பெரியவர்களுக்கு ஒரு வில்லை முழு டோஸ்: குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை கொடுக்கலாம்.

'ரோஷ்' தயாரிப்பு

ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் **வால்டாஸ் லிமிடெட்**



ஸாரிடான் ஒரே வில்லை போதும்

ஒரு வில்லை 13 நயா பைசா





பனாமா
இழுக்க இழுக்க
இன்பம்
இறுதிவரை
Panama
20
Specially blended for a cool and pleasant smoke from selected Virginia Tobacco Leaves.
CIGARETTES
பிரத்தியேகத் தயாரிப்பாளர்கள்:
கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட். பம்பாய்.56
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது
Greens' Advg.

விறகும் தீயும்

திருலோகசீதாராம்

காளில் வெயில் மழை
   காலம் பல கண்ட
கட்டை இரண்டினை
   ஏன் கடைந்தாய்?
தேனழல் சிந்திச்
   சிரித்தபின் னேயுயிர்த்
தேசில் கனிந்து
   திளைத்திடத் தான்.

உள்ளம் இரண்டில்
   உறங்கிக் கிடந்திட்ட
உண்மையை ஏனோ
   உசுப்பி விட்டாய்?
கள்ளமில் இன்பம்
   கனிந்திரு கட்டையும்
காதலில் வெந்து
   கரிந்திடத் தான்.

குரோதி ஆவணி 1 ★ ஆகஸ்டு 16

வேலை வாய்ப்பு என்ற மாயவலை	—	11
உணவுப் பிரச்னை	—	13
என்ன சேதி?	—	14
ஜான்ஸிபார்	—	17
நங்கையர் செய்யும் நற்பணிகள்	—	22
தெய்வத் தாய்	—	25
கயல்விழி	—	27
ஆளப்பிறந்தவன்	—	34
பாமினிப் பாவை	—	39
நேதாஜிக்கு ஒரு ...	—	49
அர்ஜெண்ட் ஆபரேஷன்	—	53
வளரும் விஞ்ஞானம்	—	61
சிரிக்கவும் சிந்திக்கவும்	—	63
என்னவோ?	—	66
குண்டுமல்லிகை	—	72
வித்துக்கு வித்து	—	80
பிள்ளை எனும் பிரமை	—	83
எண்ணெய்க் கிண்ணம்	—	88

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


காங்கிரஸ் 'ஜனநாயகம்'
சோஷலிஸம்
PK


காகித ரூபாய்கள்
பெர்மிட் லைசென்ஸ் மனுக்கள்
சோஷலிஸ்ட் சட்டங்கள்
இந்திய சர்க்கார்
"இவைதான் என்
ஜீவாதார உணவு"
PK

மலர் 24 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 3

வேலை வாய்ப்பு என்ற மாயவலை

'ஏட்டு சோஷலிஸத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. காந்திஜி கூறிவந்த உண்மையான சோஷலிஸத்தையே நான் நம்புகிறேன்' என்று ஸ்ரீ குல்ஜாரிலால் நந்தர் அவர்கள் அகமதாபாத்தில் பேசினார். அளவுக்கு மீறி 'கண்ட்ரோல்'கள் விதிப்பதைத் தாம் விரும்பவில்லை என்றும் அவர் தெளிவாக்கியுள்ளார். மத்திய மந்திரி சபையின் முக்கியஸ்தர் ஒருவர் இப்படிப் பேசியிருப்பது மிகவும் விசேஷமாகும். சர்க்கார் சர்வாதிபத்தியம் என்ற கோட்டைச் சுவரில் இதுபோன்ற விரிசல்களைக் காண்பது பதினேழாவது சுதந்திர தின விழாவின்போது வரவேற்க வேண்டிய ஓர் அறிகுறி.

அவ்வப்போது இதுபோன்ற அந்தரங்கசுத்தமான பேச்சுக்கள் வெளியானாலும், பிற்பாடு பழைய கதையேதான் மீண்டும் நடக்கிறது. அவ்வாறு காங்கிரஸ் சோஷலிஸத்தின் மோகன வசியமானது மக்களை மட்டுமின்றித் தலைவர்களையும் மயக்கி இழுத்துவிடுகிறது. காரிய ரீதியில் அதிக சிரமம் எடுத்துக் கொள்ளாமலே மக்கள் நலனுக்குப் பணி புரிவதாகப் பறை சாற்றுவதற்குக் காங்கிரஸ் சோஷலிஸம் மிக எளிதில் பயனாகிறது. எளிதாக வோட்டு வேட்டையாட உதவும் சித்தாந்தத்தை விடுவதற்கு மனம் வராது.

ஆள்கிற கட்சியின் சோஷலிஸக் கொள்கை ஏழை மக்களின் நலன்களைப் பேணுகிறது என்று சொல்வது — தெரிந்து சொன்னாலும் சரி, அறியாமையினால் அப்படிப் பிரசாரம் செய்தாலும் சரி — முழுப் பொய்யாகும். இந்த அசத்தியத்தின்மீதுதான் காங்கிரஸ் சக்தி பெற்றிருக்கிறது. எந்தத் தொழிலைச் சேர்ந்த ஏழை மக்களும் சர்க்கார் சர்வாதிக் கொள்கையின் கீழ் நன்மை பெற முடியாது. சோஷலிஸத்தால் உற்பத்தியே நாசமாவதால் அதன் விளைவான துர்பிட்சத்தால் பணம் படைத்தவர்களைப் போல் ஏழைகளும்தான் துயருற வேண்டும். வரிகள் பெருகுவதால் பணக்காரர் மட்டுமன்றி ஏழைகளும்தான் இன்னல் அடைகிறார்கள்.

ஒரே ஓர் இனத்தில் ஏழைகளின் நலன் காக்கப்படுவதாகத் தோன்றும். அதாவது நந்தர் அவர்கள் கூறும் 'ஏட்டு சோஷலிஸ' ஆட்சியில் புதிது புதிதாகச் சர்க்கார் காரியாலயங்கள் முளைத்துக் கொண்டிருப்பதால் மக்களின் வேலை வாய்ப்புக்கள் பெருகுவதாகத் தோன்றும். வேலைகள் பெருகிப் பலருக்கு ஊதியம் கிடைப்பது உண்மை. ஆனால் இந்த ஊதியம் எங்கிருந்து வருகிறது? சர்க்காரின் இந்தப் புதுச் செலவினத்துக்காக வரிகள் விதித்து மக்களிடமிருந்துதான் அதைப் பெறுகிறார்கள். ஊதியமாக ஒரு பங்கு வழங்கப்படுகிறது என்றால் நடுவே தோன்றும் ஊதாரித்தனங்களுக்காக ஒன்பது பங்காக மக்களிடமிருந்து வரி வசூலிக்கப்படுகிறது. அல்லது காகித நோட்டை அச்சடித்துச் சர்க்கார் காரியாலயங்களை நடத்தியாக வேண்டும். காகித நோட்டு அச்சடிப்பதால் விலைகள் எத்தனையோ மடங்கு உயர்ந்து மக்கள் யாவரும் அவதியுற நேருகிறது. அலகாபாத் சர்வகலாசாலையின் வர்த்தகப் பேராசிரியரும் திட்டக் கமிஷனின் பொருளாதார நிபுணர் குழு அங்கத்தினருமான ஸ்ரீ அகர்வாலா அவர்கள் இன்று ரூபாயின் மதிப்பு பதினேழு பைசாதான் என்று கூறுகிறார் எனில், பணவீக்கம் செய்துள்ள பாதகத்தைப் பற்றி அதிகம் விவரிக்க வேண்டாம். ஒரு கையால் புதிய வேலை வாய்ப்புக்களின் மூலம் நன்மை உண்டாக்குவதுபோல் காட்டும் அதே போதில் மறு

கையால் நேர்முகவரி, மறைமுக வரி, பணவீக்கம் இவற்றின் மூலம், கொடுப்பதற்கு அதிகமாகவே சர்க்கார் பறித்துக் கொள்கிறது. ஒரு ரூபாய் சம்பளமாகவோ கூலியாகவோ பெற்றால் அது 17 பைசாவுக்குத்தான் சமானம்.

புதிதாக நாட்டுச் செல்வங்களைப் பெருக்குகிற தொழில்களன்றி மற்ற இனங்களில் வேலை வாய்ப்புக்களைப் பெருக்கும் சோஷலிஸத்தால் தேசத்துக்கு நன்மை இல்லை; தனி முதலாளிகளைவிடச் சர்க்கார் நல்ல முறையில் தொழில் நடத்திச் செல்வங்களைப் பெருக்கப்போவதென்பது இந்த ஜன்மத்தில் நடக்காத காரியம்; வரவுக்கு அதிகமாகச் செலவு செய்கிற இலாகாக்களும், வரவே இல்லாமல் செலவழிக்கும் இலாகாக்களும்தான் சோஷலிஸத்தில் விருத்தியாகி வருகின்றன. இந்தத் 'திவாலா' நிலைமை என்றென்றும் தொடர முடியாது; தனியார் தொழில் நன்றாக வளர உதவி செய்து, அதில் மக்களுக்குப் புதிய வேலை வாய்ப்புக்கள் கிடைக்க வசதி உண்டாக்குவதுதான் முன்னேற்றும் முறை. தனியார் தொழில் வளர்ந்து புது வேலைகள் பெருகும்போது அதற்காகப் பொதுமக்கள் வரி எதுவும் கொடுக்க வேண்டியதில்லை; தனியார் தொழிலின் கீழ்தான் தொழிலாளர்கள் சர்க்காரின் நியாயமான உதவியுடன் தங்களின் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்திப் பெற முடியும்.

வரவு என்பதே இல்லாமல் செலவு மட்டும் செய்கிற பெரிய துறை ராணுவம்; இப்படிக் கூறுவதால் நாம் ராணுவத்தின் அவசியத்தையோ, ராணுவத்தினரின் பெருமையையோ தாழ்த்திப் பேசுவதாக எண்ணிவிடக் கூடாது; பிறர் உதவியுடன் செய்யக் கூடிய தேசப் பாதுகாப்பை நாம் மட்டுமே தனித்திருந்து தாங்க நினைப்பதால் அநாவசியமாக ராணுவச் செலவு கூடுதலாவதைச் சுட்டிக் காட்டவே விரும்புகிறோம்; அண்டை நாடான பாகிஸ்தானுடன் நட்புக் கொண்டால் இந்த ராணுவச் செலவு எவ்வளவுக்குக் குறையும், அதை ஒட்டி மக்களின் வரிப் பளு எவ்வளவுக்குக் குறையும் என்பதை எண்ணிப் பார்த்தே இதைக் கூறுகிறோம். பிடிவாதக் கொள்கைகள் காரணமாகச் சக்திக்கு மீறிய காரியத்தில் இறங்கி, அதற்காகக் கணிசமான ஊதியத்தில் ஏராளமான மக்களை வேலைக்கு எடுத்துக்கொண்டு, வரிச் சுமையைப் பெருக்கும் அறிவீனத்தை எப்படி ஆதரிப்பது? தனியார் தொழில்களுக்கு உயிரளித்து, தனியார் தொழில்களைப் பெருக்கி இன்று தங்கள் உயிரைப் பணயம் வைத்துப் போராட வந்துள்ள இளைஞர்களை அத்தொழில்களில் ஈடுபடுத்தி அவர்கள் தங்களையும் நாட்டையும் ஒருங்கே வாழ்விக்க உதவுவதே உண்மையான சோஷலிஸம்; அதுவே வேலையின்மைப் பிரச்னையைத் தீர்க்கும் உண்மையான மருந்து.

சர்க்கார் காரியாலயச் செலவினங்களுக்காக மட்டும் வரி போட்டால் போதாது. வரி வசூலிப்பதற்காக நியமிக்கப்படுபவர்களுக்குச் சம்பளம் வழங்க வேண்டும்; அதாவது, வரி வசூலிப்பதற்கென ஏற்படுத்தப்படும் காரியாலயங்கள், வரி ஏய்ப்பவர்களைப் பிடிக்கும் இலாகா இத்யாதிக்குமாகச் சேர்த்து வரி விதித்தாக வேண்டும். புதிய இலாகாக்களின் மூலச் செலவுக்காக வரி உயர்வு, அந்த வரியை வசூலிக்கும் செலவுக்காக மேலும் வரி உயர்வு என்பதாக இரட்டிப்பு மடங்குச் சுமையை மக்கள் தாங்கும் அவல நிலையில்தான், தாங்கள் நாட்டின் வேலை வாய்ப்பைப் பெருக்கியதாகத் தகவல் — வானொலி இலாகாவின் மூலம் பிரகடனப்படுத்திக் கொள்கிறார்கள்.

விதண்டாவாத அந்நியக் கொள்கை காரணமாக ராணுவத்தைப் பெருக்க வேண்டிய அவசியத்தை உண்டாக்கிக் கொண்டுள்ள சர்க்கார், அதையே தங்களுக்கு ஓர் அநுகூலமாக்கிக் கொண்டு, 'ராணுவத்தில் எவ்வளவு ஏழைகளுக்கு உதவி செய்திருக்கிறோம்' என்று கண்ணி வைக்கும்போது ஏமாந்து விடாதீர்கள்; நாலாம் திட்டத்தின் கீழ் சர்க்கார் காரியாலயங்கள் இன்னும் கப்பும் கிளையுமாக வளர இருக்கின்றன; ராணுவச் செலவும் பயங்கரமாகப் பெருக இருக்கிறது என்று இப்போதே எச்சரிக்கிறோம்.

ராணுவத் துறையில் இப்போது தோன்றியுள்ள நல்ல சூசகங்களை அரசாங்கம் பின்பற்ற வேண்டுமென வலியுறுத்துகிறோம். 'இந்தியாவும் பாகிஸ்தானும் நட்பில் இணைந்த அண்டை நாடுகளாக விளங்குவதுதான் இரு நாடுகளும் எதிர்பார்க்க வேண்டிய எதிர்காலம்' என்று பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் அவர்கள் வானொலிப் பேச்சொன்றில் மனம் விட்டுக் கூறியிருக்கிறார். ''நிரந்தரமான தீர்வுக்கு அடிப்படை அம்சமான நல்லெண்ணத்தின் அடையாளத்தை ஜனாதிபதி அயூப்கான் அவர்களின் பேச்சில் காண்கிறோம். எனவே அதற்கு நல்ல வரவேற்பு இருக்கும்'' என்று நம் பிரதமர் ஸ்ரீ லால் பஹாதூர் அவர்களும் அழகாகக் கூறியிருக்கிறார். இதைத் தொடர்ந்து ஆயு

தப் போட்டியில் இந்த ஏழை நாட்டை ஈடுபடுத்திப் பாழ் செய்யாமல் பாகிஸ்தானுடன் நட்புக் காண வழி செய்ய வேண்டும். பாகிஸ்தான் செய்த ஊடுருவல்களைப் பற்றியும், எல்லைப் புறத்தில் ஆங்காங்கு நடக்கும் பூசல்களைப் பற்றியும் ஓயாமல் பிரபலப் படுத்திவரும் நம் நாட்டுப் பத்திரிகைகள் நம்மிரு நாடுகள் நட்புக் காண வேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

வேலை வாய்ப்புப் பெருகுவதற்காக ராணுவமும், சர்க்காரின் இதர நிறுவனங்களும் பெருக வேண்டிய அவசியமில்லை. பரந்து விரிந்த இந்தப் பாரத தேசத்தில் ஆங்காங்கு நம் சக்திக்குகந்த அளவில் தனியார் துறையில் தொழிற்சாலைகள் அமைய ஊக்கமும் வசதியும் தந்தாலே எதிர்கால சந்ததியினருக்கெல்லாம் கௌரவமான தொழில்கள் கிடைக்கப் போதுமான வாய்ப்புண்டாகும்.

மாளாத உணவுப் பிரச்னை

உணவு தானியங்களைப் பற்றிக் கடந்த ஒரு மாதமாக எழுதப்படுவதையும், பேசப்படுவதையும் தொகுத்தால் ஒரு மகா பாரதமாகவே உருப் பெறும். கடைசியில் உணவுப் பிரச்னைக்கு ஒரே காரணம் பதுக்கல்தான் என்ற மகத்தான முடிவுக்கு வந்திருக்கிறார்கள். சிற்சில கடைகளில் புகுந்து பதுக்கிய பொருளை வெளிக் கொணர்ந்து வீர சாகஸம் செய்திருக்கிறார்கள்.

இன்று தானியங்களின் விலை உயர்வுக்குப் பதுக்கலா காரணம்? உணவு தானியம் காய்கறிகளைப்போல் தினசரி உற்பத்தியல்ல. பெருங் கடைகளில் மக்களுக்கு ஆறு மாதம், ஒரு வருஷம் விற்கவேண்டிய சரக்கு இருக்கத்தான் வேண்டும். இது எப்படிப் பதுக்கலாகும்? உற்பத்தி நிலைமை என்ன என்பதை யார் உள்ளபடி எடுத்துச் சொல்கிறார்கள்? நாடு முழுவதும் பெரியதும் சிறியதுமாகப் பல லட்சம் நில உடைமைகளில் விளைச்சலாகும் தானிய உற்பத்தியைப் பற்றி இப்போது சேகரிக்கப்படும் புள்ளி விவரங்கள் முழு உண்மையைச் சொல்லவில்லை.

தேசம் முழுவதிலும் தானியங்கள் பட்டணக்கரைச் சந்தைக்கு வராமல் தலை மறைவாகி யிருப்பதாகச் சொல்கிறார்கள். ஏன் இப்படி நிகழ வேண்டும் என்பதை ஆராயக் காணோம். நாடு முழுவதிலும் உணவுப் பண்டங்கள் பதுக்கப்படுகிறது என்பது உண்மையானால் அதற்குக் காரணம், அறிவற்ற நிலச் சட்டங்களால் உணவு உற்பத்தி எதிர்காலத்தில் பெரிதும் பாதிக்கப் படும் என்று கருதி, சிறு நிலச்சுவான்களும் குத்தகைக் காரர்களும் பண்ணை யாட்களும் தங்கள் தானியத்தைக் கடைக்கு அனுப்பாமல் தாங்களே வைத்துக் கொண்டிருப்பதுதான். தங்கள் தேவைக்குப் போக, சந்தைக்கு நிறைய தானியங்களை வெளியிடக் கூடிய நிலச் சொந்தக்காரர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து உற்பத்தியைப் பெருக்க மனமில்லாமல், வெறுப்பையும் பேதத்தையும் தூண்டி வருகிற காங்கிரஸ் சர்க்காரால் உணவுப் பிரச்னையை ஒரு நாளும் தீர்க்க முடியாது.

தமிழகத்தில் அரிசிக்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இப்போதிருப்பதை விடக் குறைந்த விலைக்கு அரிசி கிடைக்கச் செய்யும் ஓர் ஏற்பாட்டைக் குறை கூறினால் அது தவறாகத்தான் தோன்றும்; காங்கிரஸ் ஆட்சியில் அரிசி விலை குறைந்து விட்டதுகூட 'கல்கி'க்கு ஒரு குறையா என்று கேட்கத் தோன்றும்.

விலையைக் குறைக்க உதவும் நடவடிக்கைகளை வரவேற்கிறோம்: ஆனால் அதே சமயத்தில் விவசாயிகளின்நிலையை எண்ணிப் பார்க்கும்படி வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம்:

நமக்கு உணவு படைக்கும் கிராமப்புற உழவர் பெருமக்களிடம் நகரத்தில் வசிப்பவர்களுக்கும், தொழிற் சங்கங்களின் மூலம் தங்கள் வருமானத்தைப் பற்றி வாதிட வலுப்பெற்றுள்ள தொழிலாளர்களுக்கும் நன்றி நினைவும், அநுதாப உணர்வும் இருத்தல் வேண்டும்: நெல் விளைவிப்பது தவிர விவசாயிக்கு வேறு ஒரு காரியமும் இல்லை என்று நாம் எண்ணக் கூடாது: அவருக்கும் குடும்பம் உள்ளது: சர்க்காரின் பண வீக்கக் கொள்கையால் எல்லா விலைகளும் உயர்ந்திருக்கும் இக்காலத்தில், அவரும் வாழ்க்கை நடத்தியாக வேண்டும். அவருக்கு நியாயமான லாபம் கிடைக்கா விட்டால் மனைவி, குழந்தைகள், கால்நடைகளை வைத்து எப்படிப் பராமரிப்பார்? கலியாணச் செலவுகளுக்கும், இதர செலவுகளுக்கும் ஏழை விவசாயி என்ன செய்வார்? நம் வயிற்றை நிரப்பும் அவர் வீட்டில் விளக்கு எரிய வேண்டாமா?

முதலில் சர்க்கார் தன் தவற்றைத் திருத்திக் கொள்ள வேண்டும்: டம்பாச் சாரித் திட்டங்களை நீக்கிப் பணவீக்கத்தைக் குறைக்கட்டும். அரிசி விலை மட்டுமின்றி எல்லா விலைகளும் மளமள வென்று இறங்கும்: அப்படியும் இறங்கா விடில் 'உற்பத்தியாளர்கள் யாவரும் கொள்ளை லாபக்காரர்கள், வியாபாரிகள் யாவரும் பதுக்கல்காரர்கள்' என்று கூறி விலை நிர்ணயம் செய்யட்டும்.

சர்க்காரின் இன்னொரு பெரும் தவறு நாடு முழுவதும் தானியம் செலாவணியாவதற்கு இடைஞ்சலாக மண்டலக் கட்டுப்பாடுகள் இருப்பதாகும். ஏதோ ஆங்காங்கே கட்டுப்பாட்டைத் தளர்த்துவது போல் செய்தார்கள். இதெல்லாம் போதாது. 'ஏக இந்தியா' என்ற கோஷம் உணவுப் பொருட்கள் விற்பனையில் பூரணமாக அமுலாகி, தானியங்கள் நாடெங்கிலும் தங்கு தடையின்றிச் செலாவணியாக வேண்டும். யாருக்கும் அநியாயம் இழைக்காமல் உணவுப் பண்ட விலைகளைக் குறைக்க இவையே வழி.

என்ன சேதி?

திருப்பதி பஸ், கோவிந்தா!

தேசிய ஐக்கியம் என்ற மகாமந்திரம் உணவு மண்டல விஷயத்தில் மட்டும் செல்லுபடியாக வில்லையே என்று வருத்தப்பட்டோம். உணவு மண்டல விஷயத்தில் மட்டுமின்றி வேறு துறைகளிலும் அது பரவத் தொடங்கிவிட்டது என்பதற்கு அடியிற் காணும் செய்தியே சான்றாகும் :

> சென்னை ஜூலை 30உ
>
> சென்னை ராஜ்ய போக்குவரத்து இலாகாவினால் சென்னைக்கும் திருப்பதிக்கும் இடையே நடத்தப்பட்டு வந்த பஸ் சர்வீசுகளை உடனடியாக நிறுத்தி வைப்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இன்று காலை ஆந்திரப் பிரதேச அரசாங்க அதிகாரிகள் சென்னை ராஜ்ய பஸ்கள் சிலவற்றைத் திருப்பதியில் கைப்பற்றியதே இதற்குக் காரணமாகும். ஆந்திர சர்க்காரின் புதிய உத்தரவு ஒன்றின்படி புதிய சர்சார்ஜுகள் செலுத்தாததாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இதைத் தொடர்ந்து, இந்தப் பஸ் போக்குவரத்தால் எப்போதுமே நஷ்டம் தான் ஏற்பட்டிருக்கிறது என்று கூறி நிறுத்தத்தை நிரந்தரமாக்க இன்னொரு காரணமும் காட்டி விட்டார்கள்!

தேசிய ஐக்கிய கோஷத்துக்கு முரணாக ஒரு சர்க்கார் இன்னொரு சர்க்காரிடம் சர்சார்ஜு வசூலிப்பது ஒருபுற மிருக்கட்டும். இதே போன்ற சர்சார்ஜு தனி முதலாளி யொருவர் மீது விதிக்கப்பட்டிருந்தால் என்ன நேர்ந்திருக்கும்? அவர் சர்சார்ஜைச் செலுத்திய பிற்பாடு தான் ஆட்சேபிக்க முடியும்: அவரது ஆட்சேபனை நியாயமானது என்று முடிவானால் பின்னர் தொகை திருப்பப்பட்டிருக்கும்: ஆனால் சென்னை அரசாங்கமோ சர்சார்ஜைச் செலுத்தாமலே ஆட்சேபித்திருக்கிறது: புது வரிகளை எதிர்க்கும் தனி நபர்கள் இதேபோல் வரி கொடுக்காமல் ஆட்சேபித்தால் சும்மா யிருப்பார்களா?

பாங்குகளில் 'ஒத்துழையாமை'

ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காகப் பல பாங்கு ஊழியர்கள் 'ஒத்துழையாமை' செய்து வருகிறார்கள். அவர்கள் சம்பள உயர்வு கேட்பது பற்றி நமக்கு ஆட்சேபனை இல்லை: ஆனால் 'ஒத்துழையாமை' என்ற பெயரை அவர்கள் உபயோகிப்பதற்குத்தான் ஆட்சேபிக்கிறோம்: 'ஒத்துழையாமை' என்பது தர்மத்தில் நங்கூரம் பாய்ச்சி நிலை நிறுத்திய ஒரு காந்தியக் கொள்கை: குறிப்பிட்ட ஆட்சி ஒருவருக்குப் பிடிக்கவில்லை எனில் அதனுடன் ஒத்துழைக்க மறுத்து விலகி நிற்பதே ஒத்துழையாமை. இதில் அறநெறிக்கு விரோதமாக ஏதுமில்லை. ஆனால் ஒரு ஸ்தாபனத்தில் வேலை ஒத்துக் கொண்டு அதற்குரிய சம்பளம் பெறும்போதே, பணியில் ஈடுபட மறுப்பதை 'ஒத்துழையாமை' என்று பெரிய பெயரிட்டழைப்பது சரியல்ல.

தேர்தல்களில் போட்டியிட்டுச் சட்டசபைகளில் இடம் பெற்று, அதன் பின் பிரிட்டிஷ் சர்க்கார் திட்டங்களை இடைமறிப்பதுகூட அதர்மம் என்று காந்தியடிகள் கருதினர்: எனவே வேலையில் இருந்து கொண்டே வேலை செய்ய மாட்டோம் என்று சொல்பவர்கள் காந்திஜியின் ஆயுதமான 'ஒத்துழையாமை' பற்றிப் பேசுவது எப்படிப் பொருந்தும்? இது தொழிற் சங்கத்தின் ஒரு நூதன உத்தி என்று வேண்டுமானால் பெருமைப்பட்டுக்கொள்ளலாம்.

மேயர் பட்ட அவமானம்

அகில இந்திய மேயர் மகாநாட்டில் கலந்துகொண்டு திரும்பி வந்த சென்னை

கல்கி வெள்ளி விழா பரிசுத் திட்டம்

சிறுகதை - நாவல் போட்டி

கல்கிப் பத்திரிகையின் வெள்ளி விழாவை 1965 ஆகஸ்டில் கொண்டாட உத்தேசித்திருந்தோம் அல்லவா? நமது மதிப்புக்குரிய பெரியோர்களும் வாசக அன்பர்களில் பலரும் வெள்ளி விழாவை இருபத்தைந்தாம் ஆண்டுத் **தொடக்கத்தில்** கொண்டாடுவதை விட, இருபத்தைந்தாண்டு சேவையை **நிறைவு** செய்த பிறகு,— அதாவது 1966ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கொண்டாடுவதே சாலச் சிறந்ததாகும் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின்போதே வெள்ளி விழா சிறுகதை—நாவல் போட்டிகளில் முதல் பரிசு பெற்ற சிறுகதை—நாவல்களை வெளியிடுவது பொருத்தமாக இருக்கும் என்றும் கருதுகிறார்கள். அந்தக் கருத்தை நாம் மகிழ்ச்சியுடன் ஏற்கிறோம். ஆகவே வெள்ளி விழாவை 1966 ஆகஸ்டுக்குத் தள்ளி வைத்து, போட்டியின் முடிவு தேதியையும் ஒரு வருஷத்துக்கு ஒத்தி வைத்திருக்கிறோம். எழுத்தாள அன்பர்களுக்கு இது புதிய நல் வாய்ப்பைத் தரும் என்று நம்புகிறோம்.

போட்டியின் முடிவு தேதி : 31-12-65

மேயர், வடநாட்டில் ஹிந்தி வெறி தலை விரித்தாடும் கோலத்தைத்தான் தமிழக மக்களுக்கு முதற்கண் எடுத்துரைத்திருக்கிறார்: ஹிந்தி தெரியாத சென்னை மேயர், மகாநாட்டு நடப்புக்கள் தமக்கு விளங்கவில்லை என்பதால் ஆங்கிலத்தில் பேசும்படி கேட்டுக்கொண்டும் பிடிவாதமாக ஹிந்தியிலேயே பேசியிருக்கிறார்கள்: சென்னை மேயர் தமிழகத் தலைநகரின் முதல் பிரஜை! அவருக்கே இந்த அவமரியாதை நடந்திருக்கிறது! ஹிந்தியரின் அகம்பாவத்தைச் சென்னை அரசாங்கத்தார் பார்த்தும் பார்க்காதது போல் கண்மூடிக் கொண்டிருப்பது பெரும் தவறாகும்.

பகற்கொள்ளை !

பம்பாய்த் தொழிலாளர் மத்தியக் கூட்டுறவு பண்டகசாலை, ஒரு கிலோ கோதுமை 43 பைசா விதமும் 48 பைசா விதமும் மத்தியப் பிரதேசத்திலிருந்து வாங்கி அதனைக் கிலோ ஒன்று ரூ: 1:34 விதம் விற்றிருக்கிறது. அதாவது தொழிலாளர் நலனுக்காக ஏற்பட்ட கூட்டுறவு சங்கம் 200 சதவிகிதத்துக்கு மேல் லாபம் வைத்து விற்றிருக்கிறது. எந்தத் தனி வியாபாரியேனும் இப்படிக் கொள்ளை லாபமடிக்கத் துணிவாரா?

மேற்கண்ட தகவலைச் சுதந்திரக் கட்சியின் பொதுக் காரியதரிசி ஸ்ரீ எம். ஆர். மஸானி சென்ற வாரம் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் வெளியிட்டார்.

வழிபாட்டுக்கு ஒரு கல்லூரி

நாட்டில் இறைப் பற்று அதிகமாவதற்கும் ஆலய வழிபாட்டு முறையைப்பற்றி விதண்டாவாதங்கள் எழாமலிருப்பதற்கும் அர்ச்சகர்கள் நல்ல விஷய ஞானமுள்ளவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகும். இவ்விஷயத்தில் அறநிலையப் பாதுகாப்புத் துறையினர் கவனம்செலுத்திவருவது மகிழ்ச்சிக்குரிய விஷயம். தற்போது தென் ஆர்க்காடு மாவட்டத்தில் வீரபாண்டியில் இலவசமாக சிவாகமப் பயிற்சி அளிப்பதற்கு ஒரு கல்லூரி தொடங்கப்பட்டிருப்பதை மனமார வரவேற்கிறோம். ஒரு வருடப் பாடத் திட்டம், நான்கு வருடப் பாடத் திட்டம் என இரு பகுதிகள் நடத்தப்படுகின்றன. இலவச போதனை என்பதோடு தபால் மூலம் இக்கல்லூரியில் கல்வி கற்பிக்கப்படுவது மற்றோர் அநுகூலமாகும். அர்ச்சக சமூகம் இப் பயிற்சித் திட்டத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளும் என நம்புகிறோம். விவரங்களுக்கு, **நிர்வாக டைரக்டர், ஆகம சாஸ்திர போதனா முறைக் கல்லூரி, வீரபாண்டி, தெ ஆ. மாவட்டம்** என்ற முகவரிக்கு எழுத வேண்டும்.

elegant
in every line
in
navjivan
SAREES ALL IN 100 X 120
NAVRANG BATIKS
MODERN STYLE BATIKS
BANDHANI & VARIOUS
STYLES IN HAND-WORK
WOVEN SAREES
NAVJIVAN MILLS
RETAIL SHOPS: SUKH SAGAR
HUGHES ROAD, BOMBAY-7
RELIEF ROAD, AHMEDABAD.

லோகசஞ்சாரம்

ஜான்ஸிபார்

மரகதப் பச்சை நிறத்தில் கடல் அந்த அழகிய தீவைச் சூழ்ந்திருக்கிறது. அலைகள் வெண்மையான மணற் பரப்பை மெல்லத் தட்டிக் கொடுத்து விட்டுப் பின் வாங்கி விளையாடுகின்றன. பத்தரை மாற்றுத் தங்கத்தை உருக்கிச் சொரிவது போல பூமத்திய ரேகை ஓடும் அந்தப் பகுதியில் சூரிய ஒளி அனைத்தையும் குளிப்பாட்டிக் கொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள் கடற்கரை ஓரமாக நெடிதுயர்ந்து வளர்ந்து காற்றில் மெல்ல அசைந்தாடிக் கப்பல்களில் போவோரையும் வருவோரையும் வழியனுப்பவும் வரவேற்கவும் செய்கின்றன. இதுதான் ஜான்ஸிபார்.

கடற்கரையையொட்டினாற்போல் பளபளக்கும் வெண்மை நிறத்தில் சுல்தானின் அரண்மனை கம்பீரமாகத் தோற்றமளிக்கும். அதற்குப் பின்னால் சந்துகளும் பொந்துகளும் நிறைந்த நகரம்தான். அராபியக் கதைகளான ஆயிரத்தோரு இரவுகளில் வருவது போன்ற பட்டணமாகத்தான் தோற்றம் அளிக்கும் ஜான்ஸிபார். இதில் ஒரு பொருத்தமும் இருக்கிறது. கிழக்கு ஆப்பிரிக்காவின் பெரும் பகுதி அராபிய சாம்ராஜ்யத்தைச் சேர்ந்ததாக இருந்த காலமும் உண்டு.

இந்து மகாசமுத்திரத்தில் ஆப்பிரிக்கக் கிழக்குக் கரையிலிருந்து இருபத்தி மூன்று மைல் தொலைவில் அமைந்திருக்கும் ஜான்ஸிபார், பெம்பா என்ற இரு பெரிய தீவுகளைத் தவிர தேசப் படத்தில் பார்க்கும் போது சிறு புள்ளிகளாகத் தோன்றும் வேறு பல தீவுகளையும் உள்ளடக்கியது ஜான்ஸிபார் தேசம். ஜான்ஸிபார் தீவின் மேற்குக் கடற்கரையோரமாக அமைந்திருக்கிறது தலைநகரான ஜான்ஸிபார் பட்டணம். ஜான்ஸிபார் தீவு 640 சதுர மைல்களும் பெம்பா 380 சதுர மைல்களும் பரப்பளவுள்ளவை. 1890ம் வருஷத்திலிருந்து பிரிட்டிஷாரின் ஆணைக்கு உட்பட்டு ஒரு சுல்தான் இத்தீவுகளில் ஆட்சி செலுத்தி வந்தார். சமீபத்தில்தான் சுதந்திரம் பெற்றது ஜான்ஸிபார்.

ஜான்ஸிபாருக்கு ஆதிகாலத்திலிருந்து ஸ்வாஹிலி மொழியில் இருந்து வரும் பெயர் உன்குஜா என்பது. அபரிமிதமான விளைச்சல் மிகுந்த பிரதேசம் என்பது இதற்குப் பொருள். இது கொஞ்சமும் மிகைப் படுத்தப்பட்டதல்ல. உண்மையிலேயே எல்லாவிதமான தாவர இனங்களும் ஜான்ஸிபாரில் ஏராளமாய் விளைகின்றன. மக்கள் இவற்றைப் பணமாக்க இலேசாக உடலை அலட்டிக் கொண்டால் போதும்! உதாரணமாக உலகின் தேவைகளில் எண்பது சதவீதம் கிராம்பு ஜான்ஸிபாரிலிருந்துதான் வருகிறது.

நயீரீரீ

கருமே

கொப்பரையும் இதர தென்னை மரப்பொருள்களும் கணக்கின்றி ஏற்றுமதி செய்கிறார்கள். தான்ய வகைகள் தாராளமாய் விளைகின்றன. வாழை, ஆரஞ்சு, எலுமிச்சை, மா, அன்னாசி போன்ற பல ரகப் பழங்களும் உற்



பத்தியாகின்றன. நீர் வளம் நிலவளம் மிகுந்திருப்பதால் இப்பகுதிகளில் வாழும் மக்கள் அதிகமாக உழைக்க வேண்டிய அவசியமே இல்லாதிருக்கிறது. கிராம்பு நட்டு விட்டால் போதும். அது அந்நியச் செலாவணியை வாரி வழங்கப் பேசாமல் காத்திருக்க வேண்டியது தான். ஒரே ஒரு மரம் மோசமான மார்க்கெட் நிலவரத்தில் கூட குறைந்தபட்சம் எண்பது ரூபாயைத் தன் சொந்தக்காரருக்கு வருஷா வருஷம் சம்பாதித்துக் கொடுக்கும்! ஒவ்வொரு மரமும் 70 முதல் 80 வருஷங்கள் வரை பூக்குமாதலால் அதன் உரிமையாளருக்கு ஆயுள் பரியந்தம் கவலை இல்லாத வாழ்க்கைதான்!

ஜான்ஸிபார் தீவுகளில் சுமார் மூன்று லட்சத்துப் பத்தாயிரம் பேர் வாழ்கிறார்கள். இவர்களில் ஆப்பிரிக்கப் பூர்வ குடிகளைத் தவிர பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே இங்கு வந்து குடியேறிய இந்தியர்கள், அராபியர்கள், பாரசீகத்தார் ஆகியோரும் உண்டு. ஆரம்ப காலத்தில் இத்தீவுகளை ஆக்கிரமித்து ஆண்டவர்கள் அராபியர். ஆப்பிரிக்கக் குடிமக்களுடன் பல்லாண்டுகளாகவே நெருங்கிப் பழகித் தங்களுக்குள் திருமணங்களும் நடத்திக் கொண்டதால் இங்கு இன்று பெரும்பான்மையான ஆப்பிரிக்கர்களையும் அராபியர்களையும் பிரித்துக் காண முடியாதபடி ஒன்றிவிட்டிருக்கின்றனர். சுல்தான் அப்துல்லா அராபியர் என்றாலும் ஆப்பிரிக்க ரத்தமும் அவர் உடலில் ஓடுகிறது. தேசிய மொழியாகிய ஸ்வாஹிலி ஆப்பிரிக்க மொழிதான் என்றாலும் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு வார்த்தைகள் அராபியச் சொற்கள்தான்.

ஜான்ஸிபாரின் சரித்திரம் காற்றினால் எழுதப்பட்டது என்று சொல்வதுண்டு. தென் மேற்குப் பருவக்காற்றும் வடகிழக்குப் பருவக் காற்றும் மாறி மாறி வீசி மழை பொழியச் செய்து விளைச்சலைப் பெருக்குவதுடன் கடந்த இரண்டாயிரம் வருஷங்களாக இந்தியர்களும் அராபியர்களும் பாரசீகத்தாரும் பாய்மரக் கப்பல்களில் ஜான்ஸிபாருக்கு வந்து வியாபாரம் செய்யவும் உதவி விருக்கிறது. பழங்கள், கிராம்பு ஆகிய விளை பொருள்களைத் தவிர, ஜான்ஸிபார் தந்த வியாபாரத்துக்கும் பெயர் போனது. காங்கோ, ரொடீஷியா முதலிய ஆப்பிரிக்கப் பிரதேசங்களிலிருந்து ஜான்ஸிபாருக்கு வரும் யானைத் தந்தங்களைத் தந்த வேலை நிபுணர்கள் வெட்டி மெருகேற்றிப் பளபளக்கச் செய்து கப்பலில் ஏற்றுகிறார்கள். காண்டா மிருகத்தின் கொம்புகளும் யானைத் தந்தங்களைப் போலவே ஏராளமாய்த் தருவிக்கப்பட்டு ஏற்றுமதியாகின்றன.

பொதுவாகவே கிழக்கு ஆப்பிரிக்காவில் இந்திய வியாபாரிகள் அதிகம். உதாரணமாகக் கென்யா, யுகாண்டா, டாங்கனீகா ஆகிய பகுதிகளில் மிகப் பெரிய வியாபாரம் நடத்துபவர் ஓர் ஆப்பிரிக்கரோ அல்லது பிரிட்டிஷ் பிரஜையோ அல்ல. மத்வானி சகோதரர்கள் என்ற குஜராத்தியர்தாம்.

பதினைந்து கோடி ரூபாய் பெறுமானமுள்ள பதினெட்டுக் கம்பெனிகள் இவர்களுக்குச் சொந்தமாயிருக்கின்றன. 1905ல் இவர்களது தகப்பனார் யுகாண்டாவுக்கு வந்து ஆரம்பித்த உப்பு வியாபாரம்தான் இத்துணை பெரிதாக வளர்ந்திருக்கிறது. இப்படி பிரும்மாண்டமான கம்பெனிகளில் ஆரம்பித்துச் சின்னஞ் சிறிய பெட்டிக் கடைகள் வரை பலரகப்பட்ட வியாபாரங்களை இந்தியர்கள் நடத்துகின்றனர். இவர்களில் ஜான்ஸிபாரில் வசிப்போர் ஏராளம். பெரும்பான்மையோர் கிராம்பு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஜான்ஸிபாருக்கு பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து சென்ற வருஷ இறுதியில் சுதந்திரம் கிடைத்தது. சுல்தான் அப்துல்லா இதன் அரசராக முடிசூட்டிக் கொண்டார்.

உடனேயே ஆப்பிரிக்க அரசியல்வாதி ஒருவர் இந்த அரசாங்கம் மூன்று நாட்களுக்கு நிலைக்கும் என்று ஜோஸ்யம் கூறினார். அவர் கணக்குக் கொஞ்சம்தான் பிசகியது. ஒரு மாதமும் மூன்று நாட்களும்தான் ஆயின புரட்சி உருவாக. இவ்வருஷம் ஜனவரி மாதம் பன்னிரண்டாம் தேதி ஆப்பிரிக்கர்கள் இரண்டரை நூற்றாண்டுகளாக இத்தீவுகளை ஆண்டு வந்த அராபியர்களுக்கு எதிராக வெகுண்டு எழுந்தனர். கென்யாவில் பிறந்தவனான ஜான் ஒக்கெல்லோ என்ற ராணுவத் தளபதி அறுநூறு ஆப்பிரிக்க ராணுவத்தினரை உடன் அழைத்துக் கொண்டு பயங்கரமான அராஜகச் செயல்களில் இறங்கினான்.

அமைதியும் சந்தோஷமும் நிறைந்திருந்த ஜான்ஸிபாரில் பலர் ரத்தத்தில் குளித்தனர்; மரண ஓலமும் வெற்றி வெறிக் கூக்குரலும் கலந்து கேட்டன. சுல்தான் தப்பி ஓடி விட்டார் என்றாலும் இந்தியர்களும் அராபியர்களுமாய்ச் சுமார் மூவாயிரம் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். ஏராளமானவர்கள் சிறை வைக்கப்பட்டனர். ஜான்ஸிபார் குடியரசின் ஜனாதிபதியாகக் கருமே தன்னைப் பிரகடனப் படுத்திக் கொண்டார். சீனா, கியூபா போன்ற கம்யூனிஸ்டு நாடுகளின் தூண்டுதலின் பேரில் நடந்த புரட்சியாக இருக்குமோ என்று அரசியல் நிபுணர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். புரட்சி நடைபெற்ற விதமும், அராபியரை அடியோடு நசுக்கப் புதிய அரசாங்கம் மேற்கொண்ட நிலப் பறிமுதல் போன்ற நடவடிக்கைகளும் கம்யூனிஸப் பாணியிலேயே தான் அமைந்திருந்தன. ஜான்ஸிபாரில் வாழும் ஆயிரக்கணக்கான இந்தியர்களின் நலனைக் கருதி இந்திய அரசாங்கம் புதிய அரசாங்கத்தைச் சீக்கிரமே அங்கீகாரம் செய்து சுமுகமான உறவுகளை வளர்த்துக் கொள்ள முற்பட்டது. பிரிட்டிஷ் அமெரிக்க அரசாங்கங்களும் முதலில் ஜான்ஸிபாரில் இருந்த தங்கள் பிரதிநிதிகள் நாடு கடத்த



அருணகிரி விலாஸ்
சீயக்காய் பவுடர்

உங்கள் கேசத்தை அழகுபடுத்த நிரூபணமான பாமாலிவ் வழி



பாமாலிவ் பெர்ஃப்யூம்டு கோகோனட் ஹேர் ஆயில்...

உங்கள் கேசத்திற்கு போஷாக்கு அளிக்கிறது. பாமாலிவ் உபயோகிப்பதால் நீண்ட, செழிப்பான கேசம் இயற்கையாக வளருகிறது. ரோஜா, லவண்டர் அல்லது மல்லிகை—இம்மூன்று வசீகரிக்கும் சுகந்தங்களில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.



பாமாலிவ் கோகோனட் ஆயில் ஷாம்பு...

உயர்தரமான தேங்காய் எண்ணெய்யுடன் தனிப்பட்டு தயாரிக்கப்பட்ட பிரசித்தி பெற்ற கலவை. இது அழுக்கு நீக்கம் செய்யும் ஷாம்பு என்பதுடன், ஒரு கூந்தல் அழகு சாதனமும் ஆகும். பாமாலிவ்வின் செழிப்பான நுரை கூந்தலுக்கு ஊட்டத்தைக் கொடுப்பதுடன் உங்கள் தலையையும் கூந்தலையும் தூய்தாக்கி பரிமள புத்துயிரூட்டுவதனால், புதிய ஆரோக்கியமான கேச வளர்ச்சி ஏற்படுகிறது.

நவநாகரீக இந்தியப் பெண்டிர் கூந்தல் அழகிற்கு விரும்பியெடுப்பது பாமாலிவ்

PCO-S.G.I.TAM.

பட்டதால் கோபமுற்ற போதிலும், பின்னர் பெரும்பான்மையான மக்கள் விரும்பி ஏற்ற தலைமையை அலட்சியப்படுத்த முடியாதென்பதால் புதிய குடியரசை ஒப்புக் கொண்டனர். இதற்கிடையில் ஜனாதிபதி கருமே ரிக்ஷாக்களைச் சேர்த்து வைத்துக் கொளுத்தியும் ஒக்கெல்லோவை நாடு கடத்தியும் நல்ல பெயர் சம்பாதித்துக் கொண்டார். ஆட்சியைக் கைப்பற்றத் தேவைப்பட்ட ஒக்கெல்லோ இப்போது சுமையாகவும் குடியரசுக்கே ஓர் இழுக்காகவும் இருந்தானே!

வெறிச் செயல்களில் ஈடுபட்ட ஒக்கெல்லோவை நைரோபியில் பத்திரிகைப் பிரதிநிதிகள் சந்தித்த போது அவன் பயத்துடன் அழுதே விட்டான். ஒரே மனிதன் அதிகார பலத்தால் துணிந்து அக்கிரமங்களில் ஈடுபடுவதையும் அதிகாரம் இழந்ததும் கோழையாக மாறுவதையும் ஒக்கெல்லோவின் வாழ்க்கை எடுத்துக் காட்டியது.

புரட்சி காரணமாகப் பல இந்திய வியாபாரிகள் தங்கள் சொத்துக்களை யெல்லாம் இழந்து தாய்நாடு திரும்ப நேர்ந்தது. ஜான்ஸிபார் புரட்சி நடந்து எட்டு நாட்களுக்கெல்லாம் அண்டை நாடான டாங்கனீகாவிலும் ராணுவப் புரட்சி ஏற்பட்டது.

டாங்கனீகா ஜனாதிபதி நயீரீரி ஆப்பிரிக்கத் தலைவர்கள் பலருள் புத்தி சாதுரியமிக்கவர் என்று பெயரெடுத்தவர். தமது மக்களுக்குச் 'சுதந்திரமும் உழைப்பும்' என்ற மகா மந்திரத்தைப் போதித்தவர். 1961ல் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று 1962ல் டாங்கனீகா குடியரசாகத் திகழ்ந்த சமயம் மொத்தம் போடப்பட்ட வோட்டுகளில் 98 சதவீதம் பெற்று ஜனாதிபதியானவர் நயீரீரி. அரசாங்க உத்தியோகங்களிலும் பிறவற்றிலும் ஆப்பிரிக்கர்களுக்கென்று தனிச் சலுகை காட்டப்படுவது தவறு என்றும், டாங்கனீகா பிரஜைகளான எல்லா இனத்தவரையும் சமமாகப் பாவிக்க வேண்டும் என்றும் அவர் பரந்த மனப்பான்மையோடு கூறிய போதுதான் ராணுவத்தினர் புரட்சி செய்யத் துணிந்தார்கள். நயீரீரி உடனே பிரிட்டிஷ் துருப்புக்களை உதவிக்கு அழைத்து கலகத்தை அடக்கிச் சமரசம் செய்து கொண்டார்.

இதன் பிறகு ஏப்ரல் மாத இறுதியில் ஜான்ஸிபாரும் டாங்கனீகாவும் ஒரே நாடாக இணைந்து டாங்கனீகா — ஜான்ஸிபார் ஐக்கியக் குடியரசு என்ற பெயரில் விளங்குகிறது. இதன் ஜனாதிபதியாக நயீரீரியும் உப ஜனாதிபதியாக கருமேயும் பதவி ஏற்றனர். இந்த இணைப்பு ஜான்ஸிபாரைக் கம்யூனிஸப் படுகுழியில் சரிவதைத் தடுத்து நிறுத்துமென்றும் ஜான்ஸிபாரின் சீர்குலைந்த பொருளாதாரம் ஸ்திரப்பட உதவும் என்றும் இனி அங்கு முன்போல் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவுமென்றும் உலகம் எதிர்பார்க்கிறது.

திரைத் துணுக்குகள்

ஒன்று சேர்த்தால்.....

கீழ்க்காணும் தமிழ்ப் படங்களை மூன்று மூன்றாகச் சேர்த்துப் பொருளுள்ள வாக்கியங்களாக மாற்ற முடிகிறதா, பாருங்கள்.

1. அடுத்த வீட்டுப் பெண்; 2. இல்லறமே நல்லறம்; 3. எல்லாம் உனக்காக; 4. கலியாணம் செய்துக்கோ; 5. கல்யாணியின் கணவன்; 6. தாய் சொல்லைத் தட்டாதே. 7. கைராசி; 8. படிக்காத மேதை; 9. சாரதா; 10. டாக்டர் சாவித்திரி; 11. பார் மகளே பார்; 12. தேவதாஸ்; 13. போலீஸ்காரன் மகள்; 14. பைத்தியக்காரன்; 15. மாமியார் மெச்சிய மருமகள்; 16. முதலாளி; 17. மோகனசுந்தரம்; 18. விளையாட்டுப் பொம்மை.

விடை: 1. அடுத்த வீட்டுப் பெண் சாரதா மாமியார் மெச்சிய மருமகள். 2. பார் மகளே பார் விளையாட்டுப் பொம்மை எல்லாம் உனக்காக. 3. தாய் சொல்லைத் தட்டாதே கலியாணம் செய்துக்கோ இல்லறமே நல்லறம். 4. கைராசி டாக்டர் சாவித்திரி போலீஸ்காரன் மகள். 5. முதலாளி மோகன சுந்தரம் படிக்காத மேதை. 6. கல்யாணியின் கணவன் தேவதாஸ் பைத்தியக்காரன்.

—எஸ். என். கே. ராஜன்

விசித்திர நடிகை

சினிமாவில் நடிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள் ஜெர்மானிய அழகி பெட்ராகிராஸ். ஆனால் அதற்கு வழி ஏற்படவில்லை. புத்தகங்களை விற்று ஜீவனம் நடத்தி வந்தாள். திடீரென்று ஒரு நாள் இவள் ஏதோ ஒரு மனக் குறை காரணமாக மூன்றாவது மாடியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொள்ள முற்பட்டு விட்டாள். அம் முயற்சியில் தன் கால்களையும் இழந்தாள். அதன் பிறகு இவளுக்கு அடித்தது யோகம்! சினிமாவில் மட்டுமல்ல, டெலிவிஷனிலும் நடிக்க ஏராளமான ஒப்பந்தங்களாயின! சக்கர வண்டியில் உட்கார்ந்தபடியே இவள் வில்லியின் பாகத்தை ஏற்று 'அனே' என்ற படத்தில் நடித்தாள். இன்று சினிமா பட விமர்சகர் ஒருவரின் மனைவியாக சந்தோஷமாக வாழ்க்கை நடத்தும் பெட்ராகிராஸ் தான் தற்கொலை செய்து கொள்ள முயன்றதற்கான காரணத்தைக் கூறக் கண்டிப்பாய் மறுக்கிறாள்!

நங்கைய செய்யும் நற்பணிக

சங்க அங்கத்தினர்கள்

ஸிக்ஞேனில் 1923ம் வருஷம் 'பெண்களுக்கு வோட்டுரிமை வேண்டுமா, வேண்டாமா?' என்பதைப் பற்றிப் பலத்த விவாதம் நடக்கவிருந்தது. மாதர்கள் சேவையில் ஈடுபட்ட ஸ்ரீமதி மார்கரெட் கஸின்ஸும் ஸ்ரீமதி சாக்கும் டோங்காவில் சென்று இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பெண்மணிகள் பக்கம் வாதிடப் பல மாதர்களை வருந்தி வருந்தி அழைத்து வந்தனர். விவாதம் தொடங்கிய போது மாதர்கள் சார்பில் பேச நாற்பது பெண்மணிகளுக்கு மேல் குழுமியிருந்தனர். என்ன அதிசயம்! இத்தனை சிரமப்பட்டு ஒரு பெண் படையைச் சேர்க்க வேண்டிய அவசியமில்லாமல் செய்து விட்டனர், அன்று விவாதத்தில் பேசிய இருபது மேல்சபை அங்கத்தினர்களும். அவர்களே பெண்களின் உரிமைகளுக்குச் சாதகமாகப் பேசித் தீர்த்துவிட்டனர். ஓர் எதிர்ப்பு வாதமேனும் எழ வேண்டுமே? அவர்கள் பேச்சு முழுதும் பழங்கால, தற்காலத்திய, வருங்காலப் பெண்மணிகளின் சிறப்பைப் பற்றியதாகவே அமைந்திருந்தது. இந்த அதிசய அனுபவம் ஸ்ரீமதி கஸின்ஸுக்கு அளவற்ற வியப்பை அளித்தது. அயர்லாந்து நாட்டில் பெண்கள் உரிமைக்காக அவர் கடுமையான சிறைத் தண்டனையையல்லவா அனுபவிக்க வேண்டியிருந்தது ?

நம் இந்திய நாட்டில் ஆதி காலத்திலிருந்தே மாதர்களைத் தெய்வாம்சமாகவே போற்றி வந்திருக்கிறோம். மாதர்களுக்கு உரிய உரிமைகளை வழங்குவதில் பின்வாங்குவோமா ?

முதன் முதலில் அகில இந்தியாவில் உள்ள மாதர்கள் 1926ம் வருஷம் பூனாவில் மகாராணி சிம்னாபாய் தலைமையில் ஒன்று கூடிப் பெண்கள் நலனுக்கான வழி வகைகளை ஆராய்ந்தார்கள். இதற்குப் பிறகு அங்கங்கே மாதர் சங்கங்கள் வளர்ந்தெழத் தொடங்கின. சென்னையில் சகோதரி சுப்புலக்ஷ்மி அம்மாளும், ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டியும் மாதர் நலனுக்கான சங்கங்களை நிறுவுவதில் முனைந்தனர்.

சென்னையில் புதிதாக எழுந்த மந்தைவெளிப்பாக்கம் பேட்டையில் மாதர் சங்கம் இல்லாத குறையிருந்தது. பெண்மணிகள் ஒருவருக்கொருவர் சந்தித்துக் கொள்ளவும், அளவளாவவும், பொழுது போக்கவும் ஒரு சங்கம் தேவை என்பதை உணர்ந்து அந்தப் பேட்டையில் உள்ள உற்சாகமுள்ள பெண்மணிகள் சேர்ந்து 1960ம் வருஷம் செப்டம்பர் மாதம் மந்தைவெளிப்பாக்கம் மாதர் சங்கத்தைத் தொடங்கினார்கள். ஆரம்பத்திலேயே நாற்பத்திரண்டு அங்கத்தினர்களுடன் தொடங்கிய இந்தச் சங்கத்தை ஸ்ரீமதி வசுமதி ராமசாமி அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். இந்தச் சங்கத்தின் தோற்றுவாய்க்குக் காரணமாக இருந்தவர்களுள் முக்கியமானவரான ஸ்ரீமதி மைதிலி கிருஷ்ணசாமி இதன் காரியதரிசியாகப் பணியாற்றத் தொடங்கினார். இந்தச் சங்கத்தின் தலைவி ஸ்ரீமதி மீனு முத்தையா.

மாதர் சங்கமென்றால் ஒருவருக்கொருவர் தத்தம் பெருமையைப் பறைசாற்றிக் கொள்ளத்தான் கூடுவார்கள் என்று கேலி செய்வதுண்டு. ஆனால் இந்த மந்தவெளிப்பாக்கம் மாதர் சங்கத்தினர் அருகிலுள்ள சேரி மக்களின் குறைகளை அறிந்து தீர்ப்பதில் அளவற்ற கவனம் செலுத்துகிறார்கள். அன்னமிடும் திருக் கைகள் சேர்ந்து இந்தச் சங்கத்தில் பணியாற்றுவதால் ஏழை எளியவர்களுக்கு அடிக்கடி அன்னதானம் நடப்பதில் அதிசயமில்லை.

மந்தைவெளிப்பாக்கம் மாதர் சங்கத்தின் நற்பணிகளைத் தெரிந்து கொள்ளும் ஆவலுடன் அந்தச் சங்கத்திலைச் சென்று கண்டோம்.

''என்னால் எழுந்து நடக்க முடியாது. பிளட் பிரஷர். தினத்துக்கு ஓர் ஊசி'' என்று இங்கு யாரும் பெருமைப்பட்டுக் கொள்வதாகத் தெரியவில்லை. வியாதியே பெண்களை அணுகாமலிருக்க விளையாட்டுக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள் இந்தச் சங்கத்தினர்.

பல பெண்மணிகள் டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்தார்கள். மற்றொரு பக்கம் டேபிள் டென்னிஸ் ஆட்டம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. சின்னஞ்சிறு குழந்தைகள் குதித்துக் கும்மாளமடித்துக் கொண்டிருந்தன. இங்குள்ள மாதர்கள் தங்கள் கணவர்கள் தலையில் குழந்தைகளைக் கட்டி விட்டுத் தாங்கள் மாத்திரம் மாதர்

டேபிள் டென்னிஸ் ஆட்டத்தைத் துவக்கி வைக்கிறார் ஸ்ரீமதி பத்மினி

சங்கத்துக்கு வரும் பழக்கத்தைக் கைக்கொள் வதில்லை போலும்! இல்லாவிட்டால் வீட்டில் கணவர்கள் ஆயிரம் கூத்தாடி, விளையாட்டுக் காட்டிக் குழந்தைகளைச் சமாதானப்படுத்துவ தற்குள் தாவு தீர்ந்து விடுமே?

இது தவிர வேறு பணிகளைத் தெரிந்து கொள்ளும் நோக்கத்துடன் காரியதரிசி ஸ்ரீமதி மைதிலி கிருஷ்ணசாமியை அணுகினோம்.

''நாங்கள் சங்கம் ஆரம்பித்து நான்கு வருஷங்கள்தான் ஆகிறது. இப்பொழுது 89 அங்கத்தினர்களுக்கு மேல் இச்சங்கத்தில் இருக் கிறார்கள். பெண்கள் வீணுகப் பொழுதைப் போக்கக் கூடாதல்லவா? அவர்களுக்கு இங்கே நூலகங்களும், தையல் வகுப்பும், வீணை வகுப்பும் நடத்துகிறோம். இவை தவிரப் பெண்மணிகள் பொழுது போக்க வசதிகள் செய்து தந்திருக்கிறோம். குழந் தைகள் நூலகமும் அவர்கள் விளையாட வசதி யும் இங்கே உண்டு!'' என்று அடுக்கிக்கொண்டு போனார் ஸ்ரீமதி மைதிலி கிருஷ்ணசாமி.



''இவை தவிர வேறு குறிப்பிடத்தக்க விசே ஷங்கள் உண்டா?''

''நம் இந்தியப் பண்பு பக்தியோடு கலந்து வந் ததல்லவா? விசேஷ தினங்களில் உபன்யா சங்களுக்கு ஏற்பாடு செய்கிறோம். ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அம்பாள் மகிமையை யும் ராமகிருஷ்ண மடம் அண்ணா அவர்கள் 'கார்த்திகை தீபத்'தின் சிறப்பையும் எங்களுக் குக் கூறினார்கள்.''

''அப்படியா? நவீன நாகரிகத்தில் நீங்கள் நம் பூர்வீக தர்மத்தை மறந்துவிடவில்லை!''

''ஆமாம்! நவீன காலத்தையும் நாங்கள் மறக்கவில்லை. நாங்கள் நாடகத் துறையிலும் கவனம் செலுத்துகிறோம். நடிகர் பட்டுவின் 'அபாய அறிவிப்பு' என்னும் நாடகத்தை எங்கள் சங்கத்தில் உள்ள மாதர்களே நடித்து நற்பெயர் வாங்கியிருக்கிறார்கள். விவசாய இலாகா சென்னை நகரில் 'காய் கறி செழிக்க', வீடுக ளில் பயிராக்குப வர்களுக்கு ஒரு பரிசு வைத்திருந்தது. இந்தப் போட்டியில் எங்கள் சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி சௌந்தரம் சங்கரன் முதல் பரிசைப் பெற்றது எங்கள் சங்கத்துக்குப் பெருமை. நாங்கள் 'வாய்ச் சொல் வீராங்கனைகள்' அல்ல, செயலாற்றும் திற மையையும் படைத்தவர்கள் என்பது நிரூ பணமாகி விட்டதல்லவா?''

கவர்னர் மேதிக்குப் பூச்செண்டு பரிசு

மந்தைவெளிப் பாக்கம் மாதர் சங்கத்துக்குச் சென்னை வீட்டு வசதி போர்டு மாதம் மூன்று ரூபாய் வாடகையில் ஒரு கட்ட டத்தை வழங்கி இச்சங்கம் செவ்வனே செயலாற்ற வசதி செய்திருக்கிறது. இந் திய மாதர் சங்கத்தின் ஒரு கிளையாக உள்ள இதன் காரியதரிசி நாங்கள் விடை பெற்ற பொழுது தெரிவித் தார்: ''நாங்கள் செய்தது கடுகளவு; நாங்கள் செய்ய வேண்டிய நற்பணிகள் மலையளவு இருக்கின்றன.'' — **காமு**

தெய்வத்தாய்

எம். ஜி. ஆரும், அசோகனும் நடித்திருக்கிறார்கள் என்றால் அடி, உதை, குத்துகளுக்குப் பஞ்சம் இராதென்று தீர்மானித்துக் கொள்ளலாம். போதாக் குறைக்கு எம். என். நம்பியார் வேறு நடிக்கிறார். சண்டைக்குக் கேட்க வேண்டுமா? வழக்கம் போல் ஸி. ஐ. டி. இன்ஸ்பெக்டராக வரும் எம். ஜி. ஆருக்கு அசோகன் தந்தையாக வருகிறார்.

தந்தைக்கும் மகனுக்கும் எப்படி அடிதடிச் சண்டையை ஏற்படுத்த முடியும் என்றுதானே யோசிக்கிறீர்கள்? அதற்காகத்தானே தந்தையையும் மகனையும் சின்ன வயசிலேயே பிரித்து விட்டனர்! அது மட்டுமா? சூதாடியான தந்தை ஒரு கொலை செய்து விட்டுத் தப்பியோடிக் கொள்ளைக் கூட்டத்தினரோடு சேர்ந்து விடுகிறான். இறுதியில் தன் தந்தைதான் கொள்ளைக் கூட்டத்தினரின் தலைவன் என்று தெரிய வந்ததும் மகன் வேதனைப்பட்டு அந்த உண்மைகளை யெல்லாம் தாயிடம் கேட்டு அறியத் துடித்த போது அவள் இறந்து தெய்வத் தாயாகி விடுகிறாள். மர்மமும், சோகமும், சண்டையும் மாத்திரம் படத்தை முடித்து விட முடியுமா? அதைச் சரிக்கட்டத்தான் சரோஜாதேவி இருக்கிறாரே!

(கணவனின் கொலைக் குற்றத்தை மறைப்பதுதான் தெய்வத் தாயின் கடமையா என்று கேட்டுக் குழம்பாதீர்கள். படத்தில் புதுமையாக இருப்பதே அது ஒன்றுதான்!)

எம். ஜி. ஆர். வழக்கமான சண்டைக் காட்சிகளில் ஜோராய் நடிப்பதோடு கண்ணீர் வடித்துச் சோகமாகவும் நடிக்கிறார்.

சரோஜாதேவி கவர்ச்சி உடையில் தோன்றிக் 'கணீர் கணீர்' என்று பேசுகிறார்.

அசோகன் அருமையாக நடித்திருக்கிறார்; நல்லவனாக மாற விரும்பிப் பண்டரிபாயிடம் கண்ணீருக்கிடையில் உருக்கத்தோடு வேண்டிக் கொள்ளும் கட்டம் ஒன்று போதும்.

பண்டரிபாய்தான் தெய்வத் தாய். படத்தின் தலைப்புக்குத் தலை கொடுக்கும் பாத்திரம்! நன்றாய் நடித்திருக்கிறார். எத்தனையோ படங்களில் அருமையாக நடித்து அநுபவப்பட்டவராயிற்றே !

பாட்டு வாத்தியாராக வரும் நாகேஷுக்குக் கச்சேரிக்கு 'சான்ஸ்' கிடைக்காவிட்டாலும் தமாஷ் பண்ண நிறைய 'சான்ஸ்' கிடைக்கிறது. அவரைக் கொன்றுவிடப் போவதாகப் பயமுறுத்தல் கடிதம் வந்ததும் அவர் நடுங்கின நடுக்கம் பிரமாதம்!

ரெஸ் நிரம்பிய கண்ணாடித் தம்ளரில் மாறனை ஆடவிட்டு அதை மேகலையின் கற்பனைக் காட்சியாகக் காட்டியிருப்பது மிகவும் நன்றாயிருக்கிறது. சரோஜா தேவி ''குளிருதா?'' என்று கேட்பது குளிர்ச்சியாயிருக்கிறது. ஆனால் இதே மாதிரிக் காட்சி ஏற்கெனவே ஒரு ஹிந்திப் படத்தில் வந்ததுதான்.

நானுபாய் பட்டின் மூலக் கதைக்கு 'மெழுகு வர்த்தி' புகழ் கே. பாலசந்தர் அழகாக வசனம் எழுதியிருக்கிறார்.

''மூன்றெழுத்தில் முடிச்சிருக்கும்'', ''ஒரு பெண்ணைப் பார்த்து நிலவைப் பார்த்தேன்'', ''இந்தப் புன்னகை என்ன விலை...'' என்ற பாடல்கள் இனிமையாயிருக்கின்றன.

பிரபல நட்சத்திரங்களைப் போட்டுக் குறுகிய காலத்தில் தயாரித்து வெளியிடப்பட்டிருக்கும் ''தெய்வத் தாய்'' சத்தியா மூவீஸாரின் வெற்றிப் படம்தான்! — கார்த்தன்

குடும்பத்திற்
கேற்ற
இணையற்ற
சோப்

மார்கோ சோப்

மாதர் மற்றும் குழந்தைகளின் மிருதுவான சருமத்திற்குப் பாதுகாப்பு அளிக்கும் ஹானியற்ற மிருதுவான சோப். துர்க்கந்தம் நீக்கப்பெற்ற வேப்பெண்ணெயிலிருந்து தயாரிக்கப்பட்டு, வாசனையுள்ளதால், சுகாதாரத்திற்கு ஏற்றது. சருமத்தில் மாசுகளின்றி சுத்தமாக வைத்திருக்கும்.

தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிடெட் கல்கத்தா-29

தென்னிந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை-1

'சரியானபடி' வறுப்பதால்தான்

மணமுள்ளதாக இருக்கிறது

போல்ஸன்ஸ் காபி

திருப்தியளிப்பதற்கென வறுக்கப்பட்டது

பரிசுக் கூப்பன்களைச் சேகரியுங்கள்:

ஒவ்வொரு வீட்டிலும் வெண்ணெய், நெய், மாவு மற்றும் தேயிலைக்குப் போல்ஸன் பெயர்பெற்றது.

போல்ஸன் லிமிடெட் – பம்பாய் • ஆனந்த் • பாட்னா

PL 1157 A TAM EA

கயல்விழி
இரண்டாம் பாகம்
வெற்றித் திருமகள்
அகிலன்

பூர்வ கதை

சோழ சாம்ராஜ்யத்தின் மேலாட்சியின் கீழ் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாகப் பாண்டிய நாடு அடிமைப் பட்டுச் சிற்றரசாகி யிருந்த காலம் அது. அப்போது பாண்டிய மண்டலத்தைக் குலசேகரப் பாண்டியர் ஆட்சி செய்து வருகிறார். அவருடைய தம்பியான இளவரசன் சுந்தர பாண்டியனின் அறிவாற்றலிலும் வீரத்திலும் பாண்டியருக்கு மிகுந்த நம்பிக்கை. எதிர்காலத்தில் நாட்டை அவன் விடுதலை செய்து அதற்கு வளம் மிகுந்த வாழ்வைத் தருவான் என்று கருதுகிறார்.

சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி மூன்றும் குலோத்துங்க சோழருக்கோ, தமக்குப் பின்னால் தம்முடைய புதல்வன் இராஜராஜன் அரசியல் பொறுப் பேற்கத் தகுதியற்ற கோழை; இன்ப விழைவில் நாட்டம் கொண்டவன் என்ற எண்ணம்.

ஆகவே, எதிர்காலப் பாண்டியநாடு இளவரசன் சுந்தர பாண்டியன் தலைமையில் வீறு பெற்றெழுந்து, தமது மைந்தனுக்கும் சாம்ராஜ்யத்துக்குமே ஆபத்து விளைவிக்கக்கூடும் என்று குலோத்துங்கர் அஞ்சுகிறார். இந்த அச்சத்தின் காரணமாகப் பாண்டிய நாட்டைச் சிறுமைப்படுத்தவும், சுந்தர பாண்டியனின் மன உறுதியை அழித்து அவனைக் கோழையாக்கவும் திட்டமிடுகிறார். பாண்டிய நாட்டின் பெயரையே மாற்றியமைத்து, அதன் தலைநகரில் தாம் வீராபிஷேகம் செய்துகொண்டு, அதையே தமது நேராட்சியில் கொண்டு வருவதற்காக வேண்டுகோள் என்ற பெயரில் கட்டளைகள் பிறப்பிக்கிறார்.

கட்டளைகளை மறுத்தால் போர் நடக்கும்; போர் நடந்தால் பாண்டியநாடு அழியும். என்றாலும் தீமைக்குப் பணிய மறுக்கிறான் இளைஞன் சுந்தர பாண்டியன். அவனுடைய கருத்தை ஏற்றுக்கொண்டு, அவ்வாறே சோழருக்குப் பணிய மறுத்து விடுகிறார் குலசேகர பாண்டியர்.

வெகுண்டெழுந்த குலோத்துங்கர் தமது படைகள் அனைத்தையும் ஒன்று திரட்டிப் பாண்டிய நாட்டின்மீது [illegible] சுந்தர பாண்டியனைப் பிடித்துக் கொண்டுவர வேண்டும் என்றும் தம் வீரர்களிடம் கூறுகிறார். [illegible] தலை தூக்காது என்பதால் [illegible] சொல்கிறார்.



அதுவரை எந்த நாடுமே கண்டிராத பயங்கரப் போர் பாண்டிய நாட்டில் நடக்கிறது. போர் முறை நெறிகளைக் கடந்த பல கொடுமைகளும் அங்கே நடக்கின்றன. சோழ இளவரசன் இராஜஇராஜன் பெண்களைத் துன்புறுத்திப் பல தீச்செயல்களில் களிக்கிறான்.

பாண்டியரின் உற்ற நண்பரும் புலவருமான விழுப்பரையர், புதிதாகத் திருமணம் செய்து கொண்ட தமது ஒரே புதல்வன் ஆலவாய் நம்பியைப் பலி கொடுத்து, இளவரசன் சுந்தரபாண்டியனைக் காப்பாற்றுகிறார். இளவரசன் சுந்தரபாண்டியன் போரில் கொல்லப்பட்டதாகவே குலோத்துங்கர் நம்புகிறார். நாட்டு மக்களும் குலசேகர பாண்டியரும் கூட அப்படியே நம்புகிறார்கள்.

வெற்றி பெற்ற பாண்டிய நாட்டைத் தம்மால் ஆளமுடியாது என்று கண்ட சக்கரவர்த்தி, அதைப் பாண்டியரையே ஆளச் செய்து விட்டுத் தம் நாடு திரும்புகிறார். அவருடைய அதிகாரிகளும் ஒற்றர்களும் நாட்டில் உலவுகின்றனர்.

கொல்லப்பட்டதாக நம்பப்பட்ட சுந்தரபாண்டியன் பைந்தமிழ்க் குமரன் என்று மாறு பெயரில் மறைந்து வாழ்கிறான். போரின்போது பெற்ற துன்பத்தால் வைகையில் விழுந்து உயிர் மாய்த்துக் கொள்ளத் துடித்த கயல்விழி என்ற பாணர் குலப் பெண்ணை அவன் தடுத்து நிறுத்துகிறான். அவன் பேசிய ஆவேசப் பேச்சு அவள் உள்ளத்தில் சக்திக் கனலாகக் குடிபுகுந்து விடுகிறது. அவளிடம் பாண்டிய நாட்டை மீட்டு விடுவதாகச் சபதம் செய்கிறான்.

திருக்கொடுங் குன்றத்துக் கானகத்தில் புலவனாக மறைந்துவாழும் இளவரசனும், போரினால் அநாதையாக்கப்பட்ட கயல்விழியும் நெருங்கிப் பழகுகிறார்கள். வள்ளுவரைத் தனது வழிகாட்டியாகக் கொண்ட அவன், புலவர் படை திரட்டி, அதைக் கொண்டே நாட்டை மீட்கப் போவதாகக் கயல்விழியிடம் பெருமை பேசுகிறான். அவனே இளவரசன் என்பதை அறியாத கயல்விழி, அவனிடம் தன் மனத்தைப் பறி கொடுக்கிறாள். ஆனால் ஏதோ ஓர் இரகசியமான துன்பம் அவனுடைய விருப்பத்துக் கெதிராகவே அவளை வாட்டி வதைக்கிறது. அதை அவள் வெளியிட மறுக்கிறாள்.

பைந்தமிழ்க் குமரன் அந்தப் போரில் நடைபெற்ற ஓர் அக்கிரமச் செயலைக் கேள்வியுற்றுத் திடுக்கிடுகிறான். அவனுடைய பணியாளன் மணக்கவிருந்த ஓர் உத்தமப் பெண்மணி, சோழநாட்டு வெறியன் ஒருவனால் களங்கப்படுத்தப்பட்டு விட்டாள். அதனால் தன் காதலன் கரம் தீண்டாமலே தீக்குளித்து விடுகிறாள் அவள். பெண்மையை அழித்துக் களியாட்டம் நடத்திய சோழர்களின் மீது வஞ்சம் பிறக்கிறது இளைஞனுக்கும் கயல் விழிக்கும்.

இந்த நிகழ்ச்சியையே ஒரு கூத்தாகப் புனைந்து, கயல்விழியைக் கொண்டு நாடெங்கும் நடத்த விரும்புகிறான் இளைஞன். முதலில் அதில் நடிக்க மறுக்கும் கயல்விழி, பின்பு அவன் மன வேதனையைக் கண்டு நடிக்க இசைகிறாள். அவனுடைய இலட்சியத்தையே தன்னுடையதாகக் கொண்டு அதன் வெற்றிக்காகவே தன்னை அவனிடம் அர்ப்பணித்து விட்டு, அவனுடைய எண்ணத்தில் மட்டும் தனக்கு ஓர் இடம் கேட்கிறாள் கயல்விழி.

ஆனால், அவளுடைய உள்ளத்தின் ஆழத்தில் ஏதோ ஒரு போராட்டம். அடிக்கடி அவள் எதையோ நினைத்துக் கொண்டு குமுறுகிறாள்! என்ன காரணம்? பைந்தமிழ்க் குமரனுக்கு அது மட்டிலும் ஒரு புதிராகவே இருக்கிறது.

முதல் அத்தியாயம்

திருக்கோலம் கண்டனர்

*திருமலை நாட்டுத் திருக்கொடுங் குன்றத்துக்கு எங்கிருந்துதான் இவ்வளவு ஆனந்தம் பொங்கியதோ தெரியவில்லை. அதனுடைய ஆனந்தத்தில் அதைச் சுற்றியிருந்த சிற்றூர்களும் கிராமங்களும் கூடப் பங்கு கொள்ளத் துடித்தன. அண்மையில் நடந்து முடிந்த பெரும் போரில் படுகளமாகிப் பதறிய மட்டியூரும் தன்

---

* ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூரை அடுத்துள்ள பிரான்மலையே திருக்கொடுங் குன்றமாகும். சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் போர் நடைபெற்ற மட்டியூர் இப்போது சிற

துன்பத்தை மறந்து திருக்கொடுங் குன்றத்துத் திருவிழாவில் கலந்து கொள்ள முன்வந்தது. 'எத்தனை கொடுமைகளுக்கு நாங்கள் ஆளாக்கப்பட்டாலும் இறைவனுக்கு விழா எடுத்துக் களிப்பதை நாங்கள் புறக்கணிக்க மாட்டோம்!' என்று மக்கள் எக்காளமிட்டார்கள்.

கொடுங்குன்றம் விழாக் கோலம் பூண்டு விளங்கியது. கட்டிளம் காளையர் கூட்டம் மலைக் காடுகளுக்குச் சென்று காட்டு மலர்களையும் மூங்கில் இலைக் கொப்புக்களையும் கட்டிக் கொண்டு வந்து நகர்ப்புறத்தை அலங்கரிப்பதில் முனைந்து நின்றது. தெருவுக்குத் தெரு தென்னங் குருத்து, ஈச்சு, மாவிலை, செவ்வலரி இவற்றாலான தோரணங்கள் காற்றில் அசைந்தாடின. மங்கலப் பெண்டிர்கள் வீடுகளைக் கழுவி மெழுகிக் கோலமிட்டனர். தூண்களுக்கும், நிலைகளுக்கும், கதவுகளுக்கும் மஞ்சளும் செஞ்சாந்தும் சந்தனமும் பூசி அழகுபடுத்தினர். தெருக்களில் மாக்கோல மிட்டு, செம்மண்கரை கட்டி, மலர்களை வாரித் தூவி யிருந்தனர்.

நகர்ப்புறத்தே குன்றின் அடிவாரத்தில் அமைந்திருந்த கோவிலின் முகப்பு வாயிலும் கண்கொள்ளாக் காட்சியளித்துக் கொண்டிருந்தது. மண்டபத்துத் தூண்கள் தோறும் குலை தள்ளிய நெடு வாழைகள் கட்டப்பட்டிருந்தன. ரிஷபக் கொடிகளும் சேவற் கொடிகளும் பட்டொளி வீசிப் பறந்தன.

அந்த முகப்பு வாயிலை அடுத்துப் பெரியதோர் அரங்கம் அமைக்கப் பெற்றிருந்தது. அதில் வேப்பம்பூ மாலைகள் சரம் சரமாகத் தொங்க விடப்பட்டிருந்தன. கயல்மீன் சின்னங்கள் பொறிக்கப்பட்ட கொடிகளும் தோரணங்களும் திரைச் சீலைகளும் அதில் நிறைந்திருந்தன. அரங்கத்தின் மையத்தில் ஓர் ஆள் உயரத்துக்கும் மேல் உயரமான ஒரு மட்குடம் காட்சி யளித்தது. அதில் வண்ணங்கள் பூசிக் கொண்டிருந்தனர் நகரத்துக் கலைஞர்கள். அரங்கத்தின் அருகே நீண்டு வளைந்த தந்தங்களோடும் மலைப்பாம்பை யொத்த துதிக்கையோடும் ஒரு யானை ஆடி அசைந்தவாறு நின்றது.

மக்கள் கூட்டம் அந்த அரங்கத்தையும் அதில் தென்பட்ட மட்குடத்தையும் சுட்டிக்காட்டித் தங்களுக்குள் ஏதேதோ பேசிக் கொண்டது. திரு

கிராமமாக இருக்கிறது. அந்தக் கிராமத்திலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ளது பிரான்மலை. அது இப்போது குன்றக்குடி ஆதீனத்தின் திருப்பணியில் உள்ள ஐந்து கோவில்களில் ஒன்றாக விளங்குகிறது. கபிலர் பாடிய சங்கப் பாடல்களிலும் திருஞான சம்பந்தர் பாடிய தேவாரத்திலும் முன்ன இயற்கை வளத்தின் செழிப்பினை இப்போது அங்கு காண முடியவில்லை யென்றாலும் நல்ல மங்கைபாகரின் திருக் கல்யாணக் காட்சி மெய்சிலிர்க்கச் செய்யும் சிற்பக் காட்சி.

விழாவன்று அந்த அரங்கத்தில் புலவர் சபை கூடுமாம்; அதில் பாட்டும் கூத்தும் நடைபெறுமாம்; ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர் மக்கள்.

ஆமாம், திடீரென்று எப்படி இவ்வளவும் அங்கே நடந்தன?

திடீரென்று எதுவும் நிகழவில்லை. கொடுங் குன்றத்துக் குகைக்குள் நெடுநாள் ஆராய்ச்சி நடத்திய புலவர் ஒருவர் அண்மையில் வெளியில் வந்திருப்பதாகச் செய்தி பரவியது. சுற்று வட்டாரங்களிலிருந்து கற்றவர்கள் ஒரிருவர் வரத் தலைப்பட்டார்கள். பின்பு கூட்டம் கூட்டமாக இளைஞர்களும் முதியோர்களுமாக அங்கு புலவர்கள் குழுமினார்கள். அவர்கள் திரும்பும் போது புதிய நம்பிக்கையோடும் வலிமையோடும் திரும்பினார்கள்.

அறம் பாடும் சக்தி பெற்ற இளைஞனைப் பற்றிய செய்தி ஊர்ப் புறத்தே இறகு கட்டிப் பறந்தது. அவன் சக்தி வாய்ந்தவன் என்றும் பேசிக் கொண்டனர். கயல்விழி என்ற பாணர்குல மங்கையும் மதுரையை விட்டு அங்கு வந்து விட்டாளாம். போரில் அவளை விட்டுப் பிரிந்திருந்த அவள் தந்தையும் குழுவினரும் அவளிடம் வந்து சேர்ந்து விட்டார்களாம். கற்றவர் கூட்டம் புலவனைப் பற்றிப் பேசியது; மற்றையோர் கூட்டம் கயல்விழியின் ஆட்டத்தைக் காணக் காத்திருந்தது.

அன்று வெள்ளிக் கிழமை. விழா அடுத்த வாரம் தொடங்கி நடப்பதாக இருந்தது. அதிகாலையில் நீராடிப் புத்துடை உடுத்து, புது மலர் சூடி, கையில் ஓர் ஓலைப் பெட்டியில் மலர்க் குவியலோடு பைந்தமிழ்க் குமரனைக் காண வந்திருந்தாள் கயல்விழி.

''கோவிலுக்குச் செல்வோமா?''

அவனும் சித்தமாகக் காத்திருந்தான். இருவரும் புறப்பட்டார்கள். அவளுடைய காதுகளில் புதுப் பொலிவோடு தொங்கிய கயற்குழையை அடிக்கடி திரும்பிப் பார்த்தான் அவன். அவளுடைய தோற்றத்துக்கே ஒரு புதுமையான கம்பீரத்தைக் கொடுத்தது அது.

''இதைப் பார்த்தீர்களா?'' குழையைச் சுட்டிக் காட்டினாள்.

''அழகாக இருக்கிறது.''

''புலவருடைய உள்ளத்தில் கயல்மீன் துடிப்பதால், அதையே விழுப்பரையரிடம் கூறிச் செய்து தரச் செய்தேன்!''

''என்னுடைய உள்ளத்தில் மட்டுந்தானா கயல்கள் துள்ளுகின்றன? நீயும் பாண்டிய நாட்டுப் பெண்தானே?''

''என்னுடைய உள்ளம் என்றே ஒன்று இருக்கக் கூடாது என்று பார்க்கிறேன். அணுவளவுகூட அது என்னிடம் எஞ்சியிருக்காதபடி அதைத் தங்களுக்குக் காணிக்கையாக்கி விட வேண்டுமென்றுதான் ஏங்குகிறேன். அதற்காகவே நாம் இப்போது நல்ல மங்கைபாகரிடம் போகிறோம்........ ஆனால் ?''

ஆனந்தப் பெருக்கில் திளைத்துக் கொண்டிருந்த இளம்புலவன், அந்த 'ஆனால்' என்ற சொல்லைக் கேட்டவுடன் சட்டென்று திரும்பிப் பார்த்தான்.

''ஏனோ நான் அதற்குத் தகுதி உள்ளவளா என்ற ஏக்கம் என்னுள் அடிக்கடி ஏற்படுகிறது. இந்த இரவு முழுவதும் என்னால் உறங்க முடியவில்லை!''

வாய் விட்டுச் சொல்ல முடியாத, சொல்லத் தெரியாத கலக்கம் என்னவாக இருக்கும்? பைந்தமிழ்க் குமரன் ஊகித்துப் பார்த்தான். 'அப்படியும் இருக்குமோ?' என்று ஓர் ஐயம் எழுந்தது. அதை வாய்விட்டே கேட்டு விட்டான்.

''ஒரு வேளை நீ இதற்கு முன்பு எந்த இளைஞனையாவது திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று விரும்பியிருந்தாயா? அவன் இந்தப் போரில் இறந்து விட்டானா? அதற்காகத்தான் நீ வைகை வெள்ளத்தில் வீழ்ந்து உயிர் துறக்கத் துணிந்தாயா?''

''அப்படி எதுவுமே நிகழ வில்லை'' என்றாள் கயல்விழி. ''கலைத் துறைக்கே ஆளாகியிருந்த எனக்கு இதற்கு முன்பு யாரைப் பற்றியுமே நினைக்க நேரமில்லை. என்னுடைய நினைவில் நீங்கள் மட்டுமே இருக்கிறீர்கள்; நினைவென்று ஒன்று என்னிடம் இருக்கும் வரையில் நீங்களே இருப்பீர்கள்.''

பெருமிதத்தால் ஏறுநடை போட்ட இளைஞன், ''அப்படி யென்றால் சென்ற காலத்தைப் பற்றிய கவலையில் துன்பப் படாமல், எதிர்காலத்தைப் பற்றி உன் சிந்தனையைத் திருப்பு!'' என்றான். ''இந்த மலையின் உச்சியில் உள்ள இறைவனுக்கொப்பானது நாம் அடைய வேண்டிய இலட்சியம். நமது பாதை கடுமையானது; சோதனை மிகுந்தது; ஆனால் உயரமானது. திரும்பிப் பாராமல் என்னோடு ஒன்றி வா; உயரே செல்வோம்.''

வியப்போடு அவனைப் பார்த்துக் கொண்டே நடந்தாள் கயல்விழி. இந்தச் சில மாதங்களில் அவன் எவ்வளவு தூரம் மாறி விட்டான்! இப்போது அவன் காடுகளில் வாழும் துறவியைப் போல் சிகையை உயரே சுற்றிக் கட்டியிருந்தான். முகத்திலே இளம் தாடி கருகரு வென்று மண்டிக் கிடந்தது. வீழுப் புண்களை மறைப்பதற்கென்றே நீண்ட அங்கியணிந்திருந்தான். ஏற்கனவே நெடிய தோற்றம் உள்ளவன் அவன்; இப்போது அது இன்னும் உயர்ந்திருந்தது. வலிமையான உடற்கட்டு அவனுடைய ஆடைகளில் ஒளிந்து கொண்டிருந்தது.

''கயல்விழி! நாம் நமது எண்ணத்திலே ஒன்றாகி விட்டோம். எண்ணங்களின் உறுதியில்தான் செயல்கள் பிறக்கின்றன. நாம் கட்டாயம் இந்த நாட்டை மீட்டு விடுவோம். அது வரையில் நாம் தவம் செய்து விரதம் காப்போம். உள்ளத்தால் ஒன்றாகிய நாம், நமது இலட்சியம் நிறைவேறிய பிறகு, இதே இடத்துக்கு மீண்டும் வந்து திருமணம் செய்து கொள்வோம். நீ என்ன சொல்கிறாய்?''

அவளுக்கு எதுவுமே பேசத் தோன்றவில்லை. குபீரென்று அவள் மேலே எழும்பி வானத்தில் சிறகடித்துப் பறப்பதாக நினைத்துக் கொண்டாள். நல்ல மங்கை பாகரை வணங்கச் செல்லும் போது, தேனமுதான சொற்களை அவள் செவிகளில் அவன் பொழிந்துவிட்டான்.

''நான் என்ன சொல்வது? முற்பிறவியில் நான் செய்த பாக்கியத்தால் இந்தச் சொற்களைத் தங்களிடமிருந்து என்னால் கேட்க முடிகிறது. தங்கள் எண்ணம் எதுவோ அதுவே என் விருப்பம். மீண்டும் நாம் இங்கு வரும் அந்தச் சுப தினத்துக்காக நான் எதையும் செய்யச் சித்தமாக இருக்கிறேன். என்ன சோதனைகள் இடையில் நேர்ந்தாலும் நான் கலங்க மாட்டேன். ஏனென்றால்.... இப்போதே தங்களை நான் வரித்துக் கொண்டு விட்டேன்.''

மெய்ம்மறந்து அவள் சொல்லிக் கொண்டே நடந்த போது, 'சரீர்' என்று ஒரு நெருஞ்சி முள் அவளது வலது பாதத்தில் குத்தியது. அந்த முள் பாதத்தில் குத்தியதாக மட்டிலும் அவள் நினைக்கவில்லை. நெஞ்சிலும் பாய்ந்து விட்டது. அவள் அதை அவனிடம் காட்டிக் கொள்ளவில்லை. அதற்காக முகம் சுளிக்கவோ கூச்சலிடவோ இல்லை. அவனுக்குத் தெரியாதபடி அதைப் பிடுங்கி எறியப் பார்த்தாள். அதுவோ முனை முறிந்து காலுக்குள் சென்று விட்டது. கடுக்கும் தன் கால் வலியை மறைப்பதற்காக அவள் முன்னிலும் கலகலப்பாகச் சிரித்துக் கொண்டே அவனுடன் சென்றாள்.

இருவரும் இடையில் தென்பட்ட ஒரு குடைவரைப் படிக்கட்டுகளில் இறங்கி, வளைந்து சென்று, பிறகு மேலே ஏறினார்கள். குன்றின் உச்சியில் தெரிந்தது ஒரு சுற்று மண்டபம். அதற்குள்

நுழைந்து கருவறைக்கு முன்னே வந்து நின்றார்கள்.

உள்ளே கருவறைக்குள் ஒரே கும்மிருட்டாக இருந்தது. அருகில் இருந்த ஒற்றைச் சுடர் அந்த இருளை மிகைப் படுத்துவதாகவே பைந்தமிழ்க் குமரனுக்குத் தோன்றியது. உற்றுப் பார்த்தான். எங்கே இறைவன் திரு உருவம்? 'ஒன்றே தெய்வம்!' என்று சுட்டுவது போல் நிமிர்ந்து நிற்கும் சிவலிங்கச் செல்வம் எங்கே?

ஏதும் புலனாகவில்லை. காரணம் கேட்பது போல் கயல்விழியைத் திரும்பிப் பார்த்தான். அவனுடைய நெற்றிச் சுருக்கம் 'எங்கே இறைவன்?' என்று கேட்டது. முதன் முறையாக அங்கே வந்தவன் அவன்.

தன் கூடைக்குள்ளிருந்து எடுத்த பெரிய அகல் விளக்கு நிறையத் தான் கொண்டு வந்திருந்த பசு நெய்யை வார்த்தாள் கயல்விழி. வெண்பஞ்சைத் திரட்டித் திரி சமைத்தாள். அதை அங்கிருந்த சுடரில் பற்ற வைத்து அகல் விளக்கிலிட்டுக் கருவறைப் படியின் மையத்தில் வைத்தாள்.

சிறிது சிறிதாக ஒளி உயர்ந்து கொண்டே வந்தது. தீப்பந்தத்தின் அளவுக்கு அது கொழுந்து விட்டெரிந்தது. அந்த ஒளிக்குப் பின்னால் சிறிது சிறிதாக ஒரு புதிய உலகம் உதயமாவதைக் கண்ணுற்றான் பைந்தமிழ்க் குமரன். அவன் மெய்ம் மறந்தான். அந்த அற்புதக் காட்சியைக் காண்பதற்கு இரண்டு கண்கள் போதா. ஆயிரம் கண்களாலும் காண முடியாத காட்சி. கோடி கண்களால் கண்டு மகிழக் கூடிய திருமணக் காட்சி அது!

இயற்கையின் எழில் அனைத்தும் ஒன்றாய்த் திரண்டிருந்த கொடுங்குன்றத்தின் உச்சியில் குடைவரையின் தனிமையில் இறைவன் தம் துணைவியோடு ஒன்றாக அமர்ந்திருந்தார். அணிமணிகள் பூண்டு, அழகாடை புனைந்து, இளமையும், எழிலுமாய், ஆண்மையும் பெண்மையுமாய், சிவமும் சக்தியுமாய் அங்கே அவர்கள் இணைந்திருந்தார்கள். கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்புத் தவழ இருந்த இறைவன் தம் தேவிக்கு மலர் சூட்ட முனைவது போன்று தமது இடது கரத்தில் அன்று மலர்ந்த மலரொன்றை வைத்திருந்தார். அதைக் கண்டு நாணமும் மகிழ்ச்சியும் பொங்கிக் கொண்டிருந்தன தேவியின் திருமுகத்தில். அவரும் அவ்வாறே தமது வலது கரத்தில் மலரொன்றைத் தாங்கி இறைவனின் முன்பு நாணத்துடன் ஏந்தியிருந்தார். ''தங்களை எனக்களித்து, என்னை ஈர்த்து ஆட்கொண்டு விடுங்கள்!'' என்று கூறிக் கொண்டிருக்கிறாரா, தேவி?

'திருஞான சம்பந்தர் இங்கெல்லாம் வந்திருக்கிறார்; இந்தத் திருக்கோலத்தைக் கண்டிருக்கிறார்; கவிதை பொங்கிப் பெருக்கெடுத்து அருவியாகக் கொட்டியிருக்கிறது!' என்று பைந்தமிழ்க் குமரன் நினைத்தவுடனேயே ஞானசம்பந்தரின் பாமாலை அவன் இதழ்களில் கமழ்ந்தது. கன்னியும் சேர்ந்து பாடினாள்.

''வானில் பொலி வெய்தும்—மழை
மேகம் கிழித தோடிக்
கூனல் பிறை சேரும் — குளிர்
சாரல் கொடுங் குன்றம்;
ஆனில் பொலி ஐந்தும் — அமர்ந்(து)
ஆடி உல கேத்தத்
தேனில் பொலி மொழியாளொடு
மேயான் திரு நகரே!
மயில் புல்குதண் பெடையோடுடன்
ஆடும் வளர் சாரல்
குயில் இன்னிசை பாடும் — குளிர்
சோலைக் கொடுங் குன்றம்;
மயில் வேன்மலி நெடுவெம் — சுடர்
அனல் ஏந்தி நின்றாடி
எயின் முன்பட வெய்தான் — அவன்
மேயவ் வெழில் நகரே!''

ஐம்புலன்களிலும் அழகு பூண்ட தேவி ஒருத்தி அருகில் அமர்ந்திருப்பதாலன்றோ இறைவனால் இந்த உலகத்தையே ஆட்டி வைத்து இயக்குவிக்க முடிகின்றது! தேனினும் இனிய இதயத்தோடு, தேனினும் இனிய மொழியோடு, தேனினும் இனிய செயலோடு கூடிய ஒருத்தியின் துணையால் அல்லவோ இறைவன் தீமைகளனைத்தையுமே அழிக்கும் ஆற்றல் பெற்றிருக்கிறார்!

''நான் புதிய பாண்டிய நாட்டைப் படைக்க வேண்டும்; அதைக் காக்க வேண்டும்; அதற்கு வரும் தீமைகளை அழிக்க வேண்டும்!'' என்று வேண்டிக் கரம் கூப்பினான் அவன்.

''என்னை இப்போதே அவருக்கு அளித்து விட்டேன்; என்னுடைய குறைகள் நிறைகளோடு என்னை அவருக்கு அர்ப்பணித்து விட்டேன்; உங்களுடைய சாட்சியாக நான் அவருடையவள்'' என்றாள் கயல்விழி.

ஐம்புலன்களிலும் அழகு பொங்கும் அந்தப் பெண்ணணங்கைப் பைந்தமிழ்க் குமரன் அன்போடு நோக்கி, அவளிடம் ஒரு மலரை எடுத்து நீட்டினான். நாணமும் மகிழ்ச்சியும் பொங்க அவள் அதை பயபக்தியோடு ஏற்றுத் தன் கூந்தலில் அணிந்து கொண்டாள். (தொடரும்)

வீரமில்லாத உனக்கு யார் வீரசிம்மனென்று பெயரிட்டார்கள்? பேடியைப் போல மறைந்திருந்து என்னைச் சிறைப் பிடித்துப் பெருமைப் பட்டுக் கொள்ளாதே
அகப்பட்டுக் கொண்ட ஆத்திரத்தில் என் அலறுகிறாய்? அடங் கிக் கிட! உன் ஆர்ப்பாட்டங் களெல்லாம் இன்றோடு சரி.
ஆளப்பிறந்தவன் 10
கதை: ராஜி
சித்திரம்: விநு
இவ்விருவரையும் அந்தக் குகைக் குள் தள்ளிப் பாறையைக் கொண்டு மூடி அடையுங்கள்! இன்றோடு முடிந்தது ஜயசிம்மன் ஆட்சி.
வீரசிம்மா, இன்று பகற் கனவு காணாதே! நீ என்றுமே அரசனாக முடியாது...!
ஹ..ஹ..ஹா! இதையே சொல்லிக் கொண்டு இந் தக் குகைக் குள்ளேயே கிட ம்.... உள்ளே தள்ளி மூடுங்கள்!
ஜயசிம்மா! மக்கள் கூட்டம் ஓர் ஆட்டு மந்தை. அந்த ஆட் டுப் படைக் கும் இடையன் என்னிட மேன்டு. இனி நானே ராஜா!
அரசே! என் னால் தான் உங்களுக்கு இந்தத் துன்பம். எங்கும் போக வேண்டாமென்று நான் உங்களைத் தடுத் திருக்க வேண்டும். நான் கடமை தவறி விட்டேன்....
நீ தடுத்தால் நான் தங்கி விடுவேனா? பைத்தியம்...! வருவது வந்தே தீரும்....

இங்கிருந்து தப்பும் மார்க்கமே இல்லை. பட்டினியால் சாகவேண்டியதுதான். வீரசிம்மன் போன்றவர்களுக்கே கடவுளும் உதவுகிறார்.
கடவுளைக் குறை கூறாதே. அதோ பார். அந்த கிளியை. கடவுள் காட்டியுள்ள வழிதான் அது
இந்த ஒளிக் கற்றையைப் பிடித்துக் கொண்டு உயரே ஏறப் போகிறீர்களா அரசே?
ஐயோ, வேலா! இவ்வளவு அசடாக இருக்கிறாயே நீ... நம் கிளியை மறந்து விட்டாயா?
இந்தப் பெரிய காட்டு இலையில் இந்த முள்ளைக் கொண்டு நம் சோமுவுக்கு ஒரு குறிப்பு எழுதிக் கிளியின் காலில் சுருட்டிக் கட்டி, அதோ அந்தத் துவாரத்தின் வழியே அதைப் பறக்க விடப் போகிறேன்....
புரிந்தது, புரிந்தது! கிளி சோமுவின் தோளில் போய் உட்காரும். பச்சிலை கூறும் செய்தியைப் படித்துப் பார்த்து விட்டுச் சோமு தன் நண்பர்களுடன் ஓடி வருவான், அப்படித்தானே?
ஜயசிம்மனின் செய்தியோடு கிளி பறந்து செல்லுகிறது.
ரங்கா, நீ இங்கு எப்படி வந்தாய்? அரண்மனை வாழ்வு அலுத்து விட்டதா?
ஜயசிம்மன் ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறான். மறுபடியும் வீரசிம்மனின் சூழ்ச்சியா? ரங்கா! முன்னால் பறந்து சென்று வழி காட்டுகிறாயா?
கிளி வழிகாட்டிச் செல்லச் சோமுவின் பட்டாளம் கிளம்பி விட்டது....

அதோ அந்தப் பாறை மீது கல் உட்கார்ந்திருந்தது. ஜெயசிம்மன் அங்கு தான் அடைபட்டிருக்க வேண்டும்.
பாறையைப் புரட்ட யோசிக்கும் போது...
வரும் வழியில் இரண்டு குதிரைகளைப் பார்த்தேன். அவை இவரும் அரசரும் ஏறிவந்தவைகளாகத் தானிருக்கும். காட்டுக் கொடிகளைப் பயன்படுத்தி அவைகளின் உதவியால்.....
கிராமத்துச் சிறுவர்கள் குதிரைகளின் உதவியால் மலையைப் புரட்டி மன்னன் ஜெயசிம்மனைக் குகையிலிருந்து விடுவிக்கின்றனர்....
நண்பர்களே! இந்த நாடும் இதன் மன்னனும் உங்களுக்கு வெகுவாகக் கடமைப்பட்டிருக்கிறார்கள்
நண்பா, நமக்குள் பாராட்டுதல்கள் ஏன்? தாமதிக்காமல் வீரசிம்மனுக்கு உன் அரண்மனைக்குப் போ. புறப்படு...

தொடரும்

பாரெக்ஸ் புகட்டும் பருவம்
உங்கள் குழந்தைக்கு ஏறக்குறைய நான்கு மாதம் என்றால் அதுவே பாரெக்ஸ் புகட்டும் பருவம். பக்குவம் செய்து தயாரான நன்செய் தானிய உணவே பாரெக்ஸ்; வைட்டமின் Dயும் தாதுப் பொருள்களும் செறிந்தது. பற்களையும் எலும்புகளையும் வலுவாக்குவதற்கான எல்லாச் சத்துக்களும் உள்ளடங்கி, திடமான வளர்ச்சிக்கு உதவுவது பாரெக்ஸ். இதன் தயாரிப்பாளர்கள்: 'குழந்தை உணவுப் புகழ்' கிளாக்ஸோ.
பாரெக்ஸ்—ஓர் கிளாக்ஸோ தயாரிப்பு
FAREX
இலவசம்! 'தி பாரெக்ஸ் கைடு' (ஆங்கிலம்) குழந்தைகளை ஊட்டி வளர்ப்பதுபற்றிய இந்நூலை வேண்டுவோர், தபால் செலவுக்காக 15 ந. பைசா தபால் வில்லைகளை அனுப்பி, எழுதுக: பாரெக்ஸ், தபால் பெட்டி 202, பம்பாய்—1.

PA. 3-78 TM

பாமினிப் பாவை

3. சாம்ராஜ்யம் பிறந்தது

தாங்க முடியாத துக்கத்தில்—குமைந்து கொண்டிருந்தாள் துங்கபத்திரை. பாறைகளில் குதித்துக் கும்மாளியிட்டுச் சுழித்தோடும் பத்திரையாக இல்லை அவள். சலசலத்து ஓடும் அவள் போக்கில் இப்போது ஆனந்த சங்கீதம் ஒலிக்கவில்லை. தனிமையிலே 'ஹோ' என்று சோக ஒலியெழுப்பிப் பாய்ந்தோடிக் கொண்டிருந்தாள் அந்த நதிக் கன்னி. அது மகனை இழந்ததொரு தாயின் ஓலமாக ஒலி மாறிக் கேட்டது.

கலங்கிய கண்களோடு கூடிய மற்றொரு பெண் எதிர்ப்பட்டாள். துக்கப்பட்டவர்களுக்குப் பிறரைக் கண்டால் அது பீறிட்டுக் கொண்டு கிளம்புமே! எதிர்ப்பட்டவளோ பத்திரையின் மூத்த சகோதரி கிருஷ்ணை. கேட்கவா வேண்டும்? தேம்பித் தேம்பி அழும் தங்கையைத் தாங்கி அணைத்துக் கொண்டு தேற்ற வகையறியாது தவித்தாள் சகோதரி கிருஷ்ணை.

"பத்ரா, விவேகியான நீயே இப்படி மனத்தைத் தளர விடலாமா கண்ணே?" என்றாளே ஒழிய அவள் குரலும்தான் கரகரத்தது.

"காடு மண்டிக் கவனிப்பாரற்றுக் கிடந்த என் சூழலை உருவாக்கி என்னைச் சுற்றி ஊரும் பேரும் உண்டாக்கினார்கள். அணிமணிகளைக் கொண்டு அழகுபடுத்துவது போல என் அணைப்பிலே உலகம் போற்றும் ஒப்பற்றதொரு நகரத்தை உருவாக்கி வைத்தார்கள். அந்த சாம்ராஜ்யாதிபதியின் சந்ததியிலே வந்த தலைமகன் இன்று அங்கே மகனை இழந்த வேதனையிலே மனம் நொந்து கிடக்கிறான். பெற்றவளுக்குப் பெருமை தேடித் தரும் பெருமகன் அங்கே பொருமிக் கொண்டிருக்க நான் இங்கே வேறு எப்படியடி இருக்க முடியும்?" என்று கதறினாள் விஜயநகரின் காவல் நாயகியான துங்கபத்திரை.

"உண்மை. நதியின் கரைகளில் நகரங்கள் தோன்றுவது இயற்கைதான். ஆனால் நகரங்களெல்லாம் விஜயநகரமாகி விட முடியுமா என்ன? இந்து தர்மத்தைக் காப்பதற்கென்றே உன் மக்களால் உண்டாக்கப்பட்ட நகரமல்லவா இது? உன்னைப் போன்ற பாக்கியசாலிகள் வேறு யார் இருக்க முடியும்?"

"அப்படித்தானம்மா நானும் இறுமாந்திருந்தேன். ஆனால் கொஞ்ச காலமாக ஏனோ என்னுள் இனந்தெரியாத பீதியொன்று வளர்ந்து குடைந்து கொண்டிருக்கிறது.

கௌசிகன்

அதற்கு ஏற்றாற் போலச் சில காரியங்களும் நடைபெறுகின்றன. அது எதில் போய் முடியுமோ என்று கவலையாக இருக்கிறது.'' கண் கலங்கினாள் துங்கபத்திரை.

அவள் மனக் கண்ணிலே, விண்ணகத்து வேந்தரெல்லாம் வியக்கும் நிலைக்கு விஜய நகரத்தை உயர்த்திய மாமன்னர் கிருஷ்ண தேவராயரின் கம்பீரமான உருவம் தோன்றியது. அந்தச் செல்வனின் காலத்திலே சீரும் சிறப்புமாக வாழ்ந்த தன் நெஞ்சம் கர்வத்தினால் விம்மிதம் அடைந்திருந்ததை எண்ணிப் பார்த்தாள். பகைவர்களுக்குக் காலனாகவும் கலைகளுக்குக் காவலனாகவும் வாழ்ந்தவர் ராயர். ஆனால் அந்த மாவீரனின் கடைசிக் காலத்திலேயே கூட.... பத்திரையின் உடல் நடுங்கிற்று.

கிருஷ்ணையும் துங்கபத்திரையும் உரையாடிக் கொண்டிருக்கும் போதே குதிரை வீரர்கள் பலர் கரைக்கு வந்து ஆற்றைக் கடக்க முற்பட்டார்கள்.

அவர்கள் யார்? விஜயநகரத்து வீரர்களா? அல்லவே அல்ல. அவர்களின் சின்னங்களிலிருந்து பீஜப்பூர் சுல்தானான அலி அதில்ஷாவின் அந்தரங்கப் படை வீரர்கள் அவர்கள் என்று ஊகிக்க முடிகிறது. கம்பீரமான தங்களின் அராபியக் குதிரைகளை அழகாக அலங்கரித்திருந்தார்கள். மினுமினு வென்ற அவைகளின் உடலை வழவழப்பான பட்டுக்களும் பட்டு நூல்களும் குஞ்சங்களும் அழகுபடுத்திக் கொண்டிருந்தன. குதிரைகளுக்கே இத்தனை அலங்காரங்கள் என்பதிலிருந்தும் அவர்களின் தோற்றத்திலிருந்தும் எல்லாரும் உயர் பதவிகளில் உள்ளவர்கள் என்று ஊகிக்கலாம்.

''பகைவர்களான இவர்கள் இங்கு எதற்காக வந்திருக்கிறார்கள்?'' என்று வார்த்தையால் கேட்காமல் பார்வையால் வினவிய தன் சகோதரியைப் பார்த்து அலைகளைப் புரள விட்டுச் சிரித்தாள் துங்கபத்திரை. அதில் வேதனைதான் கலந்திருந்தது.

''விஜயநகர சாம்ராஜ்யத்தின் முடிசூடா மன்னராக இருந்து ஆட்சி செலுத்தி வரும் அரவீடு ராமராயரின் அருமை மகன் இறந்த செய்தி கேட்டுத் துக்கம் விசாரிக்க நேரிலேயே வந்திருக்கிறான் பீஜப்பூர் சுல்தான் அலி அதில்ஷா ! விந்தையாக இருக்கிறதல்லவா?'' என்று கேட்டாள் துங்கபத்திரை.

''பகையரசனும் நட்பை நாடி வருவதென்றால் அது உன் மகனின் திறமையைத் தான் காட்டுகிறது. பாமினி சுல்தான்கள் ஐவருமே நாளைக்கு அரவீட்டு ராமராயரின் தயவைத் தேடி ஓடி வந்தாலும் வருவார்கள். அப்படி அவர்களை ஆட்டி வைக்கும் ஆற்றல் அவரிடம் இருக்கிறது. அதை எண்ணிப் பெருமைப்படவல்லவா வேண்டும்?'' என்றாள் கிருஷ்ணை. தங்கையின் பாக்கியத்திலே பொறாமைகூட அவள் பேச்சில் தலைநீட்டியது.

''என் மக்களால் எனக்குப் பெருமை தான் சகோதரி. ஆனால் அந்த ஆற்றலின் பின்னால் அபாயமும் உள்ளதே. அதை நினைக்கும் போதுதான் பயமாக இருக்கிறது....'' நீண்டதொரு பெருமூச்சுக்குப் பின் தொடர்ந்தாள் துங்கபத்திரை. ''எனக்கு நேரமாகிறது. ஏனோ என் மனத்தில் அமைதி போய்விட்டது. அளவுக்கு மீறிய செல்வாக்கும் வசதியும் வாழ்வும் வந்தாலே இந்த அவஸ்தைதான் போல் இருக்கிறது. அரண்மனைக்குப் போகிறேன். இன்னும் என்ன அதிசயங்களை யெல்லாம் காணப் போகிறேனோ?'' உடலைச் சிலிர்த்துக் கொண்டாள் துங்கபத்திரை.

''நீ கொடுத்து வைத்தவள். அரண்மனைக்குள்ளே அந்தப்புரம், உத்தியான வனம், ஏன், அரசரின் அந்தரங்கக் கூடங்கள் வரையும் நீ போகலாம். அங்கேயுள்ள அழகிகளைக் கண்டு மகிழலாம். செய்குன்றங்களிலும் நீரூற்றுக்களிலும் உன்னைக் கொண்டு போய் அப்படி நிரப்பி இருக்கிறார்கள். உலகிலே வேறு எந்த நதிக்கு இத்தனை சலுகையும் பெருமையும் கிடைத்திருக்கின்றன சொல் பார்க்கலாம்?'' என்றாள் கிருஷ்ணை.

ஆனால் அவளுக்குப் பதில் சொல்லிக் கொண்டு நிற்கவில்லை பத்திரை. தன் பாக்கியத்தைக் கண்டு சகோதரியின் உள்ளத்திலே பொறாமைப் பாசி படருவதை உணர்ந்து பக்குவமாக நகர்ந்து கொண்டாள்.

பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்திலே பாரதத்தின் தென் பகுதியில் நான்கு வல்லரசுகள் சிறப்புற்றிருந்தன. தபதி–கோதாவரி நதிகளுக்கிடையிலுள்ள நிலப் பகுதியை யாதவர்கள் ஆண்டு வந்தார்கள். இவர்களின் தலைநகர் தேவகிரி. கிழக்கே கோதாவரிக்கும் கிருஷ்ணா நதிக்கும் இடைப்பட்ட மாநிலத்தை ஆண்டவர்கள் காகதிய வம்சத்தினர். இவர்களின் தலைநகர் வாரங்கல். துங்கபத்திரையையும் காவிரியையும் எல்லையாகக் கொண்ட பெரும் நிலப் பரப்பை ஹொய்சலர் ஆண்டு வந்தார்கள். மூன்று நூற்றாண்டுகளாக வலிமை பெற்றிருந்த சோழப் பேரரசை விழுங்கியவர்கள் இந்த ஹொய்சலர்கள். இவர்களின் தலைநகரம் துவாரசமுத்திரம். நான்காவது பேரரசு தெற்கே மதுரையைத் தலைநகராகக் கொண்டு வாழ்ந்த பாண்டியர்களுடையது. சோழர்களின் புகழ்மங்கி இருந்த காலம் அது.

இந்த நான்கு பேரரசுகளும் செல்வப் பெருக்கிலே திளைத்தன. இந்த நாலு பேரரசர்களின் நல்லாட்சியிலே நாடு நாகரிகத்திலே மேம்பட்டிருந்தது. பொன்னும் வெள்ளியும் நவரத்தினங்களும் மலிந்திருந்தன. இந்த நான்கு பேரரசர்களும் சைவ, வைணவ, ஜைன, பௌத்த சமயங்களை ஆதரித்து அவற்றின் கோயில்களுக்கு மானியங்களை வாரி வழங்கி மகிழ்ந்திருந்தனர். கோயில்களின் கூரைகளைத் தங்கத்தால் மூடினார்கள். கோயில் தூண்களைத் தங்கம், வெள்ளி, தாமிரம் போன்ற உலோகங்களால் அலங்கரித்திருந்தார்கள். அரண்மனைப் பண்டாரங்களோ பணத்தில் நிரம்பி வழிந்தன.

அந்நியர்களின் படையெடுப்பைப் பற்றிய கவலையின்றிக் கலைகளை வளர்த்துக் கொண்டிருந்த காவலர்களின் இந்த அமைதியான ஆனந்த வாழ்வுக்கு முடிவு காலம் ஏற்பட்டது. செல்வம் கொழிக்கும் தென்னகத்துக் கோயில்களின் சிறப்பையும், அவற்றில் பொன்னும் பொருளும் அணி மணிகளும் குவிந்து கிடப்பதையும் பற்றிக் கேள்விப்பட்

உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.

கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டமில்லாததுதான்.

இளமையில் வழுக்கை

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மென்ட் K-2, சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1

ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.

Silvikrin

சில்விக்ரீன்—கேச ஆரோக்கியத்துக்கான வழி

SP/1/P/7/64

டான். டெல்லியில் ஆட்சி செலுத்தி வந்த முஸ்லிம் பேரரசன் அலாவுதீன். பொன் வேட்டையாடிப் பொருள் சேர்ப்பதில் புகழ் பெற்றவனான அவன் விந்திய மலையைத் தாண்டித் தென்னகத்தின் மீது படையெடுத்தான். தேவகிரி அரசனை அடி பணிய வைத்து அவனிடமிருந்து விலை மதிப்பற்ற நகைகளையும் பொற் குவியல்களையும் கொள்ளையிட்டு அள்ளிக் கொண்டு ஆரவாரத்துடன் டெல்லிக்குத் திரும்பினான்.

இந்த வெற்றி அவன் பேராசையை வளர்த்தது. ருசி கண்ட பூனையல்லவா? மிகப் பெரும் படையுடன் மாலிக்கபூர் என்பவனைத் தென்னாட்டுக்குச் சென்று கொள்ளையடித்து வருமாறு அனுப்பினான். தென்னகத்தின் போதாத காலம் என்றுதான் கூற வேண்டும். எந்தத் தென்னக மன்னராலும் அந்த முஸ்லிம் கொள்ளைக்காரனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. மதுரை வரை முகமதியர்களின் ஆட்சிக்குட்பட்டது. நாட்டில் அமைதி குலைந்தது. முஸ்லிம்கள் இந்துக்களைச் சொல்ல முடியாத கொடுமைகளுக்கு உள்ளாக்கினார்கள். கணக்கற்ற கோயில்கள் கொள்ளையடித்து இடித்துத் தள்ளப்பட்டன. அவர்கள் இந்துக்கள் என்ற ஒரே காரணத்துக்காக ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

பண்டிகைகளும் விழாக்களும் நிறுத்தப்பட்டன. இந்துக்களை விலங்குகளைப் போல வேட்டையாடினார்கள் முகமதியர்கள். மதுரையை ஆண்ட கியாகதீன் என்ற கிராதகன் தினந்



தோறும் குற்றமற்ற இந்துக்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டு களிப்பதையே தனது கடமையாகக் கொண்டிருந்தான். அனலிடைப் புழுவெனத் துடித்தார்கள் இந்துக்கள். தங்கள் உயிர்களையும் உடைமைகளையும் காக்கத் தக்க வலிமை மிக்கதொரு தலைவன் தோன்ற மாட்டானா என்று தவம் கிடக்கலானார்கள். அவர்களின் தவம் பழுத்துப் பலிக்க வேண்டிய காலமும் நெருங்கிக் கொண்டிருந்தது.

ஹொய்சல மன்னர்களிடம் புகழ்பெற்ற படைத் தலைவனாக விளங்கினான் சங்கமன் என்பவன். இவனுக்குப் பஞ்சபாண்டவர்களைப் போல ஐந்து புத்திரர்கள் பிறந்தார்கள்.

ஹரிஹரன், கம்பணன், புக்கன், மாரப்பன் முத்தப்பன் என்பது இவர்கள் பெயர். இவர்களுள் ஹரிஹரரும் புக்கரும் காகதீய அரசனான பிரதாப ருத்ரனிடம் அரச பண்டார அதிகாரிகளாக இருந்தனர். காகதீய அரசு மாலிக்கபூரின் படையெடுப்பினால் வீழ்ச்சியடையவே இவ்விருவரும் துங்கபத்திரையாற்றங்கரையில் உள்ள காம்பிலி மன்னனிடம் சென்று மண உறவு ஏற்படுத்திக் கொண்டு வாழ்ந்து வரலானார்கள்.

அல்லாவுதீனுக்குப் பின் கியாஸுதீன் துக்ளக் டில்லி அரசேறினான். தென்னகத்தில் துக்ளக்கின் பிரதிநிதியாக இருந்த இவனுடைய அத்தை மகனான பஹாவுதீன் புரட்சிக் கொடி தூக்கினான். பஹாவுதீனை அடக்கத் துக்ளக் தென்னகத்துக்கு வந்தான். பஹாவுதீன் பயந்தோடிக் காம்பிலி மன்னனிடம் சரணடைந்தான். துக்ளக்கா விடுவான்! முடிவு? பஹாவுதீனும் காம்பிலி மன்னரும் களத்தில் மாண்டனர். காம்பிலி மன்னரிடம் சேவை செய்து வந்த ஹரிஹரரும் புக்கரும் சிறைப்பட்டனர்.

சிறைப்பட்ட அரச குடும்பத்தினர் டெல்லிக்கு அனுப்பப்பட்ட போது அங்கு இந்துக் கைதிகள் முஸ்லிம் மதத்தைத் தழுவும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். ஹரிஹரரும் புக்கரும் முஸல்மான்களாயினர். இவர்களால் ஒரு மாபெரும் இந்து சாம்ராஜ்யத்தை உருவாக்க விதி திட்டமிட்டிருந்ததால் மதம் மாற வற்புறுத்தப்பட்ட போது மனமுடைந்து தற்கொலை செய்து கொள்ளும் முடிவை அவர்களிடம் அது உருவாக்கவில்லை. உடலால் உருமாறினாலும் உள்ளத்தால் மாறுபடாத இந்துக்களாகவே திகழ்ந்தார்கள் அவ்விருவரும். இன்று கட்டுண்டோம்; பொறுத்திருப்போம் என்று காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

அந்தக் காலமும் வந்தது.

இஸ்லாத்தைத் தழுவிய இந்துக்களிடம் துக்ளக் பெருமதிப்பு வைக்கலானான். ஹரிஹரரும் புக்கரும் துக்ளக்கின் அன்புக்குப் பாத்திரமாயினர். சக்கரவர்த்தி அசோகனுக்குப் பிறகு அகண்ட இந்தியாவைத் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்த அடுத்த மன்னன் துக்ளக்தான். ஆனால் பரந்த பாரதத்தை நிர்வகிக்கத் துக்ளக்கினால் முடியவில்லை. அன்பினால் ஆட்சி புரிந்த அசோகனால் அது சாத்தியமாயிற்று. அதிகாரத்தினால் அடக்கியாள முயன்ற துக்ளக்கினாலோ அது இயலாமற் போயிற்று. அவரால் ஆங்காங்கு நியமிக்கப்பட்ட மாகாணத் தலைவர்கள் கலகம் விளைத்துத் தாங்களே தலைவர்களாக விரும்பினர். மதம் மாறிய இந்துக்களிடம் மன்னர் காட்டிய அன்பும் அவர்களுக்கு அளித்த சலுகைகளும் பரம்பரை முஸ்லிம் பிரபுக்கள், படைத் தலைவர்களிடையே மனக் கசப்பை வளர்த்தன.

ஹொய்சளர்களின் வழி வந்த மூன்றும் வல்லாள மன்னன் துக்ளக்கின் இந்தப் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தென்னகத்தில் இழந்த தன் ஆதிக்கத்தை நிலைநாட்டப் புரட்சிக் கொடி தூக்கினான். அவனை அடக்கி ஒடுக்கத் தன் அன்புக்குப் பாத்திரர்களான மதம் மாறிய ஹரிஹரரையும் புக்கரையும் ஒரு பெரும்படையுடன் அனுப்பி வைத்தான் துக்ளக். இந்துக் கைதிகளாக வடநாடு சென்ற சகோதரர் சுதந்திரம் பெற்ற முஸ்லிம் பிரபுக்களாகத் தென்னகம் திரும்பினர். வல்லாளன் விரட்டப்பட்டான். காம்பிலி உள்ளிட்ட கர்நாடகத்துக்கு இவர்களையே பிரதிநிதிகளாக்கினான் துக்ளக். தாங்கள் எதிர்பார்த்திருந்த தருணம் வந்து விட்டது என்பதை உணர்ந்தார்கள் சகோதரர்.

அத்துவைத மத ஸ்தாபகரான ஆதிசங்கரர் நிறுவிய மடங்களுள் கர்நாடகத்தில் உள்ள சிருங்ககிரி மடம் பிரசித்தம். கல்வி கேள்விகளில் சிறந்த வேத விற்பன்னர்களாகவும், தவசீலர்களாகவும் விளங்கிய துறவிகளே இம்மடத்தின் தலைவர்களாகி மக்களின் நல் வாழ்வுக்கு வழிவகுத்துக்கொடுத்துக் கொண்டிருந்தார்கள். துங்கபத்திரை, கோதாவரி, கிருஷ்ணா ஆகிய ஆறுகளின் அருகில் வாழ்ந்த சாம்ராஜ்யாதிபதிகள் இந்த மடத்துக்கு மரியாதை செலுத்தி வழிபட்டு வந்தார்கள்.

சளுக்கியர், ஹொய்சளர், யாதவர் ஆகியவர்களின் ஆதரவுடன் வளர்ந்து வந்த இந்த மடத்தின் இருபத்தி இரண்டாவது குருவாக ஒரு மகான் பட்டத்துக்கு வந்தார். அவரது பெயர் வித்யாரண்யர். வேதங்களில் பெரும் புலமையும், தர்க்கவாதங்களில் வல்லமையும் பெற்றிருந்த இவர் கம்பீரமான தோற்றமுடையவர். பிற மதத்தின் ஊடுருவல் வலுத்து விட்ட அன்றையச் சூழ்நிலையில் தாம் தனிமையாக இருந்து யோகம் பயின்றால் மட்டும் போதாது; அரசியலிலும் அக்கறை காட்ட வேண்டும் என்று எண்ணினார். அவர் காலத்தில் விந்திய மலைக்குத் தெற்கே முகமதியப் படையெடுப்பால் ஏற்பட்டிருந்த அரசியல் குழப்பங்களால் இந்து மதத்துக்கு சூழ்ந்திருந்த பேராபத்து ஆத்ம ஞானி ஒருவர் அரசியல் ஞானியாகவும் செயலாற்றும் தேவையை ஏற்படுத்தி இருந்தது. இறைப் பற்றுடன் சமய உணர்ச்சி குன்றாத மனோதிடத்தையும் மக்களுக்குப் போதிக்கும் அவசியம் ஏற்பட்டது. இவரை அரசியல் முனிவர் என்றே அக்காலத்தவர் வர்ணித்தார்கள்.

தேச பக்தியால் கனன்று கொண்டிருந்த நெஞ்சுடன் ஹரிஹரரும் புக்கரும் இந்த முனிவரிடம் வந்தார்கள். தோற்றத்தால் முஸ்லிமாக இருக்கும் தங்கள் கதையை அந்தப் பெரியவரிடம் கூறினார்கள். முகமதியர்களின் கொடுமையிலிருந்து இந்துக்களையும் இந்து தர்மத்தையும் பாதுகாக்கத் தவிக்கும் தங்களுக்கு உதவி புரிய வேண்டும் என்றும் அவரிடம் கேட்டுக் கொண்டார்கள். இதே எண்ணத்துடன் ஆனால் அதைச் செயல்படுத்தத் தக்க பாத்திரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த வித்யாரண்யர் மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு உதவ மனம் கொண்டார்.

இதிகாச புருடனான வானர மாவீரன் வாலி வாழ்ந்த பம்பாசரஸ் என்ற இடத்துக்கு வந்தார் வித்யாரண்யர். துங்கபத்திரையின் தென் கரையில் உள்ள இந்தப் புண்ணிய பூமியையே புதிய பாரத சாம்ராஜ்யத்துக்கு ஏற்ற ராஜதானியாக்கக் கருதினார் முனிவர். நல்ல நாளில் தலைநகர அமைப்புத் திட்டம் வகுக்கப்பட்டது. ஹரிஹரரும் புக்கரும் வித்யாரண்யரால் முறைப்படி ஹிந்துக்களாக மதம் மாற்றப்பட்டு நவ பாரதப் பேரரசின் நிர்மாணத்தில் ஊக்கப்பட்டார்கள். இந்த நல்ல காரியத்துக்குத் துங்கபத்திரையும் தனது காணிக்கையைச் செலுத்தினாள். தனது இதயமான மலைக் குகையொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெரும் புதையலை அவர்களுக்குக் காட்டிக் கொடுத்தாள். அந்தப் பெருஞ் செல்வத்தின் உதவி கொண்டு புதிய நகரின் அமைப்பு வேலை வேகமாக வளரலாயிற்று. வித்யாரண்யர் வழிகாட்டியவாறு அமைக்கப்பட்ட அந்தப் புதிய நகரத்துக்குச் சங்கமன் மக்கள் வித்தியாநகரம் என்றே பெயரிட்டனர். நாளடைவில் அதுவே விஜயநகரமாயிற்று.

வெற்றிநகரம் தோன்றிய அதே சமயத்தில் அதன் வீழ்ச்சிக்கும் விதி வேறோரிடத்தில் அஸ்திவாரமிட்டது. இஸ்லாமிய எதிர்ப்புப் பேரரசாக விளங்கப் போகும் விஜயநகரத்துக்குப் பிறந்த தின விழாக் கொண்டாடிய

வசீகரத்தையும், பெருமிதத்தையும் கொடுக்கும் நறுமணம் உங்களுக்கு பாமாலிவ் லவண்டர் டால்க் உபயோகிப்பதால்.

உங்களுக்கு மிகவும் பிடித்தமான லெண்டுகள்—உங்களுக்காகவே மீண்டும் உருவாக்கப்பட்டிருக்கின்றன!

ஒரு காலத்தில் உலக அழகுக் கேந்திரங்களிலி ந்து இறக்குமதி செய்யப்பட்டவையும், உங்களுக்கு மிகவும் பிடித்தமானவையுமான லெண்டுகளின்றி இனி நீங்கள் தவிக்கவேண்டாம்... இன்று பாமாலிவ் லவண்டர் டால்க் ட்டுமே அளிக்கும் வசீகர நறுமணத்தினுலும், பெருமிதத்தினுலும் உங்கள் உடலைச் சொகுசாகப் பராமரிக்க முடியும். பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பு முழுவதும் தூவிக் கொண்டு, சூழ்ந்து நிற்கும் அதன் இனிய வசீகர நறுமணத்திலுல் களிப்படையுங்கள்.

எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும் நறுமணம் சூழ்ந்த அழகுடனுமிருக்க பாமாலிவ் லவண்டர் டால்க்.

மற்றும் கிடைக்கும் பாமாலிவ் டால்க் டிலக்ஸ்—
மயக்கும் 17 லெண்டுகளின் அற்புதமான கலவை

டாடாவின் ஷாம்பு

அபூர்வமான பளபளப்பைத் தருகிறது.

நவநாகரீக மாதர்கள் டாடாவின் ஷாம்புவையே உபயோகிக்கின்றனர். காரணம் கூந்தலைச் சுத்தம் செய்வதற்கெனவே விசேஷமாய்த் தயாரிக்கப்படுகிறது. அது. கூந்தலைத் துப்புரவாகவும், சுலபமாயும் சுத்தம் செய்கிறது டாடாவின் ஷாம்பு. கொழிக்கும் அதன் நுரை கூந்தலிலுள்ள தூசியை அகற்றி, கூந்தலைப் பட்டுப்போன்ற மென்மையுடனும். பளபளப்புடனும் மிளிரச்செய்கிறது. நறுமணத்திற்கோ கேட்கவேண்டாம். கூந்தல் சுத்தமாகவும், நறுமணத்துடனும் இருக்க நீங்களும் டாடாவின் ஷாம்புவை உபயோகியுங்கள்.

எழில்மிக்க, மிருதுவான, பரிமளக் கூந்தலுக்கு — டாடாவின் ஷாம்பு!

BI-TS-69 TAM

அடுத்த ஆண்டிலே அதற்கு வடதிசையில் ஒரு முஸ்லிம் பேரரசும் எழுந்தது.

தேவகிரி மாகாண ஆட்சியாளர் துக்ளக்கின் பிடியிலிருந்து விடுபட்டு இந்தப் பேரரசை நிறுவினார்கள். ஹஸன்கங்கு என்ற சபர்கான் தன்னையே தென் மாகாண அரசனுக்கிக் கொண்டு ஆரம்பித்த அந்த ராஜ்யமே பாமினிப் பேரரசாக வளர்ந்தது.

விஜயநகரப் பேரரசு ஒரு முனிவரின் பெயரில் எழுந்தது எனில், விந்தையிலும் விந்தையாகப் பாமினி ராஜ்யமும் ஓர் அந்தணரின் பெயராலேயே எழுந்தது. ஆதியில் தங்களுக்கு உதவி புரிந்த ஒரு பிராமணரின் ('பாமன்' என்று முஸ்லிம்கள் பிராமணரைக் குறிப்பிடுவர்) நினைவாக இந்த சாம்ராஜ்ய ஸ்தாபகர்கள் பேரரசுக்கு 'பாமினி' என்றே பெயரிட்டார்கள். வடமொழியில் பாமினி என்றால் பொலிவு பெற்ற நங்கையைக் குறிக்கும். அதற்குப் பொருத்தமாகவே பாமினி அரசு நாளுக்கு நாள் பொலிவு பெற்றுச் சீரும் சிறப்புமாகத் திகழ்ந்தது.

பாமினி அரசின் பயங்கரமான தாக்குதல்களையும் படுகொலைகளையும் சமாளித்தபடியே தன்னையும் வளர்த்துக் கொண்டது விஜயநகரம். தன் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் பல்லாயிரக் கணக்கான இந்துக்களின் ரத்தத்தைச் சிந்த வேண்டியிருந்தது. எத்தனை போர்கள், எத்தனை பூசல்கள், எத்தனை படையெடுப்புக்கள்? வெற்றியும் தோல்வியும் மாறி மாறி விளையாடின. பாமினி ராஜ்யத்தின் படையெடுப்புக்கு ஈடு கொடுத்தபடியே விஜயநகரம் தன்னைப் பெருக்கிக் கொண்டது.

விஜயநகரின் முதல் பரம்பரையான சங்கமன் மரபு முடிவடைந்து இரண்டாம் பரம்பரையினரான சாளுவ மரபின் ஆட்சி ஆரம்பமானபோது பாமினி ராஜ்யத்தில் பிளவு உண்டாகி அது ஐந்து தனியரசுகளாகச் சிதறலாயிற்று. ஆனாலும் இந்த ஐந்தில் பீஜப்பூர், அகமது நகர், கோல்கொண்டா ஆகிய மூன்றும் வல்லரசுகளாகவே விளங்கி வம்புகள் செய்து வந்தன. கிருஷ்ண தேவராயரின் ஆட்சியிலேதான் பாமினி சுல்தான்களின் நச்சுப் பல் பிடுங்கப்பட்டு பெட்டிப் பாம்பாக அடங்கிக் கிடந்தனர். விஜயநகரப் பேரரசின் பொற்காலம் என்றே இதைக் கூறவேண்டும்.

சீகோதரி கிருஷ்ணையின் வார்த்தைகளை அசைபோட்டபடியே அரண்மனைக்குள்ளே செல்லும் திருற்றினுள் புகுந்தாள் துங்கபத்திரை. 'இன்றைக்கு இத்தனை சலுகையும், பெருமையும், செல்வாக்கும் எனக்கு இருக்கிறது என்று பொறாமைப் படுகிறளே அதற்கு நான் எத்தனை தியாகங்களைப் புரிய வேண்டியிருந்தது. என் குழந்தைகளில் எத்தனை பேரைப் பலியிட்டிருக்கிறேன் என்பதையெல்லாம் அவள் எண்ணிப் பார்க்கவில்லையே' என்று நினைத்தபோது பட்டுப்போன துன்பங்கள் அவள் மனத் திரையில் படமையாகக் காட்சியளிக்கலாயின. அந்த நினைவுகளில் லயித்தபடியே தன்னைச் சுற்றி எழுந்து நிற்கும் தன் பாக்கியங்களான மாட மாளிகைகளையும் கூட கோபுரங்களையும் கல்லிலே வடித்தெடுத்துக் கலைக் கோயில்களாகத் திகழும் ஆண்டவனின் உறைவிடங்களான ஆலயங்களையும், வெற்றி நகரத்தின் விசாலமான வீதிகளிலே குவிந்து கிடக்கும் தன்னிகரற்ற இந்தியப் பொருள்களை வாரிக் கொண்டு போவதற்காகக் காத்திருக்கும் அயல்நாட்டு வணிகப் பெருமக்களையும் கண்டபோது அவள் உள்ளம் பூரித்தது. உடலில் புல்லரிப்பு உண்டாயிற்று. கண்களில் நீர் திரையிட்டது. அதைத் அடுத்து நீண்டதொரு பெருமூச்சும் தொடர்ந்தது. அருமையும் பெருமையுமாக வளர்த்த மகன் ஆனந்த வாழ்க்கை நடத்துவதைக் கண்ட தாய் எப்படி, தன் கண்மணி இதேபோல் ஆயிரம் காலம் வாழ வேண்டுமென்று வாழ்த்திக் கண்கலங்குவாளோ அந்த நிலையில்தான் இருந்தாள் துங்கபத்திரை.

அதே சமயம் வேங்கட விலாச மண்டபத்திலே ராமராயரின் தம்பி திருமலையின் குரல் வெடித்தது. எட்டிப் பார்த்த பத்திரை பதறிப் போனாள். அங்கே அவள் கண்ட காட்சி?

ராமராயரின் தம்பிகளான திருமலையும் வேங்கடாத்திரியும் மட்டுமே அந்த ஆலோசனை மண்டபத்தில் இருந்தார்கள். திருமலை எரிமலையாகக் காணப்பட்டான். வேங்கடாத்திரியோ வழக்கமான ஆழத்துடன் அமைதியாக இருந்தான். அவ்விருவரையும் சேர்த்துப் பார்த்த துங்கபத்திரை எதையோ நினைத்துக் கொண்டு துணுக்குற்றாள்.

''நான் கேள்விப்படுவது உண்மைதானா வேங்கடாத்திரி? நம் அண்ணா பீஜப்பூர் சுல்தான் அலி அதில்ஷாவைத் தம் மகனாகவே வரித்துக் கொண்டாராமே?'' அவன் உள்ளத்தில் கொப்பளித்துக் கொண்டிருக்கும் கோபம் அந்த வார்த்தைகளின் அழுத்தத்தில் வெளிப்பட்டன.

''ஆமாம், உன் மைத்துனியும்கூடத்தான் அலி அதில்ஷாவை 'அப்பா மகனே' என்று அன்பொழுகக் கூப்பிட்டு...ம்... ஆலிங்கனம் செய்துகொள்ளாத குறைதான் போயேன்'' என்றான் வேங்கடாத்திரி எங்கோ பார்த்துக் கொண்டு. அண்ணாவின் அனல் தெறிக்கும் விழிகளைப் பார்க்க மனமில்லையோ அல்லது பயமோ தெரியவில்லை.

''பரம வைரியான ஒருவனை, அதுவும் ஒரு மகமதியனைத் தன் மகனுக்கிக்கொள்ளுவதற்கு இந்த விஜயநகரத்துச் சொத்தென்ன அப்படி வாரிசில்லாமலா போய்விட்டது? அண்ணாவின் துணிச்சல் வரவர அளவுக்கு மீறிப் போய்க் கொண்டிருக்கிறது.''

''அண்ணாவை நீங்கள் கேட்டீர்களானால் அத்தனையும் அரசியல் சூழ்ச்சிகள் என்பார்'' என்ற வேங்கடாத்திரி எழுந்து உலாவியபடியே ''ஒருவேளை அது உண்மையாகவும் இருக்கலாம்'' என்றான்.

''சூழ்ச்சி...சூழ்ச்சி! இவையெல்லாம் சாம்ராஜ்யத்தை வீழ்ச்சியின் வாசலிலே கொண்டு போய்த் தள்ளத்தான் போகின்றன'' என்று பற்களைக் கடித்து வலக்கையை முஷ்டியாக்கி இடக் கரத்திலே குத்தியபடி கூண்டுப் புலியென உலாவினான் திருமலை. அவனது உள்ளங் கையைப் போலவே உள்ளத்திலும் ரத்தம் குபு குபு வென்று பாயலாயிற்று.

(தொடரும்)



நேதாஜிக்கு ஒரு நினைவுச்சின்னம்

கே. ஆர். என். சுவாமி

[நேதாஜி அமரரான தினம் ஆகஸ்டு 18உ வருகிறது. அதை நினைவுகூரும் வகையில் இக் கட்டுரையை வெளியிடுகிறோம். — ஆசிரியர்.]

கல்கத்தாவில் 1954ம் வருஷம் ஜனவரி மாதத்தில் ஒரு நாள் பாபு ராஜேந்திர பிரசாத் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் வருங் காலத்தில் நமது சந்ததியர்களுக்கு நேதாஜி சுபாஷ் போஸ் பற்றியும், அந்நிய ஆதிக்கத்திலிருந்து பாரத நாடு விடுதலை பெற அவரது தளராத முயற்சிகளைப் பற்றியும் தெரியாமலே போய் விடுமோ என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது என்றார். நியாயந்தானே? நேதாஜியின் நினைவைப் போற்றும் வகையில் நாம் என்ன செய்திருக்கிறோம் என்று யோசித்துப் பார்ப்பது அவசியமும் பொருத்தமும்தானே ?

அவரது நினைவைப் புனிதமாக்க இரண்டு விதங்களில் முயற்சிகள் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன. முதலாவது நேதாஜியின் குடும்பத்தாரே மேற்கொண்டுள்ள பணிகள்.

நேதாஜி விட்டுச் சென்ற அவரது சொந்த உடைமைகள் பலவற்றை 'நேதாஜி பொருட் காட்சி சாலை'யாக அமைப்பதில் அவரது மருமக்கள் இருவரும் மிகுந்த பிரயாசை எடுத்துக் கொண்டுள்ளனர். கல்கத்தாவில் உள்ள நேதாஜியின் வீட்டுக்கு நேதாஜி பவன் என்ற பெயரிட்டு அதிலே, நேதாஜி பாரத நாட்டிலிருந்து தப்பிச் செல்லப் பயன்படுத்திய மோட்டார் கார், ஜெர்மனியிலிருந்து ஜப்பானுக்கு நீர் மூழ்கிக் கப்பலில் அவர் பிரயாணம் செய்த போது எடுக்கப்பட்ட புகைப் படங்கள் போன்ற பல பொருட்களைக் கண் காட்சியாக வைத்திருக்கின்றனர்.

கட்டாக் நகரில் நேதாஜி பிறந்த வீட்டை ஒரிஸ்ஸா அரசாங்கம் விலைக்கு வாங்கி, அதில் 'நேதாஜி சேவா சதன்' என்ற பெயரில் ஒரு சமூக — கலாச்சார நிறுவனம் இயங்க வழி வகுத்திருக்கிறது. இந்த மாளிகையில் நேதாஜி பிறந்த அறை ஒரு புனிதமான இடமாகப் போற்றப்பட்டு வருகிறது.

பாரத அரசாங்கமும் நேதாஜியின் நினைவைப் போற்ற ஆவன செய்து வருகிறது. அவரது சொந்த உடைமைகள் பலவற்றைச் சேர்த்து வருவதுடன், தீரர் நேதாஜியின் வீரப் போர் குறித்து அதிகார பூர்வமானதும் கற்பனைக் கலப்பு சிறிதும் இல்லாததுமான உண்மைச் சரித்திரத்தை எழுத முயன்று வருகிறது. இதற்காக இந்திய சரித்திரத்துக்கான ஆதாரங்களைச் சேகரித்துப் பத்திரப்படுத்த அமைக்கப்பட்ட ஒரு குழு (Indian Historical Records Commission) நேதாஜியின் வாழ்க்கையைப் பற்றியோ அல்லது அவரால் உருவாக்கப்பட்ட இந்திய தேசிய ராணுவத்தின் நடவடிக்கைகள் பற்றியோ டைரிக் குறிப்புக்களோ, புகைப்படங்களோ பிறவோ யாரிடமேனும் இருந்தால் அவர்கள் அவற்றை இத்தகைய சரித்திர, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தஸ்தாவேஜுகளைச் சேகரித்து வைப்பதற்கென்றே உருவாகியுள்ள நேஷனல் ஆர்சிவ்ஸுக்கு (National Archives) அனுப்பி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறது.

பாரத நாடு சுதந்திரம் பெற்றதும் ஜப்பானிய வானொலியை அணுகி நேதாஜியின் குரல் ஒலிப்பதிவு செய்யப்பட்டிருக்கிறதா என்று கேட்டது. ஆனால் ஜப்பானிய ஒலிபரப்பு நிலையம் 1945க்கு முன்னால் செய்யப்பட்ட ஒலிப்பதிவுகளெல்லாம் யுத்தத்துக்குப் பின் ஏற்பட்ட புதிய ஜப்பானிய அரசாங்கத்தால் அழிக்கப்பட்டு விட்டன என்று பதில் கூறி விட்டது. எனினும் 1956 வரை தேடித் துருவிப் பார்த்து ஜப்பானிய அரசாங்கம் நாலு நிமிஷ நேரமே ஓடும் செய்திப் படச் சினிமா ஒன்றினைக் கண்டெடுத்து அதனை பாரத நாட்டுக்குத் தன் அன்பளிப்பாகத் தந்தது. இதில் சுபாஷ் போஸ் சிங்கப்பூரில் நமது இந்திய தேசிய ராணுவத்தினர் முன்னால் சொற்பொழிவாற்றுவது படமாக்கப்பட்டுள்ளது. இதிலும் நேதாஜியின் பேச்சு ஒரு நிமிஷ நேரம்தான் கேட்கிறது. இதை அகில இந்திய ரேடியோ ஒலிப்பதிவு செய்து பத்திரப்படுத்தி இருக்கிறது. இதைத் தவிர 1937ல் நேதாஜி ஹரிபுரா காங்கிரஸில் ஆற்றிய சொற்பொழிவுகளும் ரிக்கார்டுகளாகக் கிடைத்தன. இந்த ரிக்கார்டுகள் நிரந்தரமாக இருக்கக் கூடிய தன்மையன அல்லவாதலால் மீண்டும் அகில இந்திய ரேடியோ இதனை நல்ல முறையில் ஒலிப்பதிவு செய்து வைத்துள்ளது. சில வருஷங்களுக்கு முன்னால் தொண்ணூறு நிமிஷ நேரத்துக்கு ''நேதாஜியின் வரலாறு'' என்ற தலைப்பில் ஆகாஷ்வாணி ஒலிபரப்பிய ஒரு நிகழ்ச்சியில் நேதாஜியின் மருமக்கள்மார் இருவரும் பங்கெடுத்துக் கொண்டனர். இந்தியாவிலிருந்து நேதாஜி தப்பியோடிய போது அப்பயணத்தின் முதற் பகுதியில் இவ்விருவரும் அவருடன் இருந்தனர். மறக்க முடியாத அந்த நாட்களைப் பற்றி இருவரும் பேசினர். ஜெர்மனியி

லிருந்து மலேயாவுக்கு நேதாஜி நீர் மூழ்கிக் கப்பலில் துணிந்து தொண்ணூறு நாட்கள் பிரயாணம் செய்த போது அவருடன் இருந்த ஒரே இந்தியரான அபிட் ஹஸன் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை விவரித்தார். மலேயா வாழ் இந்தியர்களுக்கு பாரதத்தை அடிமைத் தளைகளிலிருந்து விடுவிக்கப் போராடுமாறு நேதாஜி விடுத்த அழைப்பும் இந்த வானொலி நிகழ்ச்சியில் இடம் பெற்றிருந்தது.

நேதாஜி பார்மோஸாவிலிருந்து விமானத்தில் கிளம்பிய போது அதுவே அவரது இறுதி யாத்திரையாகவும் அமைந்து விட்டது அனைவரும் அறிந்த விஷயம். அப்போது அவர் தம்முடன் இந்திய தேசிய ராணுவத்தின் சொத்தாகிய பல நகைகளையும் வைரங்களையும் உடன் எடுத்துச் சென்றார். இவை சில கோடி ரூபாய்கள் மதிப்புள்ளன. ஆனால் விமானம் பார்மோஸாவில் விழுந்து நொறுங்கிய போது எல்லாச் சொத்துக்களும் அழிந்து விட்டன. கொஞ்ச நஞ்சம் சிதறிக் கிடந்து கிடைத்த பொருட்களையெல்லாம் ஜப்பானிய அதிகாரிகள் நேதாஜியின் நம்பகமான மெய்காப்பாளரான கர்னல் ஹபிபுர் ரஹ்மானிடம் தந்தார்கள். இதை அவர் டோக்கியோவில் வாழ்ந்த ஓர் இந்தியப் பிரஜையான ராமமூர்த்தி என்பவரிடம் தந்தார். ராமமூர்த்தியிடம் இவை சுமார் ஆறு வருஷங்கள் வரை இருந்தன. பின்னர் தான் பாரத அரசாங்கம் அந்தச் சொத்தை இந்தியாவுக்காக அவரிடமிருந்து கோரிப் பெற்றது. இவை கிட்டத்தட்ட ஒரு லக்ஷம் ரூபாய் மதிப்புள்ளவையாய் இருக்கலாம். விபத்தினால் கருகிப் போன நகைகளும், உருகிய தங்கமும் புதுதில்லி ராஷ்டிரபதி பவனில் உள்ள தேசியப் பொருட்காட்சி சாலையில் இடம் பெற்றிருக்கின்றன.

தாய் நாட்டின் விடுதலைப் பணியில் உயிர் துறந்த இந்திய தேசிய ராணுவத்தினருக்காகச் சிங்கப்பூரில் நேதாஜி அமைத்த நினைவுச் சின்னம் பின்னால் அந்நகரம் பிரிட்டிஷ் ஆளுகைக்குட்பட்ட போது இடித்துத் தகர்க்கப் பட்டது. ஆனால் பழைய பகைமை உணர்ச்சிகள் மறைந்து சிநேக பாவம் உருவான புதிய சூழ்நிலையில் சிங்கப்பூரின் பிரதமர் டேவிட் மார்ஷல் 1950ல் அந்த நினைவுச் சின்னத்தை மீண்டும் எழுப்ப அனுமதி அளித்தார், ஒரு நிபந்தனையின் பேரில். இந்திய அரசாங்கம் அதற்காகும் செலவை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனை. ஆனால் இது குறித்தோ, மலேயாவில் நேதாஜியின் நினைவைப் போற்றும் வகையில் செய்யப் பட வேண்டிய காரியங்கள் என்று கூறப்பட்ட வேறு பல யோசனைகள் குறித்தோ இந்திய அரசாங்கம் அதிகமாகச் சிந்திக்கவோ, செயலாற்றவோ இல்லை.

இரண்டு வருஷங்களுக்கு முன்னால் பம்பாய் மேயர் ஸ்ரீ டோண்டே இருபத்தைந்து லட்ச ரூபாய் செலவில் நேதாஜியின் நினைவாக ஓர் ஆஸ்பத்திரியும், உருவச் சிலையும், பொதுமக்கள் குழுமி இருக்கக் கூடிய ஒரு மன்றமும் எழுப்ப வேண்டும் என்று தமது திட்டத்தை வெளியிட்டார். பொதுமக்கள் இந்நிதிக்குப் பெருமளவுக்குப் பணம் தந்திருக்கிறார்கள், இன்னமும் தந்து வருகிறார்கள். உருவச் சிலை அமைப்பதற்கு ஏற்ற நல்ல இடத்தையும் வாங்கியாகி விட்டது.

1937லேயே நேதாஜி வங்கக்காங்கிரஸ் கமிட்டி, தேசிய இளைஞர்கள் முன்னணி ஆகியவற்றின் காரியாலயங்களும், ஒரு சொற்பொழிவு மன்றமும், நூலகமும் இடம் பெறத்தக்க ஓர் ஐந்தடுக்கு மாளிகையைக் கல்கத்தாவில் எழுப்புவது பற்றி யோசித்து அதற்காக 32,000 ரூபாய் சேர்த்திருந்தார். இதற்கு 1938ல் ஸ்ரீ ரவீந்திரநாத் தாகூர் அஸ்திவாரக் கல் நாட்டியிருந்தார். முற்றுப் பெறுமல் இருந்த இந்தப் பணியைச் சுதந்திரத்துக்குப் பிறகு மேற்கு வங்க அரசாங்கம் பூர்த்தி செய்தது. 1958ல் இரண்டு லட்ச ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்ட இந்த மாளிகையில் காங்கிரஸ் கமிட்டியின் காரியாலயங்கள் இல்லை; நாட்டு விடுதலைக்காக உயிர்த் தியாகம் செய்தவர்களுக்கான நினைவுச் சின்னமாகவே விளங்குகிறது. இதன் சுவர்களில் தேசியத் தலைவர்களின் வண்ணத் திருவுருவங்கள் தீட்டப்பட்டுள்ளன. 2500 பேர் அமர்ந்திருக்கக் கூடிய பொது மன்றமும் உள்ளது. விடுதலைப் போராட்டம் பற்றி எழுதப்பட்ட நூல்கள் அனைத்தும் இங்கு சேகரிக்கப்பட்டுள்ளன. 1958ல் அன்றைய மேற்கு வங்க முதன்மந்திரி ஸ்ரீ பி. ஸி. ராய் இதனைத் திறந்து வைத்தார்.

இருந்தாலும் நீரர் நேதாஜியின் தலைமையில் நாட்டு விடுதலைக்காகப் போர் புரிந்து வீர மரணம் அடைந்த பல்லாயிரக்கணக்கான இந்திய தேசிய ராணுவத்தினருக்கென்று ஒரு நினைவுச் சின்னம் இல்லாதது ஒரு குறைதான். தம் பெயரால் மட்டுமே எந்த ஒரு நினைவுச் சின்னம் உருவாவதைவிட தமது ஆணைக்கிணங்கி அஞ்சாநெஞ்சத்துடன் போர் புரிந்த ராணுவத்தினரை மக்கள் எந்நாளும் மறக்காமல் இருக்க வேண்டும் என்பதைத்தான் நேதாஜியும் அதிகமாக விரும்புவார்.

TATA-FINLAY TEA
TATA-FINLAY TEA
நீங்களே ஒப்புக்கொள்வீர்கள்
டாடா-ஃபின்லே
தேயிலை
ஈடில்லாத தேயிலை!
புத்தம் புது தேயிலை
சுவையுள்ள தேயிலை
சிறந்த தேயிலை
டாடா-ஃபின்லே தேயிலை பருகுவீர்;
உன்னதத் தேயிலை இன்பம் எய்துவீர்!
பின்வரும் ஐந்து ரகங்களில் கிடைக்கிறது:
ப்ரெஸ்டிஜ் டார்ஜிலிங்-டின்களில்,
லலித்-பொன்னிற அட்டைப் பெட்டியில்
மிலாப்-வெள்ளி நிற அட்டைப் பெட்டியில்
பஹாதுர்-ஆரஞ்சு நிற அட்டைப் பெட்டியில்
ஷான்-நீல நிற அட்டைப் பெட்டியில்



அர்ஜென்ட் ஆபரேஷன்

கோமதிஸ்வாமிநாதன்

[மாலை வேளை. கொல்லைப் பக்கத்திலுள்ள கிணற்றடி. தியாகராஜன் முகம் முழுதும் சோப்பு நுரையைத் தடவிக் கொண்டு முகம் கழுவுவதில் ஈடுபட்டிருக்கிறான். அவன் மனைவி திரிபுரம் மெதுவாக வருகிறாள்.]

தியாகராஜன் (கண்களைத் திறவாமல்): யாரு! திரியா?

திரிபுரம் (முகவாய்க் கட்டையைத் தோளில் இடித்துக் கொண்டு): திரியுமாச்சு! விளக்குமாச்சு! பேரை முழுசாத்தான் கூப்பிட்டுத் தொலையுங்களேன். அப்படிக் கூப்பிடற போதும் கண்ணைத் திறந்து கொண்டு கூப்பிடுங்கள். எனக்குப் பதிலாக இப்போது இங்கே வேறு யாராவது வந்திருந்தால்.....

தியாகராஜன் (சோப்பு நுரையைக் கண்களிலிருந்து அகற்றி விட்டு): ....வந்திருந்தால் நூறு கலாட்டாவோடு நூற்றி ஓராவது கலாட்டா! வேறே என்ன இந்த வீட்டிலே!... இதோ பாரு திரி.....

திரிபுரம்: ...பெட்ரும் லைட்டுத் திரி! ஹரிக்கன் லைட்டுத் திரி! அப்படிக் கூப்பிடாதீங்கோன்னுதான் சொல்றேன்! உங்க தம்பிகளுக்கும் தம்பிகளோட ராணிகளுக்கும் கேலியா இருக்கும். நீங்க சொல்லாமலேயே நான் சினிமாவுக்கும் பீச்சுக்கும் திரியறேனும். நீங்க வேறே என்னை 'திரிதிரி'ன்னு உற்சாகப் படுத்தறேளாம்! அந்த நடு ராணி இருக்காளே! அவள் நையாண்டி பண்ணுறு!..... இங்கே மற்றதற்கெல்லாம் ஆயிரம் சென்சாரும் இரண்டாயிரம் ரேஷனும் இருந்தாலும் முழுப் பேரைச் சொல்லிக் கூப்பிடக் கட்டுப்பாடு இல்லையே !

தியாக: ரைட்டோ! திருமதி திரிபுர சுந்தரி தேவி அவர்களே! இதோ இரண்டு நிமிஷத்திலே நான் ரெடியாகி விடுவேன். பீச்சுப் பக்கம் போயிட்டு வரலாம்.

திரிபுரம்: நீங்க கிச்சுக் கிச்சு மூட்டினாலும் நான் சிரிப்பதற்குத் தயாரில்லை. பீச்சுக்குக் கிளம்பவும் ரெடியாக இல்லை. இன்றைக்கு அடுப்படிதான் பீச்! வெங்கலப் பானையில் கொதிக்கும் கஞ்சிதான் அலை! படைகளுக்குப் பொங்கிக் கொட்டும் வேலை தலையில் விழுந்திருக்கு !

தியாக: தலைவலி, வயிற்று வலின்னு டபாய்ச்சுப் பாரேன் வழக்கம் போல!

திரிபுரம்: இன்னிக்கு அந்த நடு ராணி முந்திக் கொண்டு விட்டாள். உங்க தம்பி வந்தவுடன் டாக்டர் வீட்டுக்குக் கிளம்பப் போறளாம்! பின்னாலேயே போய்ப் பார்த்தால் அந்த டாக்டர் சினிமாத் தியேட்டரில் குடியிருக்கிறரா, பாம்பே ஸ்வீட் ஸ்டாலில் டிஸ்பென்சரி நடத்துகிறரா என்று தெரியும்.

தியாக: நான்சென்ஸ்!

திரி: எனக்குத்தான் 'சென்ஸே' கிடையாதுன்னு எல்லாருமா இந்த வீட்டிலே முடிவு கட்டியிருக்கிறர்களே! கொழுக் கட்டை மாதிரி எப்போதும் உட்கார்ந்தே நேரத்தைக் கழிக்கிறேனும்! கொழந்தை மாதிரி உங்க கிட்டே கொஞ்சறேனும்!

தியாக: அவர்களெல்லாம் குந்துமணி மாதிரி துள்ளி ஓடுகிறர்களோ? திரிபுரம்...

திரி: சீக்கிரம் சொல்லுங்கோ! பேரை முழுசாச் சொல்ற போதே ஏதோ முக்கியமான விஷயம் சொல்லப் போகிறீர்கள் போல் இருக்கிறது!

தியாக: ஆமாம்! மகா முக்கியமான விஷயம்! பல பிரச்னைகளுக்கு முடிவு கட்டக் கூடிய விஷயமும்கூட! இப்படிக் கிட்டே வா, சொல்றேன்!

திரி (அருகில் வந்து கொண்டே): அந்தச் சோப்பைக் கொஞ்சம் கழுவுங்கள். நீங்கள் ரகசியம் சொல்லும் சாக்கில் என் முகமும் சோப்பாகி விடப் போகிறது.

(கிட்டே வருகிறன்)

காட்சி 2

[அதே நேரம். வாசற் பக்கம் திண்ணை. சுந்தர ராஜனும் அவன் மனைவி ஷோபாவும் பேசிக் கொண்டிருக்கிறர்கள்.]

சுந்தரராஜன் (ரேழி வழியாக நேரே கிணற்றடியைப் பார்த்தவாறு): தணிந்த குரலில்): ஆஹா! பிரமாதம்! கிணற்றடியிலே காதைக் கடிக்கிறது பார் !

ஷோபா: உங்கண்ணுவுக்கு அத்தனை பசியா? காதையும் மூக்கையும் கடிப்பானேன்! ஒரு தட்டு பஜ்ஜியைக் கபளீகரம் பண்ணினுரே!

சுந்தர: இல்லேடி! பத்தினித் தேவியிடம் ஏதோ கொஞ்சி மகிழ்ந்தாகிறது! ஆஹா! அந்தக் கிணற்றடிப் பின்னணியும், அண்ணு பாதி சோப்புப் போகாத முகத்தோடு உட்கார்ந்து பேசறதும் சினிமாப் படம் மாதிரி இருக்கு போ !

ஷோபா: பிழைப்பே சினிமாவாகத்தான்

இருக்கு! இந்த வீட்டுக்கு மருமகளாக வந்தேனு, வேலைக்காரியாக வந்தேனு என்ற சந்தேகம் எனக்கு வந்து விட்டது.

சுந்தர: வேலைக்காரியாக வந்து மருமகளாக மாறுவது சினிமாத் திரையிலே. மருமகளாக வந்து வேலைக்காரியாக மாறுவது நம் கூட்டுறவுக் குடும்பத்திலே !

ஷோபா: மண்ணுங் கட்டிக் குடும்பம்! என் புருஷன்தான் இந்த நிர்வாகத்துக்கு அதிகப் பங்கு கொடுக்கிருர்என்ற பெருமையில் அந்த நளினி அதிகமாகவே பேசறு! என்னுலே அதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது! நீங்க ஒரு வழி பாருங்கோ! இல்லேன்னு.....

சுந்தர: நீ ஒரு வழி பார்த்து டாக்ஸியிலே கிளம்பி விடுவாய்! அந்த வழி நேராக உங்க அப்பா அம்மா இருக்கிற வீட்டு வாசலில் போய் நிற்கும். அப்படித்தானு?

ஷோபா: நான் ஏன் அப்படிச் செய்கிறேன்? நம் குழந்தைகளை யெல்லாம் நான் அங்கு அனுப்புவேன்! இங்கே இருந்தால் குட்டிச் சுவராகப் போய் விடுங்கள்!

சுந்தர: எல்லேத் தகராறு? வெள்ளைத் தகராறு?

ஷோபா: இரண்டும்தான்! நேற்று ஞாபக மறதியாகப் பீரோவைப் பூட்டாமல் போய் விட்டேன்! உங்க அண்ணுவோட பழைய வெள்ளைத் துணிகளை யெல்லாம் எடுத்துக் கீழே போட்டு....

சுந்தர: இந்தத் தகராறுகளை யெல்லாம் பேசித் தீர்க்க முடியாது! என்னவோ ஒரே குடும்பமாக இருந்தால் இந்த விலைவாசி ஏற்ற காலத்தில் கொஞ்சம் சௌகரியமாக இருக்கு மென்று பார்த்தேன்....

ஷோபா: பரம சௌகரியம்! இருபத்தி ஐந்து எலுமிச்சம் பழம் வாங்கிறுல், பத்துப் பழத்தை அப்படியே பகாசுரத்தனமாகப் பிழிந்து சர்பத் சாப்பிட்டுத் தோலியைக்கூடக் கண்ணில் காட்டாமல் விழுங்குகிறுன் சின்ன மன்னி. நமக்கு எலுமிச்சம் பழத்தை உபயோகிக்க வேண்டிய அவசியமே இல்லே பாருங்கள்! எத்தனே சௌகரியம்!

சுந்தர: ஒரு ஏற்பாடு செய்ய வேண்டியது தான் ! செய்து விட்டேன் என்று வைத்துக் கொள்!.....ஆமாம்!.... கிளம்பு......கிளம்பு..... இப்படியே பீச் வரை நடந்து கொண்டே பேசலாம்.

ஷோபா: ஒன் மினிட்! புடவையை மாற்றிக் கொண்டு வந்து விடுகிறேன்.

சுந்தர: அடி அசடே! உன்னே போறுல் ஏதாவது காரியம் சொல்லுவாள் மன்னி. அப்புறம் ஷோபா, சோபாவாக வீட்டுக் கூடத்திலே இருக்க வேண்டியது தான்! இந்தப்புடவையே பிரமாதமாக இருக்கு! கிளம்பு.

ஷோபா: இந்தப் புடவையை நம்ப வீட்டு வேலைக்காரிக்குக் கொடுக்கிறேன் என்று சொல்லி யிருக்கிறேன்!..

சுந்தரராஜன்: இப்போது அவள் வீட்டு வாசலோடு நாம் போகப் போவதில்லே. வேறு வழியாகத்தான் போகிறேம். பயப்படாமல் வா ! (போகிருர்கள்)

காட்சி 3

[கூடம். தியாகராஜனின் தம்பி நாகராஜனும் அவன் மனைவி நளினியும் பேசிக் கொண்டிருக்கிருர்கள்.]

நாகராஜன் (சட்டையை மாட்டிக் கொண்டு): கிளம்பு நளினி!.... நேரமாயிற்று !

நளினி: அம்பாள் திரிபுர சுந்தரியை அடுக்குள்ளே தள்ளிவிட்டுன்னு கிளம்பணும்.

நாகராஜன்: நல்ல வேளே. கொல்லேப் பக்கம் கதவு இல்லே. இருந்ததோ அண்ணுவும் மன்னியும் எப்பவோ கிளம்பியிருப்பார்கள்!

நளினி: நான்தான் அடுப்படியிலே சிறை கிடக்கப் பிறந்திருக்கிறேனே! ஜம்மென்று உலாவி விட்டு மூக்கைப் பிடிக்கச் சாப்பிட அவர்கள் வருவார்கள்!..... இந்தக் குடும்பத்துக்கு அதிகப் பணம் கொடுப்பது நீங்கள். அதற்கேற்ப அதிகமாகப் பிராணனே விடுவது நான் !

நாகராஜன்: உன்னே டாக்டர் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போகப் போகிறேன். பிராணனேக் கீணே அவசரப்பட்டுக் கொண்டு விட்டு வைக்காதே !

நளினி: மன்னி நம்பினுலும் நம்பாவிட்டாலும் நான் அதைத்தான் சொல்லி யிருக்கிறேன்! அவள் சமைத்து வைத்திருப்பாள் என்று நான் நம்பவில்லே.

நாக: நாம் இப்போது (வாசற் பக்கமும் கொல்லேப் பக்கமும் பார்த்து விட்டு) நிஜமாகவே டாக்டர் வீட்டுக்குப் போகிறேம்.

அதிசயமான புதுமுறை தயாரிப்பு

பெப்ஸோடெண்டின் அற்புத நுரை உங்கள் பற்களின் வெண்மையை பளிச்சிடச் செய்யும்

எப்படி என்று பாருங்கள்: புது முறைப்படி தயாராகும் பெப்ஸோடெண்டில் மட்டுமே அற்புத நுரையை உண்டுபண்ணும் 'இரியம் ப்ளஸ்' உள்ளது. இந்த அற்புத நுரை பற்களைப் பாழாக்கும் பழுப்பை அகற்றி அவைகளை இயற்கை வெண்மையுடன் பிரகாசிக்கச் செய்கிறது...வாயைச் சுத்தம் செய்வதுடன் பெப்பர்மிண்டின் சுவையையும் அளிக்கிறது.

இந்துஸ்தான் லீவர் லிமிடெட்
இந்தியாவில் தயாரிப்பது

தொல்லை
பல் முளைக்கும்போதா?
காற்று பிரியும்போதா?
வயிற்றுவலியாலா?



மானேர்ஸ்
கிரைப் மிக்ஸ்சர்

கொடுத்து மீண்டும் புன்னகை தோன்றக் காணுங்கள்

இக்காலத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர் தருகின்றனர். அது இனிய சுவையுள்ளது; சுகாதார முறைப்படி 'பேக்' செய்யப்பட்டுள்ளது.

அதிர்ஷ்டக் குழந்தைகளுக்கு
மானேர்ஸ் கிரைப் மிக்ஸ்சர்
கிடைக்கிறது

இப்பொழுது
அழகான, புதிய
சிவப்பு நீல நிறங்களில்
'பேக்' செய்யப்பட்டு
கிடைக்கிறது

GEOFFREY MANNERS & COMPANY LIMITED

ஆடி வெள்ளிக்கிழமையும் பூர்ணிமையும் இணைந்த புண்ணிய தினத்தில் ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள் காஞ்சிபுரம் சங்கர மடத்தில் வியாஸ பூஜை நிகழ்த்திச் சாதுர்யமாஸ்ய விரதம் தொடங்கினார்கள். குரு பரம்பரைக்குச் செலுத்தப்பட்ட ஆராதனையை ஏராளமான அடியார்கள் கண்டு பரவசம் அடைந்தார்கள். பூஜைக்கு முன்பு அன்னை காமாக்ஷியின் ஆலயத்துக்கு ஆசாரியர்கள் செல்லும் திவ்வியக் காட்சி.

நளினி: நான் வரலே! எனக்கென்ன கொள்ளை வந்தது டாக்டர் கிட்டே போக. நான் வெங்கலப் பானைகிட்டேயே போகிறேன்.

நாக: அடசீ! அபத்தம்! நான் பார்த்திருக்கும் புது வீடு ஒரு டாக்டருக்குச் சொந்தமானது. இரையாதே! உஷ்.....

நளினி (வியப்புடன்): வீடு பார்த்து விட்டீர்களா? துணிந்து பிரிந்து போவதாகத் தீர்மானித்து விட்டீர்களா?

நாக: ஹே, பக்தே! உன் தவத்தை மெச்சி அருள் புரிந்தோம்! மூச்சு விடாதே! பஸ்டு கிளாஸ் போர்ஷன். அட்வான்ஸ் கொடுத்தாயிற்று. எண்பது ரூபாய் வாடகை. அடுத்த ஞாயிற்றுக் கிழமை சாப்பாடு அங்கே! ஞாயிற்றுக் கிழமை காலையில் இங்கு லாரி வரும் வரை ஈ காக்காய்க்கு நாம் போகும் விஷயம் தெரியக் கூடாது. நம் குழந்தைகளுக்குக் கூடத்தான்.

நளினி: அதெல்லாம் நான் மூச்சு விட மாட்டேன். நீங்கள் வாயைத் திறக்காமல் இருந்தால் போதும்.

நாக: அது சரி. தனிக் குடித்தனம் போவதில் உனக்கு சந்தோஷம்தானே?

நளினி: என்ன அப்படிக் கேட்கிறீர்கள்? என் சந்தோஷத்தை எப்படித் தெரிவிப்பதென்று எனக்குத் தெரியவில்லை... சித்தே அப்படியே நில்லுங்கோ! உங்களைச் சுற்றி வந்து நமஸ்காரம் பண்ணுகிறேன்.

நாக: நான் என்ன அரச மரமா, வேப்ப மரமா?..... கிளம்பு! கிளம்பு! மூணு பேர் செலவை இரண்டு பேராக நடத்திப் பார்த்தால்தான் அவங்களுக்கு நம்ப அருமை தெரியும்! (போகிறார்கள்)

காட்சி 4

[அடுத்த ஞாயிற்றுக் கிழமை. சுமார் பத்து மணி. நாகராஜன் தம்பதிகள் குடி வந்திருக்கும் டாக்டர் வீட்டு மாடி போர்ஷனில் சாமான்கள் வந்து இறங்கியிருக்கின்றன. நாகராஜனும் நளினியும் சுற்றிப் பார்க்கிறார்கள்.]

நளினி: எண்பது ரூபாய்க்குக் கொள்ளை மலிவு! நமக்கு அக்கம் பக்கத்துப் போர்ஷன்களில் இருக்கிறவர்கள் எல்லாம் யாரு? விசாரித்தீர்களா?.... சந்தடியையே காணுமே' வெளியே போயிருக்கிறார்களா?

நாக: அந்த இரண்டு போர்ஷனும் இப்போதைக்குக் காலிதான்......

நளினி (திடுக்கிட்டு): அப்படியா? உடனே எங்கேயாவது போய் டெலிபோன் பண்ணுங்களேன். என் சிநேகிதி பானுவும் பார்வதியும் வசதியான வீட்டுக்கு அலையா அலைகிறார்கள். அவர்கள் இங்கு வந்து விட்டால்....

ஹாம்லெட்டின் சிறப்பு

ஷேக்ஸ்பியர் பிறந்து இன்று நானூறு ஆண்டுகளாகி விட்டதை யொட்டி நியூயார்க் பிராட்வேயில் நடைபெறும் ஹாம்லெட்டின் நாடகத்துக்கு ஒரு காட்சிக்குக் கூட டிக்கெட் கிடைப்பதில்லை. காரணம் மக்களுக்கு ஷேக்ஸ்பியர் மீதுள்ள பிரேமையல்ல! தியேட்டரின் மானேஜர், ''99 சதவீதம் ரசிகர்கள் ஹாம்லெட்டைப் பார்க்க வரவில்லை. ஹாம்லெட்டாக நடிக்கும் எலிஸபெத் டெய்லரின் கணவர் ரிச்சர்ட் பர்ட்டன் எப்படி இருக்கிறார் என்று பார்க்கத்தான் வருகிறார்கள்'' என்று கூறுகிறார். அதோடு எலிஸபெத் டெய்லரும் கண்ணில் தட்டுப்படலாம் என்ற நம்பிக்கை வேறு சேர்ந்து கொள்கிறது.

இருப்பினும் ரிச்சர்ட் பர்ட்டன் பிரமாதமாக நடித்திருக்கிறார் என்றும் நாடகக் கலை நிபுணர்கள் ஏகமனதாக அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனர். ஹாம்லெட்டைப் பற்றி உங்கள் அபிப்பிராயம், அனுபவம் என்ன என்ற கேள்விக்கு ரிச்சர்ட் பர்ட்டன் கூறுகிறார்:

''முந்நூறு வார்த்தைகளிலும் சரி அல்லது மூவாயிரம் புத்தகங்களிலும் சரி ஹாம்லெட்டைப் பற்றி முழுமையாக யார் என்ன சொல்லிவிட முடியும்? எத்தனையோ பேர் ஹாம்லெட்டாகத் தோன்றி நடித்து விட்டார்கள். ஒவ்வொரு நடிகனும் ஹாம்லெட்டைத் தன் மனத்தில் எப்படி உருவகப்படுத்திக் கொள்கிறானோ அப்படி ஹாம்லெட் மேடையில் தோன்றுகிறான்.

''முதன் முதலில் 1944ல் நான் ஆக்ஸ்போர்டில் ஸர் ஜான் கில்கட் ஹாம்லெட்டாக நடிப்பதைப் பார்த்தேன். நடிப்புக் கலை பற்றிய என் ஆசைக் கனவுகளை, லட்சியங்களையெல்லாம் அவர் தவிடு பொடி செய்து விட்டார்; 'இவருக்கு இணையாக யாரால் இக்கலையில் உயர முடியும்?' என்று எண்ணினேன். ஆனால் பின்னால் ஸர் ஜானே என்னை ஊக்கினார். 'ஒவ்வொரு நடிகனும் ஒரு புதுவிதமான ஹாம்லெட்டைத் தோற்றுவிக்கிறான். அடிப்படையான நடிப்புத் திறன் மட்டும் இருந்து விட்டால் எல்லா நடிகர்களுக்குமே ஹாம்லெட்டின் பாகத்தை ஏற்க இடமிருக்கிறது. ஹாம்லெட் என்கிற நாடக பாத்திரம் அத்தனை பெரிய சிருஷ்டி!' என்று ஸர் ஜான் எனக்கு அறிவுறுத்தினார்.''

—பி. ஜி. கிருஷ்ணய்யா

நாக: உன் பாடு கொண்டாட்டம்! என் பாடு திண்டாட்டம்! ஆனால் நான் அதிருஷ்டசாலி! டாக்டர் அந்தப் போர்ஷன்களுக்கும் அட்வான்ஸ் வாங்கி விட்டாராம். வருகிறவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும். அவ்வளவுதான்!

நளினி: உங்களோட இரண்டு மன்னிகளிடமும் பழகிய பிறகு இந்த உலகத்தில் மற்ற எல்லோரும் நல்லவர்களாக இருப்பார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன்! அத்தனை துர்க்குணங்களும் அவர்களிடமேயே சிக்கிக் கொண்டு விட்டன.

(வாசலில் வான் வந்து நிற்கிறது. நாகராஜனும் நளினியும் எட்டிப் பார்க்கிறார்கள்.)

நாக: ஐயையோ! நளினி! சாமான் சட்டோட வரது......

நளினி: (பற்களைக் கடித்துக் கொண்டு) சாட்சாத் உங்க அண்ணா.....

நாகராஜன்: திருவாளர் தியாகராஜன் சமேத திரிபுர சுந்தரியம்மையார்....

நளி: காசிக்குப் போயும்...

நாக: நோ நோ! டாக்டர் வீட்டுக்குப் போயும் நோய் போன பாடு இல்லே. ஐயோ, பாவம்!... சுந்தரராஜன் எப்படித்தான் தனியாக அந்தப் பழைய வீட்டுக்கு அத்தனை வாடகை கொடுத்துக் கொண்டு இருக்கப் போகிறானோ?

நளினி: சோபா, நாற்காலி சகிதம் சௌக்யமாக இருக்கட்டும்!

(தியாகராஜன் மேலே வருகிறான்)

தியாகராஜன்: (திடுக்கிட்டு) அடடே! நீ இங்கேயா இடம் பார்த்திருக்கிறாய்?

நாகராஜன்: (அலட்சியமாக) நீ இங்கே வருவேன்னு எனக்குத் தெரியாதே.

[வாசலில் மற்றொரு டாக்ஸி வந்து நிற்கிறது. மூவரும் எட்டிப் பார்க்கிறார்கள். சுந்தரராஜன் ஷோபா தம்பதிகள் வந்து சூட்கேசுடன் இறங்குகிறார்கள். டிரைவர் டிக்கியைத் திறக்கிறான்.]

தியாக: அட ராமசந்திரா! இவனும் இங்குதான் இடம் பிடித்தானா?

நாக: அட ஆஞ்சநேயா! இதென்ன சோதனை......

சுந்தரராஜன் (மேலே வந்து திகைப்புடன்) வாட்! ஆல் ஓல்டு பிரதர்ஸ்!..... இங்கே என்னோட டெனெண்ட்ஸ் நீங்களா! அட பகவானே!

(மயங்கிக் கீழே விழுகிறான்)

நாக: நான் உடனே போய் டாக்டரைக் கூட்டிக் கொண்டு வருகிறேன். அர்ஜெண்டாக ஒரு ஆபரேஷன் தேவை!

தியாக: ஆப்பரேஷனா?

நாக: ஆமாம்! இந்த வீட்டுக்கார டாக்டர் உடனே தன் வீட்டுக்குக் கொஞ்சம் ஆப்பரேஷன் பண்ணினால் நலம். மூணு போர்ஷனுக்கும் நடுவிலே இருக்கும் இரண்டு சுவர்களை இடித்து விட்டால் நாம் முன் போலவே, தனித் தனியாகப் புது வீடு போக ரகசியத் திட்டம் போடலாமே மறுபடியும்!

[சுந்தர ராஜன் எழுந்து உட்கார்ந்து தலையை ஆட்டுகிறான்.]

வளரும் விஞ்ஞானம்

நிலைக் கண்ணாடியில் முகம் பார்க்கலாம்; மற்றக் கண்ணாடிகளில் ஜன்னல் கதவுகள் தயாரிக்கலாம். மூக்குக் கண்ணாடி போடலாம்; பாட்டில்களைப் பயன்படுத்தலாம். இப்படிக் கண்ணாடிக்கு எத்தனையோ உபயோகங்கள். ஆனால் கண்ணாடி ஆடைகூடத் தயாரிக்கலாம் என்று இப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள்! இதில் இன்று அடைந்துள்ள வியக்கத்தக்க முன்னேற்றம் காரணமாகக் கண்ணாடி நூலிழைகளால் நுணி நெய்து ஆடைகள் தைக்கத் தொடங்கியுள்ளனர். இந்த ஆடை கருங்காது; நீளாது. இதில் கறை படாது. இதைப் பூச்சி தின்னாது. நீரில் போட்டு அலசி எடுத்தால் சில விநாடிகளில் காய்ந்து விடும். மடிப்புத் தெரிகிற மாதிரியாக இஸ்திரி போடலாம். எத்தனைதான் முரட்டுத்தனமாகப் பயன்படுத்தினாலும் கசங்கிப் போகவே செய்யாது!

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே அன்றைய உலகில் மிருந்த நாகரிக முன்னேற்றம் அடைந்திருந்த மக்களிடையே உஷ்ணமான விலிகா மண்ணிலிருந்து நூலிழைகளை உருவாக்கி, பின்னர் அதைக் கொண்டு ஆபரணங்கள் தயாரிக்கும் பழக்கம் இருந்திருக்கிறது. ஆனால் இன்றைய கண்ணாடி நூல்கள் தயாரிப்புத் தொழில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தோன்றியதுதான். —டைம்

❁ ❁ ❁

தமிழ் நாட்டில் நீர் வளம் நில வளம் மிருந்திருக்கும் தஞ்சை மாவட்டத்தில் அந்தச் செழிப்பு காரணமாகவே உழவர்கள் உழைப்பில் நாட்டமில்லாதவர்களாகி விட்டார்கள் என்று சொல்லுவாருண்டு. கடினமான உழைப்புக்கு அவசியமில்லாமல் இயற்கை செய்து விட்ட காரணத்தால் இந்தக் கூற்று ஓரளவுக்கு உண்மையாக இருக்கலாம். ஆனால் மேற்கு ஜெர்மனியிலோ பல விவசாயிகள் உழுவதற்கு வயலில் இறங்குவதே இல்லை! ஓர் இயந்திரத்தைக் கிளப்பி விட்டு விட்டு 'ஹாய்யா'க இருக்கலாம் இவர்கள். ஒரு மாபெரும் பூச்சி போல் தோற்றமளிக்கும் 'அக்ரி ராபர்ட்' என்கிற இந்த இயந்திரக் கலப்பை (படம்) மனித யத்தனம் கிஞ்சித்தும் இல்லாமல் தானாகவே வயலை உழுது விடுகிறது! ஒரு டிராக்டருக்குக்கூட அதனை ஓட்டிப் போக ஓர் ஆள் தேவை. ஆனால் அக்ரி ராபர்ட் வயலின் ஒரு கோடிக்கு வந்து விட்டால் தானாகவே நின்று திரும்பி மீண்டும் உழ ஆரம்பிக்கிறது. வயல் முழுதும் உழுது முடிக்கும் வரை இது உழுது கொண்டே இருக்கும்!

❁ ❁ ❁

மோட்டார் கார் பாகங்களைத் தயாரிக்க, எஃகில் அந்தப் பாகத்தைப் போன்றதேயான அச்சுக்களை வார்ப்படச்சாலைக்குத் தயாரித்துக் கொள்வார்கள் அல்லவா? எஃகில் இவை தயாரிக்கப்படுவதற்குப் பதில் இனி பிளாஸ்டிக்கில் உருவாகும். 'எக்ஸ்பாண்டட் ராயலைட்' பிளாஸ்டிக் இலேசானது; ஆனால் உறுதியானது. (படம்) செலவு, எஃகு அச்சுக்களுக்கு ஆவதைவிட நூற்றில் ஒரு பாகம் தான்! லாரிகளின் முன் பாகத்தில் மட்டும் உள்ள டிரைவர் அமரும் சிறிய அறைகள், காரின் பின்புறம் கட்டி இழுத்துச் செல்லப்படும் ஓடும் வீடுகளான 'டிரெய்லர்'கள் ஆகியவையும் இப்போதெல்லாம் பிளாஸ்டிக்கால் தயாராகின்றன. இது துரு பிடிக்காமல் இருப்பது ஒரு பெரிய சௌகரியம். உறுதியாகவும் அதேசமயத்தில் ஓரளவு மென்மையாகவும் இருப்பதால், தாழ்ந்திருக்கும் மெல்லிய மரக்கிளைகள் இந்த பிளாஸ்டிக் லாரி அல்லது டிரெய்லர் மீது உரசினால் அந்த மரக்கிளைகள் உடையாது; அப்புறப்படுத்தப்படும்! இனி இந்தப் பிளாஸ்டிக்கினால் வீடுகள் கூடக் கட்டலாம் என்று விஞ்ஞானிகள் நம்பகமாய்த் தெரிவிக்கின்றனர்!

❁ ❁ ❁

மனிதனைப் போலவே சிந்தித்துச் செயல்படும் இயந்திரத்தைக் கண்டு பிடிப்பதில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இப்போது உருவாக்கப்பட்டுள்ள எந்த இயந்திரத்தையும் விட மனிதனின் நரம்புக் குமியல்கள் ஒரு லட்சம் மடங்கு அதிக வேகமாகச் செயல்படுகின்றனவாம்! இயந்திரமூளை இத்தனை வேகமாக இயங்குமாறு செய்ய முடியுமா என்பது சந்தேகம்தான். எனினும் இப்போதே புள்ளி விவரங்களைப் படிக்கவும் தேவையான போது தகவல்களைத் தரவும் இயந்திரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இதோ
லிமிகால் பிஸ்கட்டுகள்



இனி, வாய்க்கு ருசியாக, முறுகலான லிமிகால் பிஸ்கட்டுகளை உண்டு பசியாறி உடலேயும் இளைக்க வைக்கலாம். காலே, மதிய, இரவு உணவுக்குப் பதிலாக ஏற்க லிமிகால் பிஸ்கட்டுகள் மிகவும் ஏற்றவை. இந்த மாறுதல் உணவை நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்.

வீட்டைவிட்டு வெளியே செல்லும் போதும் உங்கள் உணவு முறைத் திட்டம் பாதிக்கப் படாமல் இருக்க ஆபீஸுக்கும் லிமிகால் பிஸ்கட்டுகளைக் கையோடு எடுத்துச் செல்லலாம்.

லிமிகால் பவுடர் தயாரிக்கும் முறையில் தான் லிமிகால் பிஸ்கட்டுகளும் தயாரிக்கப்படுகின்றன

ஆறு அல்லது ஏழு லிமிகால் பிஸ்கட்டுகளை ஒரு கப் டீ அல்லது காப்பியுடன் (பால் குறைவாக, சர்க்கரையின்றி) சாப்பிட்டால் திருப்தியளிக்கும், சத்துள்ள ஆனால் கலோரிகள் குறைந்த, ஒரு வேளை பரிபூர்ண உணவுக்குச் சமமாகும். லிமிகால் பிஸ்கட்டுகள் சாப்பிட்டு வந்தால் நீங்கள் நல்ல ஆரோக்கியத்துடன் திகழ்வீர்கள்.

லிமிகால் பிஸ்கட்டுகளையும் லிமிகால் பவுடர் பானத்தையும் சேர்த்து ஒருங்கே சாப்பிடலாம். அல்லது உங்களுக்கு விருப்பமானால் மாற்றி மாற்றியும் உபயோகிக்கலாம்.

இலவசம்! ஒவ்வொரு **லிமிகால்** பிஸ்கட் டின்னுடனும் ஒரு அழகிய பிளாஸ்டிக் பெட்டி இனம். இதில் உங்கள் மதிய உணவான 6 **லிமிகால்** பிஸ்கட்டுகள் சரியாகக் கொள்ளும்!

எடை குறைந்து எடுப்பாய் விளங்க லிமிகால்

ஸாராபாய் கெமிகல்ஸ், தபால் பெட்டி 1688, பம்பாய்-1

சில்லறைவிலை ரூ. 7/- வரிகள் தனி

சிரிக்கவும் சிந்திக்கவும்

''...நான் போந்த நீராவித் தொடர் வண்டி நள்ளிருளில் நான்மாடக் கூடத்தை நண்ணியது!''

—திரு சோமசுந்தர பாரதி

ரயில் வண்டிகள் மாறுகின்றன. ரயில் என்ஜின்கள் மாறுகின்றன. ரயில் இருப்புப் பாதைகள் மாறுகின்றன. ஆனால் ஒரு ரயில்வே ஸ்டேஷனது பிளாட்பாரங்கள் அனேகமாக மாறுவதே இடையாது. அவற்றின் மீது கூலியாள் முதல், சினிமா நட்சத்திரம் முன்னிட்டுப் பிரதம மந்திரி வரை நடந்து சென்றிருக்கிறார்கள். அவற்றிற்கு வாயிருந்தால் அவை ஆயிரமாயிரம் இன்ப துன்பக் கதைகள் சொல்லும்.

கோடம்பாக்கம் ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரம், தன் மீது அப்படியும் இப்படியும் நடந்து கொண்டே கல்கி அவர்கள் எத்தனை விஷயங்கள் யோசனை செய்திருக்கிறார் என்று சொல்லும்.

சென்னைக்கு நான் முதன் முதல் வந்த சமயம் சென்டிரல் ஸ்டேஷன் பார்க்கச் சென்றிருந்தேன். ஒரு வண்டியின் பக்கத்தில் ஒரே கூட்டமாயிருந்தது.

.... பரம்பரையைச் சேர்ந்த மல்யுத்த பயில்வான் ஒருவர் நின்று கொண்டிருந்தார். அவர் கை முண்டாவிலும் தவடைகளிலும் தேங்காயை மிகச் சுலபமாக உடைக்கலாம் போலிருந்தது. அவரைச் சுற்றி அவரது விசிறிகள் நின்று கொண்டிருந்தனர். வண்டி புறப்பட்டு விட்டது. அவர் கண்களிலிருந்து கடகட வென்று கண்ணீர் பெருகிற்று. மேடையில் எதிராளி, முகத்தைத் துவையலாகச் செய்தால் கூடக் கண்ணீர் விடுவது அகௌரவமென்று நினைக்கும் அந்த மனிதர் கருத்தறிந்த தன் மனைவியை அவள் பிறந்த வீட்டுக்கு அனுப்பும்போது கண்ணீர் விட்டு நின்றார். கல்யாணம் செய்து கொண்டு தன் கணவனுடன் புறப்பட்டும் இளம் பெண் ஒரு பக்கம் ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்து கண்ணீர் விடுகிறாள். இன்னொரு பக்கம், பிளாட்பாரத்தில் நிற்கும் தன் பெற்றோர்களை நினைத்துக் கண்ணீர் விடுகிறாள். பிறப்பின் போது தொப்புள் கொடி அறுந்தது. இப்போது பாசக் கொடி தளர்வடைகிறது.

ரயில் பொல்லாதது! நம்மிடமிருந்து கண்ணீர்த் துளியை வெளிப்படுத்துவதில் அது சுவு இரக்கம் காட்டுவதே இல்லை. தமக்கு வேண்டியவர்கள் ரயிலில் செல்லும் போது பிளாட்பாரத்தில் ஒரு கணம் திகைப்புற்று நிற்காதவர் யார்?



✿ ✿ ✿

சில சாமான்கள் தன் பெயரை உபயோகித்துக் கொள்வதை, ரயில் ஆட்சேபிக்கவில்லை. ஆகவே, ரயில் கூஜா ரயில் அடுக்கு என்றெல்லாம் சொல்கிறோம். 1858ம் ஆண்டிலிருந்து வைதிகர்கள் 'ரயில் தீட்டு' என்று ஒன்றைக் கண்டு பிடித்துக் கொண்டாடி வருகிறார்கள்.

ரயில் சிநேகிதம் என்பது புகழ்பெற்றது. நாம் புதிதாகக் குடி போகும் வீட்டுக்கு அக்கம் பக்கத்திலுள்ளவர்களோடு பேசிப் பழகப் பல வருஷங்கள் பிடிக்கலாம். ஆனால் ரயில் வண்டியில் அக்கம் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவர்களுடனே பேசாதிருக்க முடியாது. மேல் ஆசனத்தில் படுத்துக் கொண்டு நம்மையே பார்த்துக் கொண்டிருப்பவர்களோடு கட்டாயம் பேசாமல் இருக்க முடியாது. ரயில் சிநேகிதத்தில் பலவித லாபங்கள் உண்டு. ஒரு வியாபாரம் தகையலாம், ஒரு கல்யாணம் நேரலாம். நாம் இறங்க வேண்டிய இடத்தில் நமது பெட்டியைத் தூக்கிக் கொண்டு போக வேண்டிய கஷ்டமும் குறையக் கூடும். அதை ரயில் சிநேகிதர் தூக்கிக்கொண்டு நடுவில் இறங்கியிருப்பார்!

✿ ✿ ✿

நம்மில் எல்லோருமே ரயில் வண்டியில் பிறப்பதில்லை. அந்தப் பாக்கியம் பத்து லட்சத்தில் ஒருவருக்குத்தான் கிடைக்கிறது என்று ரயில்வே புள்ளி விவரக்காரர்கள் சொல்கிறார்கள். போகிறது, நாம் குழந்தையாயிருப்பது முதற் கொண்டே அதனுடன் ஏதாவது ஒரு விதத்தில் தொடர்பு கொண்டு வருகிறோம். அதைக் கொண்டு திருப்தியடைவோம்.

சின்னஞ் சிறு வயதில் ரயில் வண்டி பொம்மைகள் வைத்துக் கொண்டு விளையாடுகிறார்கள். கணவன் — மனைவி விளையாட்டுக்கு அடுத்தபடியாக ரயில் வண்டி விளையாட்டுத்தான் அவர்களுக்கு அதிகம் பிடிக்கிறது.

பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதும் ரயில் பையன்களைத் துரத்திக் கொண்டு வருகிறது. ''மணிக்கு முப்பது மைல் வேகத்தில் போகும் இருநூற்றுத் தொண்ணூற்றொன்பது கஜ தூரமுள்ள ஒரு வண்டியும், எதிரே வந்து கொண்டிருக்கும் முந்நூற்று ஒரு கஜம் நீளமுள்ள ஒரு வண்டியும் ஒன்றையொன்று கடக்க எத்தனை நிமிஷம் — விநாடி பிடிக்கும்?'' என்று கணக்குப் போட வேண்டி யிருக்கும். இந்தக் கணக்கைப் போட நான் சிறிது தயங்குவேன். ஏனென்றால், ரயில்கள் ஒரே தண்டவாளத்தில் செல்கின்றனவா? வெவ்வேறு தண்டவாளங்களின் மீது ஓடுகின்றனவா என்ற விவரங்கள் தருவதில்லை. இந்தக் கணக்கைப் போட யாருக்குமே தெரியவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். அதனால் உலகத்தில் எந்த விதமான கணித அபிவிருத்தியோ விஞ்ஞான அபிவிருத்தியோ தடைப்பட்டிருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. நீங்கள் அப்படி நினைக்கிறீர்களா?

ரயில்! அது ஏற்பட்ட காலத்திலிருந்து என்னென்ன மாறுதல்கள் எல்லாம் அடைந்து வந்திருக்கின்றன! அது முதன் முதலில்

இந்தியாவில் போடப்பட்ட காலத்தில், வெள்ளைக்காரன் இந்தியாவை வளைத்துப் பிடிக்க ரயில் போடுகிறான் என்று வதந்தி கிளம்பி, கலகத்துக்குக்கூட ஒரு காரணமாய் அமைந்தது. இப்போது நாம் அந்த ரயிலைக் காலா காலத்தில் பிடிக்கக் கஷ்டப் படுகிறோம். அதில் இடம் பிடிப்பதற்கோ...!

முதன் முதலில் ரயில் தண்டவாளத்தில் ஓடி வந்த போது நமது முன்னோர்கள் அதற்குத் தேங்காய் உடைத்துக் கும்பிட்டார்கள். இப்போது இடம் கிடைப்பதற்காக அப்படிச்செய்ய வேண்டியிருக்கிறது.

❀ ❀ ❀

ஒரு மந்திரி ஓர் இலாகாவின் பொறுப்பை ஏற்றுக் கொண்டால் கூடியவரை அது சம்பந்தப்பட்ட விஷயம் ஒன்றும் தெரியாதிருந்தால் நல்லது, விருப்பு வெறுப்பின்றிக் காரியம் செய்ய முடியும் என்று ஓர் அபிப்பிராயம் இருந்து வருகிறது. ஆனால் ஸி. சுப்பிரமணியம் அவர்கள் தாம் ஒரு விவசாயியாக இருந்ததாகவும் அதனால் தமக்கு அந்த இலாகா வேலை சிரமமளிக்காது என்றும் கூறுகிறார். ரயில் மந்திரி எஸ். கே. பாட்டிலோ தாம் ஒரு காலத்தில் ரயில் பணத்தை எடுத்துக் கொண்டு போனதாக, அதாவது கஜானாவில் கட்டப் போனதாகவும், ஆகவே தமக்கும் ரயிலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென்றும் பெருமையடித்துக் கொள்கிறார்!

நான் அதை விடப் பெருமை அடித்துக் கொள்ள முடியும். நான் இன்று மாயவரம் தாலுக்காவில் செம்பொன்னார் கோயில், அல்லது திருக்கடையூர் பக்கம் சென்றேனானால், அந்த ஊர் ஸ்டேஷன் மாஸ்டரிடம் ''தம்பி! இந்த ரயில் நான் போட்டேன்'' என்பேன். ஏனென்றால், மாயவரம் - தரங்கம்பாடி ரயில் போட நிலம் வாங்கிக் கொடுக்கும் காரியாலயத்தில் ஒரு வருஷம் வேலை பார்த்தேன். வேலை செய்தால் அது போன்ற ஒன்றில் வேலை செய்ய வேண்டும். ரயில்வே கம்பெனிக்காரர்கள், குமாஸ்தாக்களுக்குப் பௌண்டன் பேனா, காலுக்குச் செருப்பு, பிடித்துக் கொள்ளக் குடை எல்லாம் வாங்கிக் கொடுத்தார்கள்! ஆகையினால் ரயிலைப் பற்றி எழுத எனக்கு உரிமை இருக்கிறது என்பதாகச் சொல்ல வந்தேன்.

❀ ❀ ❀



ஒரு ரயில் வண்டியில் இரண்டு ஸ்திரீகள் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது சற்றுச் சிலுசிலு வென்று காற்றடித்துக் கொண்டிருந்தது. ஓர் அம்மாள் ஜன்னலைச் சாத்துங்கள். இல்லாவிட்டால், நான் இறந்து போய் விடுவேன்'' என்றாள். இன்னோர் அம்மாளோ, ''ஜன்னல் திறந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் நான் இறந்து போய் விடுவேன்'' என்றாள். இருவர்களுக்குள்ளும் தகராறு முற்றிற்று.

அங்கே வந்த ஸ்டேஷன் மாஸ்டர் ஒரு சேவகனைக் கூப்பிட்டுச் சொன்னார்.

''ஓர் அம்மாளின் இஷ்டப்படி சிறிது நேரம் ஜன்னலைத் திறந்து வை. மற்ற அம்மாள் செத்துப் போகட்டும். பிறகு அந்த அம்மாளின் இஷ்டப்படி ஜன்னலைச் சாத்தி வை. இன்னொரு அம்மாளும் செத்துப் போகட்டும்'' என்றார்.

❀ ❀ ❀

ரயிலுக்கும் இலக்கியத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தமிழில் முதன் முதலில் ரயிலை வைத்துக் கொண்டு கதை எழுதிய பெருமை நண்பர் காலஞ்சென்ற ஸ்ரீ கல்கியைச் சேர்ந்தது. ''காங்கிரஸ் ஸ்பெஷலில் கோர சம்பவம்'' என்று அவர் முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் எழுதிய கதை இன்றைய நிலைமைக்கும் பொருத்தமானதாகும்.

ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணி அவர்கள் தமது 'முருகன் ஓர் உழவன்' என்ற நாவலில் ரயிலின் மீது கோபம் கொண்டு எழுதியிருக்கிறார். குறித்த காலத்தில் வரத்தவறி விட்ட ஒரு வண்டியை 'விதவை ரயில்' என்று பொருள்படும்படி அசல் தஞ்சாவூர் பாஷையை உபயோகித்துத் திட்டியிருக்கிறார்.

ஸ்ரீ அகிலன் அவர்கள் அரியலூர் ரயில் விபத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஒரு சிறு கதை எழுதியிருந்தார்.

தற்கால சம்பவத்தை வைத்துக் கொண்டு உடனடியாக எழுதப்பட்ட கதைகளுள் எனக்குத் தெரிந்தவரை சிரஞ்சீவிக் கதை அது.

சுமார் நாற்பது ஐம்பது கதைகள் கட்டுரைகளிலும், ஏழெட்டு நாவல்களிலும் ரயில் வண்டியைக் கொண்டு வந்தது மட்டுமின்றி ஒரு நாவலுக்கு ரயிலின் பெயரையே சூட்டிய குற்றவாளி அடியேன். சின்ன ரயில், பெரிய ரயில், மின்சார வண்டி, கூட்ஸ் வண்டி எல்லாம் என்னிடம் அகப்பட்டுக்கொண்டன. மலை ரயிலையும் நான் தப்ப விடவில்லை.

❀ ❀ ❀

ஸினிமாப் படங்களுக்கு ரயில் தான் பிறந்த வீடு என்றுகூடச் சொல்லலாம். முதன் முதல் சலனப் படம் காண்பிக்கப்பட்ட காலத்தில் ரயில் வண்டி ஓடுவதன் படத்தைத்தான் அதிகம் காண்பிப்பார்களாம். அது படம் பார்ப்பவர்களின் மீதே வந்து விழுந்து விடும்போல் தோன்றவே எல்லாரும் கொட்டகையை விட்டு எழுந்து ஓடுவார்களாம். தமிழ் நாட்டுப் படங்களில் அநேகமாக ரயில் இராமல் இராது. — என். ஆர்.

□□□ அட்டைப் படக்கதை

என்னவோ?

எல்லோரும் புறப்பட்டு விட்டார்கள். வாசலில் இரண்டு குதிரை வண்டிகள் சிலிர்த்துக் கொண்டு நின்றன. நண்டும் சுண்டுமாய்க் குழந்தைகளெல்லாம் இடம் பிடித்துக் கொண்டு நகரமாட்டேன் என்று அடம் பிடித்தன. இரண்டு மூன்று நாட்களாய் அமளிதுமளிபட்ட வீடே களையிழந்து விட்டது. நல்ல வேளை! பம்பாய்! அத்தை புறப்படவில்லை. பத்து நாட்கள் இருந்து விட்டுப் போகலாமே என்று தன் அண்ணா விடுத்த வேண்டு கோளைப் பெரிய மனசு வைத்து ஏற்றுக் கொண்டாள்.

பெரிய மனசுதான். பத்மநாபனுக்கு அப்படித்தான் தோன்றியது. இதே அத்தை இரண்டு வருடங்களுக்கு முன்புகூட வந்திருந்தாள். அப்போது அவளைக் கண்டால் அவனுக்குப் பிடிக்கவே பிடிக்காது. எதற்கெடுத்தாலும் ஒரு கண்டிப்பு, ஓர் உபதேசம், ஏதாவது ஒரு பழங்கதை சொல்லா விட்டால் அவளுக்குத் தலை வெடித்து விடும். இப்போதோ அவள் இருக்க மாட்டாளா என்றிருந்தது.

பத்மநாபன் ஆபீசுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். வாசல் வரை சென்றவன் ஒரு முறை திரும்பிப் பார்த்தான். விடை பெற்றுச் செல்லும் உறவினர் கூட்டம் கூடத்தில் வழிந்து நின்றது. அந்தக் கும்பலின் ஒரு மூலையில் சுமதி நின்று கொண்டிருந்தாள். ஒரு கணம்தான். அதற்குள் ஒரு புன்முறுவலை உதிர்த்தாள். பத்மநாபனுக்கு உச்சி முதல் உள்ளங் கால் வரையில் ஜில்லிட்டு விட்டது.

''நான் வரேன்.... எல்லோருக்கும் டாடா'' என்று கூறிவிட்டு ஸ்கூட்டரை எடுத்தான்.

''மாமா.... டாடா.....'' என்று கையசைத்தன குழந்தைகள் வண்டிக்குள்ளிருந்து.

அம்மா அவசரம் அவசரமாக வந்தாள், வெளியே. ''டேய், பத்து! மத்தியானம் எப்போ வருவே சாப்பிட?'' என்று கேட்டாள்.

''ஒரு மணிக்கு....'' என்றான் பத்மநாபன்.

''நானும் அத்தையும் திருவெள்ளரை போறோம்.... சுமதி இருப்பாள் இங்கே.... படுத்தாமே சாப்பிட்டு விட்டுப்போ...

என்ன, தெரிந்ததா?'' என்றாள் அம்மா. அவளுக்கு இன்னமும் அவன் குழந்தை என்ற நினைப்பு.

பத்மநாபன் முகத்தைச் சுளித்தான்: ''நீயுமா புறப்படறே, அம்மா? நான் ஹோட்டல்லேயே சாப்பிடறேனே....'' என்றான். கபடம்தான்.

''அதெல்லாம் கூடாது..... உடம்பு கெட்டுப் போகும்..... ஒரு வாய் வந்து சாப்பிட்டு விட்டுப் போ.....'' அம்மா கெஞ்சினாள்.

''ஆகட்டும்'' என்றவன் அம்மாவுக்கும் 'டாடா' என்று கையை ஆட்டி விட்டுப் புறப்பட்டான்.

அப்பாடா! ஒரு வாரமாக அவஸ்தைப்படுவது அவனுக்கல்லவா தெரியும்! சுமதியுடன் தனியே பேச வேண்டும், அவள் என்னவோ பிரமாதமாகப் பாடுவாளாமே, அதையும் தனித்து ரசிக்க வேண்டும் என்றெல்லாம் அவன் நெஞ்சு தவித்தது. மாமா பெண்ணின் சீமந்தக் கும்பலில் அவள் இருந்த இடமே தெரியவில்லை. எப்போதாவது ஒரு முறை மேகத் திரைக்குப் பின்னிருந்து வெண்மதி தலை காட்டுவதுபோல அவள் தென்படுவாள். அப்புறம் மீண்டும் திரை படர்ந்து விடும். இன்றைக்காவது அவளுடன் தனித்துப் பேசும் வாய்ப்பு கிடைக்கப் போகிறதே. அதை எண்ணி அவன் மனம் இப்போதே பூரிக்க ஆரம்பித்து விட்டது.

சீக்கிரமே அலுவலகத்தை விட்டுப் புறப்பட்டு விட்டான். வழியில் பூக்கடையில் எட்டு முழம் கதம்பமும் ஐந்நூறு மல்லிகைப் பூக்களும் வாங்கிக் கொண்டான். அப்படியே 'லதா ஸ்வீட் ஸ்டாலி'ல் பம்பாய் அல்வாவும் சோன் பப்டியும் ஒரு பார்சல் கட்டிக் கொண்டான். வீட்டுக்கு வரும்போது சரியாக மணி ஒன்று ஆகி விட்டது.

கூடத்தில் யாரையும் காணோம்.

சட்டையைக் கழற்றி மாட்டி விட்டு, பின் கட்டுக்குப் போனான். முகம் கழுவிக் கொண்டு திரும்பி வந்தபோது சமையற்கட்டில் நிழல் ஆடிற்று.

''சாப்பிடலாமா?'' என்று கேட்டான்.

''உம்....'' என்று பதில் வந்தது.

பத்மநாபன் உள்ளே சென்றான். பலகை போட்டு எதிரே வெள்ளித் தட்டில் சாதம் பரிமாறப்பட்டிருந்தது. அருகில் சாம்பார், ரசம், கூட்டு, கறி, ஊறுகாய், மோர் எல்லாம் சிறு சிறு கோப்பைகளில் வைக்கப்பட்டிருந்தன. சுமதியே பரிமாறுவாள் என்று எதிர் பார்த்து வந்தவனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. நிமிர்ந்து பார்த்தான். சமையற்கட்டுக்குள் அவளைக் காணவில்லை.

''சுமதி!'' என்று கூப்பிட்டான்.

நிழல் அசைந்தது வெளியே. வாய் அசையவில்லை.

''கூடத்தில். பூ வைத்திருக்கிறேன்...... எடுத்துக் கொள்'' என்றான்.

அவள் முன்கட்டுக்குப் போனாள். அப்போது மென் காற்றில் அசைந்து அசைந்து பவுடரின் மணம் வந்து தாக்கிற்று. சுமதி சமையற்கட்டுக்குள் வந்தாள். அடுத்த கணம் தட்டில் அல்வா விழுந்தது.

''அடேடே... அதை உனக்காகத்தான் வாங்கிவந்தேன் சுமதி. எனக்குப் போடாதே'' என்றான் பத்மநாபன்.

''எனக்கு வேண்டாம்..... நீங்கள் சாப்பிடுங்கள்'' என்றாள் அவள்.

''அப்பாடா! இப்போதாவது வாயைத் திறந்தாயே!'' என்று சிரித்தான் அவன். பிறகு ரசத்தை உறிஞ்சி ரசித்தவாறே ''கதம்பத்தை என்ன செய்தாய்?'' என்று கேட்டான்.

''பெருமாள் படத்துக்கு மாலையாகப் போட்டேன்'' என்றாள் அவள்.

ஏ.எஸ்.ராகவன்

''ஏன்? நீ வைத்துக் கொள்ளக் கூடாதோ?'' என்று கேட்டான் அவன்.

''ஒரு கூடைப் பூவை வைத்துக் கொள்ள முடியுமா?.... ஒரு கிள்ளு வைத்துக்கொண்டேன்'' என்றாள் அவள்.

''ஒரு கிள்ளா? அப்படியென்ன....?''

பதில் வரவில்லை. கவரைத் துளைத்துக் கொண்டு, சமையற்கட்டுக்கு அப்பால் பின் கட்டில் நின்று தன்னுடன் உரையாடிய அந்தப் பெண்ணின் முகம் வெந்து போயிருப்பதைப் பத்மநாபன் கண்டான். ''தண்ணீர் வேண்டும்'' என்றான் அவன்.

''கூஜாவில் வைத்திருக்கிறேன்'' என்றாள் அவள்.

''அது தெரிகிறது. வந்து எடுத்துக் கொடு.''

''படுத்தாமல் சாப்பிட்டு விட்டுப் போகும்படி அம்மா சொல்லியிருக்கிறார்களே; மறந்து விட்டதா?''

பத்மநாபனுக்கு இப்போது புரையேறி விட்டது விலா வெடிக்கச் சிரித்ததில். ''நீ.... அறை யெல்லாம்.... கேட்டுண்டு இருந்தியா?'' என்றான்.

''ஊஹூம்.....''

''பின்னே எப்படித் தெரிந்தது உனக்கு?''

''ஹோட்டல்லே சாப்பிடட்டுமான்னு கேட்டீர்களே, அதுமட்டும் காதில்விழுந்தது.''

''ஓஹோ.... நீ பொல்லாதவள்.''

சுமதி அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை. கூடத்துக்குப் போய் விட்டாள்.

''மத்தியானம் ஆபீஸ் லீவ்..... சினிமா போய் விட்டு வரலாமா?'' என்றான் அவன்.

''ஊஹூம். நான் வரவில்லை'' என்றவள் வாசலுக்குப் போய் விட்டாள்.

பத்மநாபனுக்கு ஏமாற்றம் ஒரு புறம். எரிச்சல் ஒருபுறம். இத்தனை நாட்கள் கிடைக்காத வாய்ப்பு இன்று கிடைத்திருக்கிறது. நேரே நின்று இரண்டு வார்த்தை பேசினால் என்ன? கூடத்தில் அத்தனை பேர்கள் நடுவே முறுவலித்து விடை கொடுக்கத் தெரிந்த பெண்ணுக்கு இப்போது நாணம் சூழ்வானேன்? அம்மாவும் அத்தையும் வேண்டுமென்றேதான் சுமதியை வீட்டில் நிறுத்தி விட்டுப் புறப்பட்டிருக்கிறார்கள். அவனுக்கு அவள்தான் என்பது முடிவாகி விட்டது. இன்னும் என்ன ?

பத்மநாபன் வாசலுக்கு வந்தான், சினிமாவுக்கு அவள் வருகிறாளா இல்லையா என்பதைக் கேட்டு விடுவது என்று. ஆனால் அவள் அங்கும் இல்லை. அடுத்த வீடு கலகலத்துக் கொண்டிருந்தது. சுமதி இருக்கிற இடத்தில் சிரிப்பு கொப்புளிக்கும். ஆனால் அவன் முன்னால்தான் அவளால் பேச முடியவில்லை.

''சுமதி!'' என்று கத்தினான் அவன்.

சிரிப்பு ஓய்ந்தது சட்டென்று. அவள் வந்தாள் திரும்பி. அவள் மட்டுமா ? இல்லை. அடுத்த வீட்டு மல்லிகாவும் கூட வந்தாள்.

''கூப்பிட்டீர்களா?''

''உம்.... ஆபீஸ் போக வேண்டும்....வீட்டைப் பார்த்துக் கொள்.''

''லீவு என்றீர்களே?''

''இல்லை.... லீவைக் கான்ஸல் செய்து விடலாம் என்று பார்க்கிறேன்..... ஏராளமாக வேலை கிடக்கிறது.''

''சாயந்திரம் எப்போது வருவீர்கள்?''

''சொல்ல முடியாது.... நாழியாகலாம்.''

ஸ்கூட்டர் புகையைக் கக்கிற்று. இடியாய் முழங்கிற்று. பிறகு அவனுக்கு அழகு காட்டுவது போல் இரண்டு முறை 'பட் பட்' என்று வெடித்து விட்டுப் பாய்ந்து ஓடிற்று.

ஆபீசில் வேலை ஓடினால்தானே? பல்லைக் கடித்தான் பத்மநாபன். உதட்டைக் கடித்தான். வேண்டுமென்றே பக்கத்து வீட்டுப் பெண்ணைத் துணைக்கு அழைத்து வந்து கேட்கிற கேள்வியைப் பார்! 'லீவு என்றீர்களே?' அழகான மூஞ்சிக்கு லீவு வேறே எடுக்கிறார்களாக்கும்! என்னவோ ஆசை. தனியாய் இரண்டு வார்த்தைகள் பேசலாமே, சினிமாவுக்குப் போகலாமே என்று. பேசாவிட்டால் போகட்டுமே! யாருக்கு நஷ்டம்? அப்படி ஒன்றும் கெஞ்சிக் கொண்டு நிற்கிறவனில்லை அவன். என்னவோ பல்லைக் கில்லைக் காட்டி விடை கொடுத்தாளே என்று பார்த்தால் பிரமாத ராங்கி !

பென்சிலை நாலு முறை சீவும்படியாயிற்று அன்றைக்கு. ஊதி எறிகிற சாதாரண 'ஸ்டேட்மெண்டு'க்குப் பத்துத் தடவை சரி பார்க்க வேண்டியிருந்தது. வேலை ஓடிற்று வேகமாக. ஆனால் அத்தனையும் பிழையாகவே முடிந்தது.

மாலையில் வீடு திரும்பாமல் ஸ்கூட்டரைக் காவேரிக் கரைக்கு விரட்டினான். அம்மா மண்டபம் படித் துறையில் ஈ காக்கை இல்லை. மேல் வானில் சாயும் கதிரவனின் கிரணங்கள் தொலைவில் தென்னைகளைத் துளைத்துக் கொண்டு, சர்வாங்காசனம் செய்வது போல, மேலே கால் தூக்கி நின்றன. சுமதியின் அழகு கண்முன் வந்து நின்றது. 'குபுக்'கென்று பூமிக்குள்ளிருந்து ஊற்றுக் கிளம்புவது போல, ஓர் அழகின் பூரிப்பில் அவள் எப்படி உப்பி விட்டாள். கன்னத்திலெல்லாம் ஒரு தொழுமை, ஒருசிவப்பு, ஒருவேறு என்னவோ! கண்ணிலெல்லாம் ஒரு கூர்மை, ஒரு நளினம், ஒரு வேறு என்னவோ! நடையில்கூட ஒரு நிதானம், ஒரு மோகனம், ஒரு வேறு என்னவோ ! எல்லாமே என்னவோதான் !

அவனுக்கு இன்று புத்தி போயிற்றே. அது கூட. அம்மா சூசகமாகச் சொன்னாளே. படுத்தாமல் சாப்பிட்டு விட்டுப் போ என்று. இந்த முகட்டின் குணம் தெரிந்துதான் சொல்லியிருப்பாள்போல் இருக்கிறது!

மெல்ல மெல்ல இருள் கவிந்தது. பத்மநாபனுக்கு வீட்டுக்குப் போகவே பிடிக்கவில்லை. ஆனால் அம்மா தவிப்பாள். அவனுக்கு இன்னமும் அவன் குழந்தை.

வீட்டுக்கு வந்ததும் நேரே மாடிக்குப் போய் சட்டையைக் கழற்றி எறிந்து விட்டுச் சாய்வு நாற்காலியில் விழுந்தான். கீழே வரப் பிடிக்கவில்லை. ஒரே கும்மாளமும் பாட்டும் அங்கே. சுமதி பாடிக் கொண்டிருந்தாள். அம்மா, அத்தை, அப்பா, பாட்டி இன்னும் எதிர்வீடு, பக்கத்து வீடு எல்லாம் கூடி 'சபாஷ்' போட்டுக் கொண்டிருந்தன. அவனுக்கு அவள் முதுகில் ஓங்கி ஓர் அறை கொடுக்க வேண்டும் என்றிருந்தது. மத்தியானம் யாரும் இல்லையே வீட்டில், அப்போது பாடினால் என்னவாம்!

''பத்து! சாப்பிட வரலையா?'' அம்மாவின் குரல் நீண்டு வந்தது மாடிக்கு.

''எனக்குப் பசியில்லை.''

''பசியில்லையா? ஏன்?''

''எனக்குப் பசியில்லேன்னு பசியில்லை..... சும்மா தொணதொணக்காதேம்மா.''

''தலையை வலிக்கிறதா?''

''அடாடாடா!.... நீ சும்மா இருக்க மாட்டியாம்மா?''

அம்மா மாடிக்கே வந்து விட்டாள். பாவம், அவளுக்குக் கவலை! தலையைத் தொட்டுப் பார்க்கிறாள், கழுத்தைத் தொட்டுப் பார்க்கிறாள், 'உடம்பு சுடறதேடா, ராஜா. ஹோட்டல்லே ஏதாவது சாப்பிட்டியா?' என்கிறாள். அவன் எதுவும் சொல்லவில்லை. சொன்னால் அவளுக்குப் புரியுமா?

எல்லாம் அவன் அருள்...

மாது மகிழ்ச்சியுள்ள விவசாயி. ஆண்டவன் அருளால் அவனுக்கு ஒரு குறைவுமில்லை. சொந்த வீடு, மனநிறைவுள்ள குடும்பம். இவற்றோடு ஆநிரைச் செல்வம்! தனது நிலத்தை நல்ல முறையில் உழுது, பயிரிட்டு அமோக விளைச்சலைக் காணுகிறான் அவன். உயர்ந்த விதைகளையே விதைத்து, ராலீஸ் தயாரிக்கும் சமநிலை உரக் கலவைகளால் நிலத்தைச் செழுமையாக்குகிறான்.

ராலீஸ் 'மரம் மார்க்' உரங்கள் அமோக விளைச்சலைத் தருகின்றன. வளம் மேலும் பெருக, டாடா - பைஸன் பூச்சி மருந்துகளைக்கொண்டு பயிரைப் பாதுகாருங்கள். இரண்டுமே சுலபமாகக் கிடைக்கின்றன.

TATA-FISON
PESTICIDES

RALLIS TREE BRAND FERTILIZERS

ராலீஸ் இந்தியா லிமிடெட்
இந்தியா முழுதும்

SI-57-68 TAM

அவள் கீழே போய் விட்டாள் என்று சற்று நிம்மதி அடைவதற்குள், அப்பா வந்து விட்டார். அம்மாவுக்கு மேலே இந்த அப்பா! எப்படித்தான் ஒரு கம்பெனியிலே மானேஜர் வேலே பார்க்கிருரோ !

அவரும் கீழே போனார். அடுத்துச் சுமதி வந்தாள். அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''என் மேல் கோபமா?'' என்றாள் அவள்.

அவன் பதில் சொல்ல வில்லே.

அருகில் வந்து நெற்றியில் கை வைத்தாள் அவள். ஜில்லென்றிருந்தது. தாமரைத் தண்டு போல. ''உடம்பு சுடறதே!'' என்றாள்.

''சுடாம பின்னே வாழுமோ!'' என்று சீறினான் அவன்.

''எதுக்காகக் கோபம்?'' என்றாள் அவள்.

''கோபம் இல்லாம பின்னே உன்னே வாழ்த்தச் சொல்கிருயோ?''

''இதோ பாருங்கள்.... உங்க மனசு எனக்குத் தெரியும்.....''

''தெரிஞ்சும் ஏன் சினிமாவுக்கு வரமாட்டேன்னு சொன்னே?''

''இப்போ நாம் போகக் கூடாது.''

''உக்கும்.... தனியா இருக்கிற போது போகாமல் பக்கத்துவீட்டு மல்லியையும் எதிர் வீட்டு அல்லியையும் அழைச்சிண்டு போகணு மாக்கும் ?''

''ஆமாம்.....''

''என்ன ஆமாம்?''

''தனியே இருக்கிறபோது விலகியிருக்க ணும். விலகியிருக்கிற போது தனியா இருக்கணும்.''

''உங்க அம்மா வாடை உனக்கும் வீசறதோ?.... இந்த மாதிரி உபதேசமெல் லாம் எனக்குப் பிடிக்காது.''

''உபதேசமில்லே.... உங்களுக்கு நான் உபதேசம் பண்ணலாமா? நாளேக்கு எல் லாம் ஆகட்டுமே.... அப்புறம் நாம் எங்கே வேணும்னுலும் போகலாம். தனியா யிருக் கிறதுங்கிறது, நாம் இரண்டு பேர் மட்டும் இருக்கிற போது மட்டும்தானு? இத்தனே பேர் நடுவிலேயும் நாம் மட்டும் தனி உலகமா வாழலாம்.... அதுக்கு வேளே வரவேண் டாமா ?'' என்றாள் சுமதி.

அவன் நிமிர்ந்து அவளேப் பார்த்தான். பகலில் பதுங்கிப் பதுங்கி ஒதுங்கியவள் இப்போது அம்மாவும் அத்தையும் கீழே இருக் கும் போது அவனே அழைக்க வந்திருக்கிறாள். தனிமை என்பது அவள் கூறியது போல, ஒருவனும் ஒருத்தியும் உலகறிய ஒன்று படுத்தப்படும் போது, இரு மனங்கள் சங்க மித்து விடுகின்றனவே, அதுதான் போலும்! சுமதி அதைத்தானே உணர்த்தினுள் ! இந்த நியாயம் அவனுக்கு ஏன் படவில்லே?

''சரி... சாப்பிட வாருங்கள்.''

அவன் கிளம்பினான்.

''இப்போது பசி எடுத்து விட்டதா ?'' என்று கேட்டுச் சிரித்தாள் அவள்.

''பசியான பசி, போயேன்!''

''சரி, சரி.... என்னோடு கீழே வரா தீர்கள். போய் அம்மாவை அனுப்புகிறேன்... கொஞ்சம் பிகு பண்ணிக் கொண்டு அப்புறம் இறங்கி வாருங்கள்'' என்றாள் அவள்.

அவன் தலையசைத்தான்.

''பாவம், குழந்தை! பசித்தால் கூடச் சொல்லத் தெரியாது! எப்படித்தான் குடும்ப பாரம் உறைக்கப் போகிறதோ, தெரியவில்லே இவனுக்கு!'' என்று ஆதுரப்பட்டுக் கொண்டு மாடியேறிய அம்மாவை இப்போது பத்ம நாபன் பார்த்த பார்வையில் குழந்தைத் தனத்தை மீறிய வேறு என்னவோ இருந்தது!

குட்டிக் கதை

பாஸ்கர நியாயம்

சேலம் வைகிரிதாரி பிரசாத் அவர்களுக்கு ஓர் அருமை மகள். சிவந்த மேனியள். அவளுக்கு மணம் முடிக்க ஒரு மாப்பிள்ளையைப் பார்த்தார் திரு கிரிதாரி பிரசாத். மாப்பிள்ளே நன்கு படித்துப் பட்டம் பெற்றவன்; அரசாங்கத்தில் உயர் பதவி வகிப்பவன். இன்னும் பல நல்ல அம்சங்களும் இருந்தன. இருப்பினும் ஸ்ரீமதி கிரிதாரி பிரசாத் ஒப்பவில்லே. ''என் சிவந்த பெண்ணுக்கு இந்தக் கறுப்பு மாப்பிள்ளேயா? கூடவே கூடாது!'' என்றார்.

''நிறம் ஒன்றைத் தவிர பாக்கி எல்லா அம்சங்களிலும் மிக நல்லவனாக இருக் கிருனே! அதனால் இவனுக்குத்தான் மணம் முடிக்க வேண்டும்'' என்று சொன்னார் ஸ்ரீ கிரிதாரி பிரசாத் அவர்கள். இப்படிக் கணவனுக்கும் மனேவிக்கும் வாக்குவாதம் முற்றியது. கடைசியில் இந்த வழக்கை ''ஐயாவிடம் சொல்லுவோம். அவர் கொடுக்கிற தீர்ப்பே முடிவான தீர்ப்பு'' என்று இருவரும் தீர்மானித்துக் கொண்ட னர். ''ஐயா'' என்று கிரிதாரி பிரசாத் அவர்கள் குறிப்பிடுவது திரு பாஸ்கரத் தொண்டைமான் அவர்களே.

வழக்கையும் இருவர் கட்சியையும் திரு பாஸ்கரத்தொண்டைமான் அவர்கள் கேட்டார்கள். சற்று நேரம் யோசித்தார்கள். பின்னர் ஸ்ரீமதி கிரிதாரி பிரசாத் அவர்களே நோக்கி ஒரு சிறு கேள்வி கேட்டார்கள்.

''ஏன், அம்மா! இந்த மாப்பிள்ளே என்னே விடவா கறுப்பு?''

அவ்வளவுதான்! வழக்கு ஸ்ரீ கிரிதாரி பிரசாத் பக்கம், யாதொரு மனத் தாங்கலும் இல்லாமல் ஜயித்து விட்டது!

காரணம், திரு பாஸ்கரத் தொண்டைமான் எவ்வளவு கறுப்போ, அவ்வள வுக்கு ஸ்ரீமதி பாலம்மாள் பாஸ்கரத் தொண்டைமான் சிவப்பு!

— பாஸ்கரத் தொண்டைமானின் மணிவிழாவில் கூறப்பட்டது.

குண்டு மல்லிகை

அரு. ராமநாதன்

"டேய், பிச்சுமணி! நீ எந்தப் பெண்ணைக் காதலிப்பதாக முட்டாள்தனமாகக் கற்பனை செய்து கொண்டிருக்கிறாயோ அவளை நீ கலியாணம் செய்து கொள்ளப் போவதில்லை! இதை நீ முதலில் புரிந்து கொள்!" என்று மேஜர் ராமதுரை ஒரு பீரங்கிக் குண்டைத் தூக்கி வீசினார்.

"தாத்தா!......" என்று பிச்சுமணி கிரீச்சிட்டான்.

"டேய், மடையா! அந்தத் திருவல்லிக்கேணி வாத்தியாரம்மா உனக்கு ஏதோ சொக்குப் பொடி போட்டிருக்கிறாள். அந்த மயக்கத்தில்தான் நீ காதல் கீதல் என்றெல்லாம் என்னிடமே பிதற்றுகிறாய்."

"தாத்தா! நான் ஒன்றும் பிதற்றவில்லை!" என்று பிச்சுமணி படபடத்தான். உமாவின் மீது அவன் கொண்டிருக்கும் காதலையெல்லாம் அடைமழை போல் கொட்டித் தன் தாத்தாவின் கோபத் தீயை அணைத்துவிடவேண்டும் என்று அவன் உதடுகள் துடித்தன.

ஆனால் மேஜர் அதற்கு இடம் கொடுக்காமல் போராட்ட உத்வேகத்துடன், "டேய் பயலே! நீ எடுப்பார் கைப் பிள்ளையாகிக் கடைசியில் குட்டிச் சுவராகப் போய் விடாதே!" என்று அதிபயங்கரமாக எச்சரித்து விட்டுத் தம் பேரனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

பிச்சுமணியும் மனம் குமுறியவனாய் நிமிர்ந்து நின்று, "நான் ஒன்றும் கைப் பிள்ளையல்ல!" என்றான்.

"அந்த வாத்தியாரம்மாவுக்கு நீ கைப் பிள்ளை மாதிரிதானேடா! அவள் பாடம் சொல்லிக் கொடுத்துத்தான் நீ இப்படியெல்லாம் ஆடுகிறாய்! டியூஷன் சொல்லிக் கொடுத்து வயிறு பிழைக்கும் அந்த வாத்தியாரம்மாவுக்குத் திடீர்ப் பணக்காரியாகிவிட வேண்டுமென்ற ஆசை பிறந்து விட்டது! நீ பணக்கார வீட்டுப் பையன் என்பது தெரிந்ததும் உன்னைப் பிடித்துக் கொள்ள வலை வீசியிருக்கிறாள்! அந்த வலையில் நீயும் சரியாகச் சிக்கிக் கொண்டிருக்கிறாய்!"

"மிஸ் உமாவொன்றும் எனக்கு வலை வீசவில்லை, தாத்தா!"

"பின்னே நீதான் அவளுக்கு வலை வீசினாயோ? மடையன்! அப்படிக்கூட நீ சொல்லும்படி அவள் உனக்குப் பாடம் போதித்திருப்பாள்!"

"மிஸ் உமாவை அப்படி நினைக்காதீர்கள், தாத்தா! அவர்கள் மிகவும் நல்லவர்கள்!"

"என்னடா மிஸ்ஸூம் அவர்களும்? அவளுக்கு அவ்வளவு மரியாதையா? பலே! பலே!" என்று மகா ஏளனமாகக் கூறிய மேஜர், "டேய்! அந்த வாத்தியாரம்மா நல்லவளாக இருந்தால் தன்னைவிட வயதில் சின்னவனை ஏன் இழுத்துக் கொள்ளப் பார்க்கிறாள்?" என்று அறைகூவல் விடுத்தார்.

பிச்சுமணி ஏதோ சொல்ல வாய் எடுத்தான். அதற்குள் மேஜர் முந்திக்கொண்டு படபடப்போடு, "உன்னை அவள் பைத்தியக்காரனாக்கியிருக்கிறாள். ஆனால் அவளுடைய தந்திரம் பலிக்கக் கூடாது, அந்த விவகாரத்தையே கத்திரித்துவிட வேண்டும் என்பதற்காகத்தான் நான் அவசர அவசரமாக உனக்கும் லலிதாவுக்கும் கலியாணத்தை முடித்துவிட ஏற்பாடு செய்தேன். அதையும் அந்தச் சூழ்ச்சிக்காரி உன் மூலமாகவே வெடி வைத்து உடைத்து விட்டாள்!" என்று கத்தினார்.

"கல்யாணம் முறிந்து போனதற்கு நான்தான் முழுப் பொறுப்பாளி தாத்தா! இதில் அநாவசியமாக மிஸ் உமாவையும் இழுக்காதீர்கள்!"

"நானா அவளை இழுக்கிறேன்? அவள்தான் உன்னை இழுத்துத் தன் கைக்குள் போட்டுக் கொண்டு எனக்கு எதிராகக் கட்சி கட்டி இந்த நாடகமெல்லாம் ஆடுகிறாள்! அந்த வாத்தியாரம்மா பெரிய எமகாதகி! மகா தந்திரக்காரி! குயுக்தியாகச் சூழ்ச்சி செய்வதில் கைதேர்ந்த கள்ளி! அந்தக் கூனியின் பேச்சைக் கேட்டால் உன் முதுகும் வளைந்து போகும்!" என்று மேஜர் வசைமாரிகளைப் பொழிந்தார்.

பிச்சுமணியால் பொறுக்க முடியவில்லை. தன் இரு காதுகளையும் பொத்திக்



கொள்ள முயன்றவனுக, ''தாத்தா!'' என்று வீரிட்டுக் கத்தினன்.

மேஜரோ மேலும் அவனுடைய ஆத்திரத்தை முடுக்கி விடுவதுபோல ''அந்த வாத்தியாரம்மா — கூனிதான்! அசல் கூனிதான்!'' என்று அழுத்தி அழுத்திக் கூறினர்.

பிச்சுமணி திடீரென வெளுத்துப் போன முகத்துடன் முன்னல் பாய்ந்து வந்தான். தன் வலது கையை முஷ்டி பிடித்தான். பிறகு அந்தக் கையை ஓங்கித் தன் எதிரேயுள்ள மேஜையின் மீது ஒரு குத்து விட்டான். அது மேஜரின் முகத்தின் மீதே குத்து விடுவது போல் அதிமுரட்டுத்தனமாக ஒலித்தது.

மேஜர் வியப்புடன் மலைத்துப்போய் அப்படியே ஒரு கணம் செயலற்று நின்ருர். தம் பேரன் முரடன் தான் என்ருலும் தமக்கெதிராகத் தம் மேஜையின் மீதே அவ்வளவு மூர்க்கத்தனமாக அவன் கையை ஓங்கி ஒரு குத்துவிடுவது அதுவே முதல் தடவையாகும் !

பிச்சுமணிக்கு மேலும் முகம் வெளுத்தது. தன் இதயத்தின் அழகு தேவதையாக, தன் வாழ்க்கையின் ஒரே துருவ நட்சத்திரமாக நற் பண்புகளுக்கெல்லாம் உறைவிடமான திருஉருவமாக எந்த உமாவை அவன் கருதியிருக்கிருனே அந்த உமாவைச் சூழ்ச்சிக்காரியான கூனி என்றும், காதல் வலை விரிக்கும் கள்ளி என்றும் தன் தாத்தாவே இகழ்வதையும், அவற்றையெல்லாம் தன் காதாரக் கேட்டுக் கொண்டிருப்பதையும் அதற்கு மேலும் அவனல் பொறுக்க முடியவில்லை. உமாவின் வாஞ்சை ததும்பும் விழிகளையும், தெய்வீகப் பொலிவுகளையும் நினைத்து அவன் உள்ளம் ஒருபுறம் விம்மியது. இன்னெருபுறம் அந்த உமாவைத் தன் தாத்தா மிகக் கேவலமாக இகழ்வதையும் நினைத்து அளவுகடந்த ஆத்திரத்தால் அவனுடைய உணர்வுகளெல்லாம் பொங்கி அவனுடைய உதடுகள் ஆக்ரோஷத்தோடு துடிதுடித்தன.

ஆத்திரத்தை அடக்கிக் கொள்வதற்குப் போதிய அவகாசமில்லாத நிலையில் அவன் மூச்சிறைக்கப் படபடப்புடன், ''தாத்தா ! இனி உமாவைப் பற்றி நீங்கள் அப்படி ஒரு வார்த்தை கூடப் பேசாதீர்கள். நான் புனிதமாக மதிக்கும் ஒன்றை நீங்கள் கேவலமாகப் பேசுவதென்ருல் அதை இனியும் என் காதால் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. என்ன தாத்தா, புரிகிறதா? உமாவைப் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லாதீர்கள். அதை நான் விரும்ப மாட்டேன்'' என்று கூவினன். ஆனல் அவ்வார்த்தைகள் நெருப்புக்கு நெய் வார்ப்பது போல் மேஜரின் ஆத்திரத்தைப் பன்மடங்காகக் கிளப்பின.

''நீ என்னடா விரும்புவது?'' என்று மகா அலட்சியமாகக் கத்திய மேஜர், ''நான் என்ன பேசலாம் என்றுகூட நீ உத்தரவு போட ஆரம்பித்து விட்டாயோ ? இப்படியெல்லாம் நீ குதிப்பதற்கு என்னடா அர்த்தம்? இந்த வீட்டுக்குத் தலைவன் நீயா அல்லது நானு?'' என்று ஆவேசமாகக் கேட்டார்.

''என் சொந்த விஷயங்களைப் பொறுத்த வரை நான்தான் தலைவன்!'' என்று பிச்சுமணியும் ஆணித்தரமாகப் பதிலளித்து விட்டு, ''நான் உமா விஷயமாக என்ன செய்யத் தீர்மானித்திருக்கிறேன் என்பது என் சொந்த விஷயம்!'' என்று அதற்கு ஒரு முத்தாய்ப்பும் வைத்தான்.

இத்தகையதொரு வாக்கியத்தைத் தம் பேரனின் வாயிலிருந்து எந்தக் காலத்திலும் மேஜர் எதிர்பார்த்திருக்க முடியாதாகையால் அந்த வாக்கியத்தின் அர்த்தபுஷ்டியையோ, அதன் பளுவையோ உணராதவர் போல ஒரு கணம் திருதிரு வென விழித்தபடி பிச்சுமணியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

பிறகு அவர் மிடுக்கான குரலிலேயே, ''ஓஹோ! நீ அவ்வளவு தூரம் பேசக் கற்றுக் கொண்டு வந்து மகாப் பெரிய மனுஷஞகி விட்டாயோ ?ஆனல் தலையில்லாமல் வால் எப்படியடா ஆடும்? நான் இல்லாமல் நீ எங்கிருந்தடா முளைத்தாய்?'' என்று அதிகாரத்தோடு கேட்டார்.

''அதற்காக உங்களுக்கு நான் அடிமை என்று அர்த்தமல்ல, தாத்தா! எனக்கென்றும் தனியாக ஓர் இருதயம் உண்டு! அந்த இருதயம் சுயமாக எண்ணுவதற்கு உரிமையும், அதை நிறைவேற்றுவதற்குப் பரிபூரண சுதந்திரமும் எனக்கு உண்டு! உங்கள் பணமோ அல்லது அதிகாரமோ, அதைக் கட்டுப்படுத்தி விடவும் முடியாது!'' என்று பிச்சுமணி மூச்சிறைக்க மடமட வென்று சுதந்திரப் பிரகடனம் செய்து விட்டான். பிறகு தன் சவாலுக்குப் பதிலை எதிர்நோக்குவது போல் தன் பலத்தை யெல்லாம் திரட்டிக் கொண்டு தலை நிமிர்ந்து நின்ருன்.

அந்தத் தலை நிமிர்வு 'நான் குழந்தையாக இருந்த போது உங்களுடைய வம்சத்தின் விளக்காக மட்டும்தான் உங்கள் கண்களுக்குத் தோற்றமளித்தேன். பிறகு நான் சிறுவனுகச்

மூலத்தைச் சுருக்குவதற்குப் புதிய வழி

அரிச்சலைப் போக்குகிறது ● வலியிலிருந்து
துரித நிவாரணம் அளிக்கிறது.

முதல் தடவையாக, விஞ்ஞானம் மூலத்தைச் சுருக்கவும், அரிச்சல், இரத்தப்போக்கு மற்றும் வலியிலிருந்தும், புதியதொரு வலியில்லாத முறையில் நிவாரணம் அளிக்கக்கூடிய மருந்தொன்றைக் கண்டுபிடித்திருக்கிறது.

டாக்டர்களின் கண்காணிப்பில் நடத்தப்பட்ட சோதனைகளும் இதை நிருபித்தன. வலியும் அரிச்சலும் உடனேயே குணப்படுத்தப்பட்டன. மேலும், இதமாக வலியைப் போக்குவதுடன் உண்மையாகவே சுருக்கமும் ஏற்பட்டது.

மேலும், வியக்கத்தக்கதென்னவென்றால் இந்த நல்ல முன்னேற்றம் 10-20 வருடங்களாகப் பாதிக்கப்பட்டவர்களிடமும்கூடக் காணப்பட்டது.

இதன் இரகசியம் ஒரு புதிய குணமளிக்கும் மருந்தாகும் பயோ-டைன்*-உலகப்பிரசித்தமான ஒரு ஆராய்ச்சிக்கூடத்தின் கண்டுபிடிப்பு. இந்த புதிய குணமளிக்கும் மருந்து ப்ரிப்பரேஷன் H* என்ற பெயரில் களிம்பு வடிவத்தில் கிடைக்கிறது. உண்மையிலேயே மூலத்தைச் சுருக்குவதுடன், ப்ரிப்பரேஷன் H வழவழப்பாக்குவதன் மூலம் மலம் கழிக்கும்போதுள்ள வலியைக் குறைக்கிறது.

நீங்கள் மூலத்தால் அவதிப்பட்டால் ப்ரிப்பரேஷன் H புத்தகத்தின் இலவசப் பிரதிக்கு (ஆங்கிலம்-ஹிந்தி) இன்றே கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்: டிபார்ட்மென்ட் 38, ஜாப்ரே மானேர்ஸ் & கோ லிட்., த. பெ. நிர். 976, பம்பாய்-1

ப்ரிப்பரேஷன் H *ட்ரேட் மார்க்

P-H-5 TAM

சிரித்து விளையாடிய போது உங்களுக்கு ஒரு விளையாட்டுப் பொருளாகவும்விளங்கினேன். பிறகு நான் வாலிப தசை அடைந்த போது உங்களுடைய வம்ச விளக்கின் பிரகாசமான வெளிச்சத்தில் உங்களுடைய கனவுகளைப் பிரதிபலிக்கும் நிலைக் கண்ணாடியாகவும் மாறினேன். இதற்கிடையில் நான் அவ்வப்போது உங்களுக்குப் பிரியமான முட்டாள் பையன் பிச்சுமணியாகவும் இருந்தேன். ஆனால் இப்போதோ நான் மனிதனாகி விட்டேன். உங்களையும் தாண்டி நின்று தனியாகச் சிந்திக்கவும், தனித்தியங்கவும் கூடிய சக்தியைப் பெற்று விட்டேன்!' என்று அவன் தன் மனிதத் தன்மையை நிலை நிறுத்த முயல்வது போல் இருந்தது. இந்தப் போராட்டத்தின் உச்ச கட்டத்திலிருந்து இனிப் பின்வாங்கவே கூடாதென்றும் அவன் தீர்மானித்துக் கொண்டான். அது அவனுடைய முகத்தில் பரவும் ரத்தத்தின் சிவப்பிலிருந்தே தெளிவாகத் தெரிந்தது.

மேஜருக்கோ எதிர்பாராத ஓர் அதிசய மிருகத்தைக் கண்டது போல் வியப்பும் மிரட்சியும் ஏற்பட்டன. தனி மனிதனின் சுதந்திரப் பிரகடனத்துக்குரிய வசனங்களைத் தம் பேரன் ஏதாவது புத்தகத்திலிருந்து மனப்பாடம் செய்து கொண்டு வந்து ஒப்புவிக்கிறானா அல்லது அந்த வாத்தியாரம்மாள் உமா சொல்லிக் கொடுத்த வசனங்களைத்தான் கிளிப் பிள்ளை போல் திருப்பிச் சொல்கிறானா என்ற சந்தேகமும் மூண்டது. கடைசியில் அந்த வாத்தியாரம்மாதான் தமக்கு எதிராகத் தம் பேரனையே அவ்வாறு சுதந்திர முழக்கத்துடன் நிறுத்தியிருக்கிறாள் என்றும், தம் அருமைப் பேரனைத் தம் சொத்துக்களோடு அந்தக் கபடக்காரி தட்டிப் பறித்துக் கொள்ள இடமே கொடுக்கக் கூடாதென்றும் தீர்மானித்துக் கொண்டார். தம்மை எதிர்க்கவும் துணிந்து விட்ட பேரனின் ஊமை பலத்தை உணர்ந்ததும் அந்த அசுர பலத்தையெல்லாம் எப்படியும் மடக்கிவிட வேண்டுமென்றும் வீறு கொண்டார்.

''டேய், பிச்சுமணி! நீ ஏதோ திடீரெனப் பெரிய மனுஷன் ஆகிவிட்ட மாதிரி சொந்த விஷயம், சுதந்திரம் என்றெல்லாம் என்னென்னவோ சொல்கிறாய்! சொல்லி விட்டுப் போ! ஆனால் அந்த வாத்தியாரம்மா எந்த விதத்திலும் உனக்குப் பொருத்தமானவள் அல்ல! அதை முதலில் நீ தெளிவாகப் புரிந்து கொள்! அவளைப் பற்றி டாக்டர் ஜகந்நாதன் ஏராளமாக என்னிடம் சொல்லியிருக்கிறார். முக்கியமாக அவள் உன்னைவிட வயதானவள்!''

''வயதை நான் பெரிதாக மதிக்கவில்லை, தாத்தா!''

''நீ எதைத்தான் மதிப்பாய்? நம் செல்வம், செல்வாக்கு, குடும்ப கௌரவம் முதலானவற்றைக்கூட நீ மதிக்க மாட்டாய்! உன் முட்டாள்தனம் ஒன்றைத்தான் பெரிதாக மதிப்பாய்!'' என்று மேஜர் அழுத்தமாக ஒரு முறை கனைத்து விட்டு, ''அந்த வாத்திச்சியால் உன்னை முட்டாளாக்கிக் கொள்வது உன் சொந்த விஷயமாகவே இருக்கட்டும். உலக அனுபவம் தெரியாத பணக்காரப் பிள்ளைகள் ஏதாவது ஒரு புத்தி மயக்கத்தால் அவளைப் போன்ற பெண்களின் விவகாரங்களில் மாட்டிக் கொள்வது சகஜம்தான்! ஆனால் அதோடு அந்த விவகாரத்தைத் தலை முழுகி விடுவதுதான் புத்திசாலித்தனமே தவிர, அந்த விவகாரத்தைத் தன் தலை மீது தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடுவது சுத்த பைத்தியக்காரத்தனம். என்னடா பிச்சுமணி, நான் சொல்லுவது புரிகிறதா? அவள் உன்னை எப்பேர்ப்பட்ட விவகாரத்தில் மாட்டிவைத்திருந்தாலும் சரி, கவலைப்படாதே! எதாக இருந்தாலும் சிறிதும் கூசாமல் என்னிடம்சொல்! கொஞ்சம் பணத்தை அவளுக்கு விட்டெறிவோம்! அதோடு அவள் திருப்தியடைந்து உன்னை விட்டு விடட்டும். அதற்கு மேலும் அவள் ஏதாவது தகராறு செய்ய முயன்றால் நான் கவனித்துக் கொள்கிறேன். அந்த விவகாரத்தையே என்னிடம் விட்டு விடு!'' என்றார் வீராவேசமாக.

பிச்சுமணிக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. உமாவுக்காகப் பரிந்து கொண்டு மடை திறந்த வெள்ளம் போல் வார்த்தைகளைக் கொட்டவேண்டும் என்று துடிதுடித்தான். ஆனால் அவனுக்குப் பலவாறாகப் பொங்கியெழுந்த ஆத்திரச் சூறாவளிகளில், ''தாத்தா! உமாவை நீங்கள் சாமானியப் பெண்ணாக நினைக்காதீர்கள், தாத்தா!'' என்று கூவத்தான் முடிந்தது.

அவனை மேஜர் ஒரு கணம் வெறித்து நோக்கி விட்டு, ''டேய், காதலுக்காக யாரோ ஒரு சக்கரவர்த்தி முடி துறந்ததாக உன் நண்பன் உன்னிடம் சொல்லியிருக்கிறானே! அது போல் நீயும் வீடு வாசல், சொத்து சுகங்களையெல்லாம் கூடத் துறக்கவும் துணிந்து விடுவாயோ?'' என்று அழுத்தம் திருத்தமாகக் கேட்டார்.

''தாத்தா! நான் ஒட்டாண்டி ஆனாலும் உமாவின் மீதுள்ள எண்ணத்தை ஒரு போதும் கைவிட மாட்டேன்!'' என்றான் பிச்சுமணியும் அழுத்தமாக.

''நீ ஒட்டாண்டி ஆகி விட்டால் அப்புறம் அவளே உன்னைக் கைவிட்டு விடுவாள்! 'ஏ பாய், கெட் அவுட், இடியட்!' என்று கத்துவாள். அப்போதுதான் உன் புத்தியில் உறைக்கும்!''

''தாத்தா! காதலைப் பற்றி உங்களுக்கு ஒன்றும் தெரியாது, தாத்தா!'' என்று பிச்சுமணி உணர்ச்சி வசத்திலேயே கண்களில் நீர் துளிர்க்க பலமாகக் கத்தினான்.

''காதலைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரிய வேண்டியதேயில்லை! அதெல்லாம் உன் சொந்த விஷயமாகவே இருக்கட்டும்! ஆனால் அந்த வாத்தியாரம்மாளை நீ கல்யாணம் செய்து கொள்வது என்பது.....'' என்று மேஜர் ஏதோ சொல்ல முயன்றார்.

அதற்குள் பிச்சுமணி குறுக்கிட்டு, ''அதுவும் என் சொந்த விஷயம்தான் தாத்தா!'' என்று முழங்கினான்.

''அவளை எப்படி நீ கல்யாணம் செய்து கொள்ள முடியும்?'' என்று மேஜர் படபடத்தார்.

''நான் காதலித்த பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள முடியாவிட்டால் நான் வேறு எந்தப் பெண்ணையும், எந்தக் காலத்திலுமே கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன். இதுதான் என் ஒரே முடிவு!'' என்று பிச்சுமணி உறுதியான குரலில் கூறினான்.

'' அந்த வாத்தியாரம்மாவின் பிணத்தை நான் பார்த்தாலும் பார்ப்பேனே தவிர, அவள் உன்னைக் கலியாணம் செய்து கொள்வதை ஒரு போதும் என் கண்களால் பார்க்க மாட்டேன்!''

''அப்படியானால் உமாவின் பிணத்தோடுதான் என் பிணத்தையும் சேர்த்து நீங்கள் பார்ப்பீர்கள் தாத்தா!''

உணர்ச்சிகரமான இந்த வாக்கியத்தைப் பிச்சுமணி தன் தாத்தாவின்முகத்தின் மீது வீசியெறிந்தாலும் அங்கிருந்து விருட்டென்று குதித்தோடி யிருப்பான். ஆனால் அதற்குள், ''டேய், பிச்சுமணி! ஒரு நிமிஷம் நில்!'' என்ற மேஜரின் குரலும் அவருடைய முகபாவத்திலிருந்த ஏதோ ஒன்றும் பிச்சுமணியைத் தடுத்து நிறுத்தின.

''பிச்சுமணி, இங்கே வா!''

பூசாரியின் மந்திரக்கோலால் கட்டுண்ட ஆட்டுக் குட்டி போல் பிச்சுமணி அவர் அருகில் வந்து நின்றான்.

மேஜரின் கண்கள் சகிக்க முடியாத தீப் பொறிகளால் மின்னின. அவருடைய மெலிந்த உதடுகளில் வறட்சியின் பயங்கரமான ஒரு புன்முறுவலும் நெளிந்தது.

அவர் தம் பலமனைத்தையும் தம் கைகளில் திரட்டிக் கொண்டு பிச்சுமணியின் சட்டைக் காலர்களைப் பிடித்திழுத்து, அவனுடைய முகத்தைத் தம் முகத்தருகில் நெருக்கி வைத்துக் கொண்டு, ''உன்னைக் குழந்தையிலேயே எடுத்து வந்து இத்தனை வருஷங்களாக அரும்பாடு பட்டு வளர்த்து ஆளாக்கியவன் நான்! உனக்காகவே என் உடம்பில் உயிரைச் சுமந்து கொண்டிருப்பவன் நான்! உனக்கு நான் வேண்டுமா? அல்லது அந்த வாத்தியார் அம்மா வேண்டுமா? இரண்டில் ஒன்றைத் தெளிவாகச் சொல்லி விடு!'' என்று அழுத்தம் திருத்தமாகக் கேட்டார் மேஜர்.

அந்தக் கேள்விக்குப் பிச்சுமணி என்னதான் பதில் சொல்வான்? இரண்டு கண்களில் எந்தக் கண் வேண்டுமென்று கேட்டால் யாரால் பதில் சொல்ல முடியும்?

பிச்சுமணி தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான். (தொடரும்)



வேதாந்தத் தத்துவக் கதை

வித்துக்கு வித்து

ப. கலாபாரதி

அத்தை மகனும், மாமன் மகளும் மணப்பதாக இருந்தனர். அத்தை மகன் சகவாச தோஷத்தாலும், சூழ்நிலவசத்தாலும் நாஸ்திகனாக இருந்தான். மாமன் மகளோ தெய்வ பக்தி மிகுந்தவளாக இருந்தாள். இருவரும் கொள்கைகளில் இரு துருவங்களாக இருந்தாலும், அவர்கள் அன்பில் மாறுதல் இல்லை.

இருவருக்கும் கடவுள் தத்துவத்தைப் பற்றி அடிக்கடி விவாதங்கள் நடக்கும். அவரவர் தங்கள் கொள்கைகளுக்கு ஆதாரம் காட்டி அடித்துப் பேசுவர்.

''கடவுளா.... கடவுள் என்பது ஒன்றுமில்லை... ஒரு சூனியம்...ஏமாற்று வித்தை.... கண்ணால் எதைப் பார்க்கிறோமோ, ஆராய்ச்சியாலோ விஞ்ஞானத்தாலோ எது நிரூபிக்கப்படுகிறதோ, அதை மட்டும் நம்புவேன்...''

''காற்று அடிக்கிறது.... மரம் கொடி அசைகிறது. அதை உணருகிறோம். காற்றைக் கண்ணால் பார்க்கிறோமா? அதேபோல் மின்சார சக்தியின் பலதரப்பட்ட செயல்களைப் பார்க்கிறோம். விசிறியாய்ச் சுழலுகிறது. விளக்காய் எரிகிறது. மின் சக்தியைக் கண்ணால் காண்கிறோமா?... காற்றை உணருகிறோம். மின் சக்தியின் செயல்களை அறிகிறோம். அதற்காகக் காற்றோ, மின் சக்தியோ இல்லை என்று சொல்லலாமா? அதுபோல் கடவுள் என்பது உலகையே ஆக்கிப் படைத்துக் காத்து அழித்து ஆட்டி வைக்கக் கூடிய வல்லமை பொருந்திய சக்தி. அத்தான்! எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. சொல்வாயா? அதோ ஓடுகிறதே கோழி, அது எங்கேயிருந்து உண்டாயிற்று?''

''முட்டையிலிருந்து...''

''அந்த முட்டை எதிலிருந்து உண்டாகிறது...''

''கோழியிடமிருந்து!..''

''அந்தக் கோழி.....?''

''முட்டையிலிருந்து வருகிறது. இது தெரியாதா? இதுதானா பெரிய சந்தேகம்..... பூ! என்னமோ பயந்து விட்டேன்......''

''இரு... அவசரப்படாதே, அத்தான்! எது முதலில் வந்தது? கோழியிலிருந்து முட்டையா? முட்டையிலிருந்து கோழியா?....''

விழிக்கிறான் அத்தான். பதிலே இல்லை. வியப்போடு மாமன் மகளைப் பார்க்கிறான்.

''ஏன் அத்தான் விழிக்கிறாய்? தெரிந்து கொள். எழுத்துக்கெல்லாம் முதலாக அகரம் இருப்பது போல், உலகத்து உயிர்களுக்கெல்லாம் ஆதியான தாயும், தகப்பனும் கடவுள்தான்..... அவனின்றுதான் சகல ஜீவன்களும் ஜனித்தன. அவன்தான் உலகத்து வித்துக்களுக்கெல்லாம் மூல வித்து. முதல்வித்து. அவனின்றுதான் முதல் கோழியும், முட்டையும் உண்டாயின. அவனன்றி ஓரணுவும் அசையாது. இதைத்தான் வேதாந்தத்தில் பீஜாங்குர நியாயம் என்கின்றனர். அவனை ஸ்தூல வடிவமாகவும், சூக்ஷ்மமாகவும் அறியலாம். கடவுளை விஞ்ஞானத்தால் அறிய முடியாது. மெய்ஞ்ஞானத்தால் உணரத்தான் முடியும்... ஆனால் உலகம் அஞ்ஞானத்திலேதான் உழலுகிறது: கடவுள் இப்படித்தான் இருப்பார் என்று வர்ணித்துச் சொல்ல முடியாது. அதைக் கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்..... நாம் நம்பிக்கையோடு அவரை அணுகினால் அவரும் நம்மிடம் முன்னோக்கி வருவார். கடவுள் இப்படி இல்லை... அப்படி யிருப்பார்.... அப்படியில்லை. இப்படி இருப்பார்.... என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாததை ''நேதி... நேதி நியாயம்'' என்று சொல்வதுண்டு. அவர் எப்படியும் இருப்பார். அணுவில் பரமாணுவாகவும், அண்டத்தில் பிரும்மாண்டமாகவும் இருக்கிறார். நீ எப்படி நினைக்கிறாயோ, அப்படியிருப்பார். நாம் காணும் கோணமும், உள்ளம் உணரும் பாவமும் வேறுபட வேண்டும், மாறுபட வேண்டும். அப்போது உண்மை தெரிந்து விடும், உள்ளம் தெளிந்துவிடும்......''

'' உண்மை தெரிந்து விட்டது.... உள்ளம் தெளிந்து விட்டது.... உன்னையும், உன் தத்துவத்தையும் உணர்ந்துவிட்டேன். இனி நான் உன்னுடையவன்.....'' என்று அத்தை மகன் மாமன் மகள் கரம் பற்றினான்.





ரப்பரின் எல்லா நன்மைகளும்

வெறும் காலுடன் நிறைய நடந்த பிறகு, சுகமளிக்கும்
மிருதுவான இந்த பாட்டா ஸ்லிப்பர்களில் ஒன்றை அணிந்து
கொள்ளுங்கள். குளிர் காற்றுச் சுகம், நடக்கையில்
ஓசை எழுப்பாத அடிப்பாகம் சுலபமாகச் சுத்தம் செய்யக்கூடிய
பொருள்கள் ஆகிய அடிப்படையிலே உங்கள்
இன்பத்தை மும்மடங்காக்க வென்று திட்டமிட்டு
இவை தயாரிக்கப்பட்டுள்ளன.

Bata



பிள்ளை எனும் பிரமை

வாசவன்



சங்கரிப் பாட்டியின் வீடு கொள்ளாமல் கூட்டம்.

எல்லோருக்கும் அந்த விஷயத்தைத் தெரிந்து கொள்வதில் ஆவல் இருந்தது.

''என்ன பாட்டி, உங்கள் பிள்ளை அவருக்கு வரப்போவதாகக் கடிதம் வந்திருக்கிறதாமே?'' இதே விஷயத்தைப் பலரும் பல மாதிரிகளாகக் கேட்டார்கள்.

''ஆமாம்! எங்கள் விசு வரப் போறான்!''

சங்கரிப் பாட்டியின் குரல் எல்லோருக்குமே பதில் சொல்கிற மாதிரி உரக்க ஒலித்தது. 'யாரும் தனித் தனியே கேட்டுக் கழுத்தை அறுக்க வேண்டாம். இதுதான் நான் எல்லோருக்கும் சொல்கிற பதில்' என்னும் மாதிரி கண்டிப்பாகவும் ஒலித்தது.

தெரிந்து கொள்ள வேண்டிய விஷயத்தைத் தெரிந்து கொண்டு, தெரிவிக்க எதுவுமே இல்லை என்பதைப் போல எல்லோரும் போய் விட்டார்கள்.

சங்கரிப் பாட்டிக்கு எரிச்சலாக இருந்தது. 'என்னுடைய விசு வருகிறது எவ்வளவு பெரிய விஷயம்! அதை இவர்கள் எவ்வளவு சாதாரணமாகக் கேட்டு விட்டுப் போகிறார்கள்! ஓர் ஒடிந்துபோன ஊசி காணாமல் போனால்கூட இந்த மனிதர்கள் என்னமாய்த் துடிக்கிறார்கள்? இருபத்தைந்து வருஷங்களாய்க் காணாமல்போன என் விசு திரும்பி வருவது, இவர்களுடைய ஒடிந்து போன ஊசியைவிடச் சின்ன விஷயமா?'

விசு வருகிற பெரிய விஷயத்தைத் திரிபுரி கேட்டால் எவ்வளவு சந்தோஷப்படுவாள்!

சாயங்காலத் தபாலில் வந்த விசுவின் கடிதம், சங்கரிப் பாட்டியின் கையில் இருந்தது. அதை மடியில் வைத்துக் கொண்டாள். கதவு நாதாங்கியை இழுத்துப் போட்டுவிட்டு நடந்தாள்.

விளக்கேற்றி வைக்கும் நேரம். எந்த நேரமானால் என்ன? திரிபுரிக்கு எல்லாமே ஒன்றுதான்! பிறவிக் குருடு. இருட்டுக் குள்ளேயே அறுபத்தைந்து வருஷங்களாய்ப் புளிக்கப் புளிக்க வாழ்ந்து கொண்டிருப்பவள்.

சங்கரிப் பாட்டிக்கும் அவளுக்கும் இந்தப் புளிப்பில் தான் ஆழ்ந்த நட்பு மலர்ந்தது.

சங்கரிக்கு ஒளியில் புளிப்பு. திரிபுரிக்கு இருளில் புளிப்பு.

திரிபுரி இடுப்பில் செருகி இருந்த பையை எடுத்துத் துழாவி, அதிலிருந்து திருநீற்றை அள்ளி நெற்றி நிறையப் பூசிக்கொண்டு, ''முருகா!'' என்று முனு முனுத்த போது, சங்கரிப் பாட்டி அங்கு போய்ச் சேர்ந்தாள்.

காலடி ஓசையைக் கேட்டு, ''யாரு ?'' என்று கேட்டாள் திரிபுரி.

''நான்தாண்டியம்மா, சங்கரி வந்திருக்கேன் !'' என்று நீட்டிக் கொண்டே, திரிபுரியின் கால்மாட்டில் உட்கார்ந்தாள் சங்கரிப்பாட்டி. ''திரிபுரி! உனக்கு விஷயம் தெரியுமோடி? விசு வர்றதா லெட்டர் எழுதியிருக்காண்டி!'' என்று உற்சாகத்தோடு தொடங்கினாள்.

''உன் பிள்ளையாண்டானா?'' என்று சுருக்கமாகக் கேட்டு விட்டு மௌனமானாள் திரிபுரி.

வித்துட்டு ராத்திரியோடு ராத்திரியா போன வன்தானேடி அவன்? பெத்தவளாச்சேன்னு நெஞ்சிலே துளிப் பாசம் இருந்தா குடிஇருந்த வீட்டையாவது விட்டுட்டுப் போவானேல் லியோ? சாயபு கால்லே நீ போய் விழுந்தே. 'எல்லாத்தையும் எடுத்துக்கோ சாயபு. அந்த வீட்டை மட்டும் எனக்குக் கொடுத்துடு' அப்படீன்னு அழுதே! உன் பிள்ளையைவிட அவன் ஆயிரம் மடங்கு மேலானவன், விலை கொடுத்து வாங்கின வீட்டை உனக்காக விட்டுக் கொடுத்தானே அந்தப் புண்ணிய வான்? அப்படித் தவிக்க விட்டுட்டுத்தான் போனுனே! பிற்பாடோ — நீ செத்தியா இருக்கியான்னு ஒரு லெட்டர் போட்டானு? ஒரு நடைதான் வந்து போனுனு? ஒண் ணில்லே, ரெண்டில்லே. இருபத்தஞ்சு வருஷம்.........இத்தனை வருஷமாத் திரும் பிப் பார்க்காதவனுக்கு இப்போ என்னடி பாசம்.''

திரிபுரியின் கேள்விகளுக்கு நியாயமான பதில்களே இல்லே. சங்கரிப் பாட்டி பெரு மூச்செறிந்தாள்.

''திரிபுரி! உனக்கு ஒரு தாயாக இருந்து அனுபவம் இல்லே! அதனுல்தான் நீ இவ் வளவு கண்டிப்பாப் பேசறே! விசு ஆயிரம் குத்தங்களைச் செய்தாலும் அவன்தான் எனக் குச் சகலமும். ஒழுகுகிற வீட்டிலே இருந்துண்டு இந்தத் தள்ளாத வயசிலே நேத்துப் பணக் காரா ஆனவா வீட்டிலே எல்லாம் புழுக்கச்சி வேலே செஞ்சிண்டு ஊசி முனையிலே உயிரை வச்சிண்டிருக்கிற மாதிரி, ஏன் இன்னும் இருந்துண்டிருக்கேன்? விசு என்னிக்காவது ஒரு நாள் வருவான்னுதானே?''

திரிபுரி சிரித்தாள்.

சங்கரிப் பாட்டிக்குப் பேச்சை வளர்க்கப் பிடிக்க வில்லே. பேசாமல் எழுந்து போய் விட்டாள்.

மறு நாள்.

விசுவுக்கு என்ன என்ன பிடிக்கும்? வாழைப்பூத் துவட்டல். கறி வடாம் தாளி தம் பண்ணின கொத்ஸு. இருபத்தைந்து வருஷங்களாய் நிழலாகக் கிடந்ததை எல்லாம் நினைவாக்கிக் கொண்டு ஓடியாடித் திரிந்தாள்:

''அம்மா!.......''

அவள் உடம்பே புல்லரித்த மாதிரி இருந் தது. திரும்பிப் பார்த்தாள்.

விசுதான்!

அவளை விட்டுப் பிரிந்து சென்ற இருபத் திரண்டு வயசு விசுவுக்கும், இதோ எதிரே வந்து நிற்கும் இந்த விசுவுக்கும் எவ்வளவு வேற்றுமை? நம்பிக்கையற்றுக் கிழடு தட்டிய முகம். அடிக்கடி கீழ் நோக்கிப் பார்த்துக் கூர்மையாக எட்டிப் பார்க்கும் கொக்குக் கண்கள். வழுக்கைத் தலை. அவன் வாழ்ந்து கொண்டிருக்கிற வாழ்க்கையை அப்படியே தெரிவித்து விடுகிற அழுக்கு உடைகள்.

இருபத்தைந்து வருட இடைவெளியை நீவிக் கொண்டு ஊடுருவுகிற தீட்சண்யம் சங்கரிப் பாட்டியின் கண்களில்.

''விசு......'' — தேம்பலாய் வெடித்தாள்:

அவன் கீழே உட்கார்ந்து கொண்டான்;

விட்டுட்டு ராத்திரியோடு ராத்திரியா போன வன்தானேடி அவன்? பெத்தவளாச்சேன்னு நெஞ்சிலே துளிப் பாசம் இருந்தா குடிஇருந்த வீட்டையாவது விட்டுட்டுப் போவானேல் லியோ ? சாயபு கால்லே நீ போய் விழுந்தே. 'எல்லாத்தையும் எடுத்துக்கோ சாயபு. அந்த வீட்டை மட்டும் எனக்குக் கொடுத்துடு' அப்படீன்னு அழுதே ! உன் பிள்ளையைவிட அவன் ஆயிரம் மடங்கு மேலானவன், விலே கொடுத்து வாங்கின வீட்டை உனக்காக விட்டுக் கொடுத்தானே அந்தப் புண்ணிய வான்? அப்படித் தவிக்க விட்டுட்டுத்தான் போனானே! பிற்பாடோ — நீ செத்தியா இருக்கியான்னு ஒரு லெட்டர் போட்டானா? ஒரு நடைதான் வந்து போனானா? ஒண் ணில்லே, ரெண்டில்லே. இருபத்தஞ்சு வருஷம்.........இத்தனே வருஷமாத் திரும் பிப் பார்க்காதவனுக்கு இப்போ என்னடி பாசம்.''

திரிபுரியின் கேள்விகளுக்கு நியாயமான பதில்களே இல்லே. சங்கரிப் பாட்டி பெரு மூச்செறிந்தாள்.

''திரிபுரி! உனக்கு ஒரு தாயாக இருந்து அனுபவம் இல்லே! அதனுல்தான் நீ இவ் வளவு கண்டிப்பாப் பேசறே! விக ஆயிரம் குத்தங்களைச் செய்தாலும் அவன்தான் எனக் குச் சகலமும். ஒழுகுகிற வீட்டிலே இருந்துண்டு இந்தத் தள்ளாத வயசிலே நேத்துப் பணக் காரா ஆனவா வீட்டிலே எல்லாம் புழுக்கச்சி வேலே செஞ்சிண்டு ஊசி முனையிலே உயிரை வச்சிண்டிருக்கிற மாதிரி, ஏன் இன்னும் இருந்துண்டிருக்கேன்? விக என்னிக்காவது ஒரு நாள் வருவான்னுதானே?''

திரிபுரி சிரித்தாள்.

சங்கரிப் பாட்டிக்குப் பேச்சை வளர்க்கப் பிடிக்க வில்லே. பேசாமல் எழுந்து போய் விட்டாள்.

மறு நாள்.

விகவுக்கு என்ன என்ன பிடிக்கும்? வாழைப்பூத் துவட்டல். கறி வடாம் தாளி தம் பண்ணின கொத்ஸு. இருபத்தைந்து வருஷங்களாய் நிழலாகக் கிடந்ததை எல்லாம் நினைவாக்கிக் கொண்டு ஓடியாடித் திரிந்தாள்:

''அம்மா!.:.....''

அவள் உடம்பே புல்லரித்த மாதிரி இருந் தது. திரும்பிப் பார்த்தாள்.

விகதான் !

அவளை விட்டுப் பிரிந்து சென்ற இருபத் திரண்டு வயசு விகவுக்கும், இதோ எதிரே வந்து நிற்கும் இந்த விகவுக்கும் எவ்வளவு வேற்றுமை? நம்பிக்கையற்றுக் கிழடு தட்டிய முகம். அடிக்கடி கீழ் நோக்கிப் பார்த்துக் கூர்மையாக எட்டிப் பார்க்கும் கொக்குக் கண்கள். வழுக்கைத் தலே. அவன் வாழ்ந்து கொண்டிருக்கிற வாழ்க்கையை அப்படியே தெரிவித்து விடுகிற அழுக்கு உடைகள்.

இருபத்தைந்து வருட இடைவெளியை நீவிக் கொண்டு ஊடுருவுகிற தீட்சண்யம் சங்கரிப் பாட்டியின் கண்களில்.

''விக......'' — தேம்பலாய் வெடித்தாள்:

அவன் கீழே உட்கார்ந்து கொண்டான்;

விட்டத்தை வெறித்துப் பார்த்தான். தாயிடம் தெரிந்து கொள்ளவும், தெரிவித்துக் கொள்ளவும் எதுவும் இல்லை என்னும் மாதிரி யில் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

பெற்றவனுக்கு எவ்வளவோ கேட்க விஷ யங்கள் இருந்தன. துயரங்களின் சுமையைத் தள்ளி, 'ஓ'வென்று அழுதால் இதமாக இருக்கும்போல் கூடத் தோன்றியது. மகன் ஒரு திரையைப் போட்டுக்கொண்டு உட் கார்ந்தவுடன், தன்னுடைய ஆசைகள் எவ்வளவு அற்பமானவை என்று பொருமச் செறிந்தாள்.

''எல்லாரும் சௌக்கியம்தானுடா விசு?''

அவளைக் கூர்ந்து நோக்கினான் அவன். ''எல்லோரும்னு?''

''உன் மனைவி, குழந்தைகள்.....''

''மனைவி ஒரு நோயாளி. ஒரேயொரு பெண் குழந்தை. அதுவும் ஓடியாடித் திரி யலை. 'எல்லாரும் சௌக்கியமா'ன்னு கேட் டுட்டே. அதுக்கு நான் முழுக்கப் பதில் சொல்லி ஆகணுமே? இத்தனை வருஷமா நான் போராடிண்டிருக்கேன். என் ஆயு சோடு அந்தப் போராட்டம் முடியுமோ என்னவோ ?''

சங்கரிப் பாட்டியின் நெஞ்சை அடைத்தது. கண்கள் கலங்கின. முகத்தை எங்கேயோ திருப்பிக் கொண்டாள்.

''எம்மா, மூட்டை முடிச்சை யெல்லாம் ரெடியா கட்டி வைச்சிருக்கிறியா?''

''உன் போராட்டத்தைப் பெரிசுபடுத்தற மாதிரி என்னையும் உன் கழுத்து மேலே ஒரு சுமையா எடுத்துப் போட்டுக்கப் போறியா?''

''அவசியம்னு வந்துட்டா?''

''என்னடா விசு, அப்படிப்பட்ட அவ சியம் ?''

அவன் பேச வில்லை.

அவள் துளைத்துக் கேட்கவும் இல்லை.

''நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வரேன்; சாப்பிட்டதும் புறப்படணும்!'' என்று சொல்லி விட்டு வெளியே நடந்தான்.

கோனார் வீட்டுப் பொன்னம்மா கொஞ் சம் பசுநெய் தருவதாகச் சொல்லி இருந்தாள். அது சங்கரியின் நினைவுக்கு வந்தது. ஒரு கிண் ணத்தை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

கோனார் வீட்டுத் திண்ணையில் விசுவின் பேச்சுச் சத்தம் கேட்டது.

''எங்கள் வீட்டை எடுத்துண்டு எவ்வளவு கொடுப்பேள், கோனாரே!'' விசு கேட்கிறான்.

''ஆயிரம் கொடுக்கிறேன். ஆனா ஒரு நிபந்தனை'' என்கிறார் கோனார்.

பேச்சைக் காதில் விழுத்தாட்டிக் கொண் டிருந்த சங்கரிப் பாட்டி, வீட்டுக் கோடியி லேயே நின்று கொள்கிறாள்.

''என்ன நிபந்தனை?'' என்று கேட்கிறான் விசு.

''உன் வீட்டை நான் வாங்கிக் கொள்கிற தானா, உங்கம்மாவை நீ கூட்டிட்டுப் போயிட ணும் விசு! இல்லேன்னா, ஊர்ப் பயல்கள் என்னைத் தூத்துவானுங்க. உங்க அம்மா வந்து என் கால் கையைப் பிடிச்சாங்கன்னு, உங்கிட்டே ஆயிர ரூபாயைக் கொடுத்திட்டு நான் ஏமாந்து போய் நிக்கணும்....'' என் கிறார் கோனார்.

''உங்களைப் போலத்தான் கோனாரே, அந்தக் கொழும்பு மேஸ்திரியும் சொன்னான்: அதனாலேதான் எங்கம்மாவை நான் இன் னிக்குக் கையோடு கூட்டிண்டு போயிடப் போறேன். நாலாவது நாளன்னிக்கு வரு வேன். யாரு முன்னாலே பணம் கொடுக் கிறேளோ, அவாளுக்குத்தான் வீடு!''

அதற்குக் கோனார் என்ன சொன்னார் என்பது வீட்டை நோக்கி வேகமாக நடந்து போய்க் கொண்டிருந்த சங்கரிப் பாட்டிக்குத் தெரியாது.

கூடத்தில் மண்ணுளிப் பாம்பைப் போல உடலைப் போட்டுப் புரட்டிக் கொண்டிருந்த விசு எழுந்து உட்கார்ந்தான்.

எத்தனையோ வருஷப் புகையில் முகம் மறையக் காட்சி அளித்துக் கொண்டிருந்த புவனேசுவரியின் படத்தைக் கழற்றிக் கொண் டிருந்தாள் சங்கரி.

''மூட்டை முடிச்சை யெல்லாம் கட்டிட் டியா அம்மா?''

''ஆயிடுத்து !''

''புறப்படலாமா?''

''புறப்படலாமே?. இனிமே இங்கே நிமிஷ நேரம் தங்க முடியுமோ?'' என்று கரகரத்த குரலில் கேட்ட சங்கரி, மூலையில் இருந்த மூட்டையை எடுத்துக் கொண்டாள்.

''போயிட்டு வரேண்டா.''

திடுக்குற்றான் விசு. ''நீ போறயா?''

''ஆமாண்டா. நான்தான் போறேன்.''

விசு அவளை வியப்புடன் பார்த்தான்.

''நீ கஷ்டப்பட்டிண்டிருக்கப்போ, நான் மட்டும் இந்த வீட்டிலே கால் நீட்டி மடக்கி சுகமா வாசம் செய்துண்டிருக்கணுமா? உன் கஷ்டத்துக்கில்லாத வீடு எனக்கு மட்டும் எதுக்குடா?'' என்று கூறி விட்டுத் தளர்ந்து நடந்தாள் சங்கரிப் பாட்டி.

அரவத்தைக் கேட்டு, ''யாரு?'' என்று கேட்டாள் திரிபுரி.

''நான்தாண்டியம்மா சங்கரி வந்திருக் கேன்! இனிமே உன் காலடியிலே கொஞ்ச இடத்தை நான் சாகிற வரைக்கும் கொடுப்பி யாடி திரிபுரி?'' என்று தழுதழுத்தாள் சங்கரிப் பாட்டி.

''என்னடி, அப்படி?''

''அப்படித்தான்! நான் இருபத்தஞ்சு வருஷமா பிரமையைப் பிள்ளைன்னு நினைச்சு ஏமாந்துட்டேன். ரெண்டு கண்ணையும், அகலமா விரிச்சிண்டு அலைஞ்ச எனக்கு, அது இன்னிக்குத்தான் புரிஞ்சது. பிறப்பிலேயே இரண்டு கண்ணையும் பறிகொடுத்துட்டு இரு ளோடு வாழற உனக்கு மட்டும் இது எப்படி யடி முன்னமேயே புரிஞ்சது?''

பெரிய விளக்கங்களுக்குப் புரியும்படி யான பாஷை ஏது? திரிபுரிக்குப் பாஷை முக்கியமல்ல. பரிவு முக்கியம். தேடித் தேடிச் சங்கரியின் கண்களைத் துடைத்து விட்டாள்.

சங்கரிப் பாட்டிக்கும் அவளுக்கும் புளிப் பில்தானே ஆழ்ந்த நட்பு மலர்ந்தது? மலர்ந்த நட்பு விலகி விடவில்லை. சங்கரிக்கு ஒளியில் புளிப்பு. திரிபுரிக்கு இருளில் புளிப்பு.

எண்ணெய்க் கிண்ணம்

காண்டேகர்

அவன் ஒரு சாதாரண மனிதன். சிறு பிராயத்தில் அவன் ஒரு துறவியைத் தரிசிக்க நேர்ந்த பொழுது அவர், "என்றைக்காவது ஒரு நாள் நள்ளிரவில் யாசகன் ஒருவன் உன்னிடம் வருவான். அவன் கேட்பதை நீ கொடுத்தால், ஆண்டவன் உன்னிடம் மகிழ்ந்து உலகத்தின் சுகங்கள் அனைத்தையும் உனக்கு நல்குவார்!" என்று கூறிச் சென்றார்.

'உலகத்துச் சுகங்கள் அனைத்தையும் உனக்கு நல்குவார்' என்று சொன்னால் அதைப் பெற யாருக்குமே ஆசை எழுவது இயல்பு தானே? அவனோ சாதாரண மனிதன். அவன் படும் ஆசைகள் எல்லாம் சிரமமின்றிச் கனவுத்தில் நிறைவேறிவிடக் கூடியவையா? அப்படியிருந்தால்தான் இந்த உலகத்தைச் சொர்க்கமென்று கூறிவிடலாமே! அவனுக்கு வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்கள் தீர்ந்தாலே, அவை உலகத்துச் சுகங்களுக்குச் சமமாயிற்றே!

ஆசை வெட்கமறியாது என்பார்கள். துறவியின் பேச்சைக் கேட்டபின் அவன் ஆசை தூண்டடது. துறவியின் சொற்படி அதிசயம் நிகழ்ந்தால் ஆச்சரியமில்லை. இந்த உலகத்தில் எத்தனை எத்தனையோ அதிசயங்கள் நிகழ்கின்றன. அப்படியிருக்கும் பொழுது, அவர் சொற்படி அற்புதங்கள் நிகழ்ந்து நமக்கு விமோசனம் ஏற்பட்டால் கசக்கிறதா? இப்படி எளியவனுக்குத் துறவியின் பேச்சில் பூர்ண நம்பிக்கை ஏற்பட்டு விட்டது.

அவரது வார்த்தைகளை நம்பி, அவன் அன்று முதல் இனமும் நள்ளிரவுக்கு இரண்டு நாழிகை இருக்கும் பொழுதே விழித் தெழுந்து காதுகளைத் தீட்டிக் கொண்டு உட்காருவான். வாசலில் யாராவது யாசகர்கள் வருகிறார்களா என்று பார்ப்பான். துறவி குறிப்பிட்ட நேரம் கழிந்ததும், நம்பிக்கை இழந்து படுக்கையில் படுத்துத் தூங்கி விடுவான். இது போல் ஆண்டுகளுக்கு மேல் ஆண்டுகள் சென்றன. அவனை நாடித் துறவி குறிப்பிட்டபடி யாசகன் எவனுமே வரவில்லை.

துறவியின் பேச்சில் அவனுக்கு வர வர நம்பிக்கை குறைந்து விட்டது. அந்த வேளையிலேதான் ஒரு நாள், துறவி கூறியதுபோல் நிசமாகவே, நள்ளிரவு வேளையில் அவன் வீட்டு வாசற் கதவை யாரோ தடதடவென்று தட்டினார்கள். அதோடு கடுமையான குரலில், "எனக்கு எண்ணெய் வேண்டும். உன்னிடம் இருக்கும் எண்ணெய் அவ்வளவையும் கொண்டு வா!" என்றும் கூவினார்கள்.

அவன் எண்ணெய் எடுத்து வருவதற்காக உள்ளே சென்றான். அதற்குள் மீண்டும் யாரோ கதவை இடித்தார்கள். இத் தடவை வந்த குரல் குழுமையாக இருந்தது. "எனக்கு எண்ணெய் வேண்டும். உன்னிடம் இருக்கும் எண்ணெய் அவ்வளவையும் எனக்குக் கொண்டு வந்து கொடு!" என்றது.

அவன் விரைந்து உள்ளே சென்றான். எண்ணெய்ப் பாத்திரங்கள் அனைத்தையும் பார்த்தான். ஒரு சின்னக் கிண்ணம்கூட நிறையவில்லை. அதை எடுத்துக் கொண்டு அவன் வாசற் கதவைத் திறந்தான்.

முதலில் கதவு தட்டியவன் அதே கொடுங் குரலில், "ஊற்று. உன் கையில் இருக்கும் எண்ணெயை யெல்லாம் ஊற்று!" என்றான்.

"எங்கே?"

"என் தலைக் காயங்களின் மேல். இதையெல்லாம் தெரிந்து கொண்டு உனக்கு என்ன ஆக வேண்டும்? என் பெயர் அசுவத்தாமா. பாண்டவர்களது கூடாரத்தினுள் இரவு நுழைந்து நான் அவர்களது குழந்தைகளைக் கொன்றேன். நான் அவர்களை அப்படிப் பழி வாங்க வேண்டியிருந்தது. பழி வாங்கி நான் என் சினத்தைத் தீர்த்துக் கொண்டேன். ஆனால் அது முதல் சீழ்ப்பிடித்துக் குத்தி வலிக்கும் இந்தக் காயங்களின் வேதனையைப் பொறுத்துக் கொள்ளும் படியிருக்கிறது. இந்த வேதனையைச் சற்று மட்டுப்படுத்திக் கொள்வதற்காகத்தான் நான் வீடு வீடாகச் சென்று எண்ணெய்ப் பிச்சைக் கேட்கிறேன்."

எண்ணெய் கேட்டு வந்த இரண்டாவது மனிதன், "துவேஷம் பாராட்டுவதால் யாருக்காவது நன்மை ஏற்பட்டிருக்கிறதா?" என்று கேட்டுவிட்டுக் கையில் எண்ணெயுடன் நிற்கும் மனிதனைப் பார்த்துக் கூறினான்:

"என் கைகளில் அகல் விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. இருளில் செல்லும் மனிதர்களுக்கு நான் இதைக் கொண்டு வெளிச்சம் காட்டுகிறேன். ஊற்று. உன் கையில் இருக்கும் எண்ணெயை இந்த விளக்கில் ஊற்று."

இரண்டாவது மனிதனின் கருணை உள்ளத்திலிருந்து வடியும் இரக்கத்தைக் கண்டு சாதாரண மனிதன் நெக்குருகிப் போனான். "ஆமாம், உங்கள் பெயர் என்னவோ?" என்று பவ்யமாகக் கேட்டான்.

"கௌதம புத்தன்!"

இந்தப் பெயரைக் கேட்டதும் அவன் கையிலிருந்த எண்ணெய்க் கிண்ணம் நழுவிக் கீழே விழுந்து விட்டது. அதிலிருந்த எண்ணெயும் தரையில் நாலாபுறமும் சிதறி விட்டது.

சிறிது நேரத்துக்குப் பின் அவன் தலை நிமிர்ந்து பார்த்தான். வாசலில் அவன் தன்னந் தனியனாகத்தான் நின்று கொண்டிருந்தான். நள்ளிரவில் வந்து கதவைத் தட்டித் தன்னைத் தூக்கத்திலிருந்து எழுப்பிய இருவரையுமே காணோம். வானத்தில் மிதந்த சந்திரன் அவனைப் பார்த்துக் கண் சிமிட்டினான். —ரா. வீ.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

ஸிர்ஸில்க்
டபெட்டா, ஸாடின்,
கிரேப்,
சாதா & பிரிண்டட்
ஸிர்ஸில்க் லிட்.
ஸிர்பூர்,
காகஸ்நகர், ஆந்திரப் பிரதேசம்
தென் இந்தியாவுக்கு ஸப் ஏஜண்டுகள் :
ஹிந்துஸ்தான் டீலர்ஸ் லிமிடெட்
கெம்பகௌடா ரோடு, பெங்களூர் - 9
4, ஸ்டிரிங்கர் தெரு, சென்னை - 1
ஹைதராபாத்துக்கு ஸப் ஏஜண்டுகள்
ரங்டா & கம்பெனி
நாஜ் பில்டிங்
பத்தர்கட்டி, ஹைதராபாத்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon